ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மே 6, 2004 | புரட்சி 3 | முழக்கம் 17 | விலை : ரூ.2.50

## சென்னை மாவட்டக் கழகத்தின் தூண் சாய்ந்தது

# துரோகக் கும்பலின் கொலை வெறிக்கு பலியானார், தோழர் பத்ரி!

## பல்லாயிரக்கணக்கில் மக்கள் கண்ணீர் அஞ்சலி!

“தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின்” சென்னை மாவட்டத் தூணாக விளங்கியவரும், சீரிய பெரியாரியல்வாதியும், கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினருமான தோழர் பத்ரி நாராயணன் (பத்ரி), துரோகிகளின் கொலை வெறிக்குப் பலியாகிவிட்டார் என்ற தாங்க முடியாத துயரச் செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

ஏப்ரல் 30-ம் தேதி மாலை கழகத் தோழர் சு.பிரகாஷ்-ஏ. சுமதி ஆகியோரது வாழ்க்கை ஒப்பந்த வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்க, தோழர் பத்ரி நாராயணன், மற்றொரு கழகத் தோழர் குமரனோடு, மாலை 6 மணியளவில் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுச் சென்றார். புறப்பட்ட சில நிமிடங்களில் - ராயப்பேட்டையில் குடியிருப்புகள் நிறைந்த ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத சிறிராம் நகர் முதலாவது தெரு வழியாக சென்று கொண்டிருந்தபோது பயங்கர ஆயுதங்களுடன் பதுங்கி இருந்து துரோகிகள், வழிமறித்து, பத்ரியை வெட்டிச் சாய்த்தனர். மோட்டர் சைக்கிளில் பத்ரியுடன் வந்து கெண்டிருந்த தோழர் குமரனை அடித்து விரட்டிவிட்டு, இந்தக் கோரப் படுகொலையை செய்து முடித்துவிட்டனர். கொலைகாரர்கள் - தோழர் பத்ரியின் முகத்திலேயே வெட்டி, முகத்தை உருக் குலைத்து விட்டனர். இந்தச் செய்தி பரவியவுடன், ராயப்பேட்டை பகுதி முழுதும் அதிர்ச்சி அடைந்தது. பெரியார் இயக்கச் செயல்பாடுகளுடன், சாமான்ய மக்களின் பிரச்சினைகளை யெல்லாம் தனது தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு தொண்டு செய்த, பத்ரியின் மரணம் - ஏழை எளிய சாமானிய மக்களை உலுக்கிவிட்டது.

கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, கடந்த 26-ந் தேதி யிலிருந்து சென்னையில் தங்கி, கழக பொதுக் கூட்டங்களில் பங்கேற்று வந்தார். சம்பவம் நடந்த 30ம் தேதி காலையில், வட சென்னைப் பகுதிகளில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை முடித்துக் கொண்டு மாலை தியாகராயர் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, கழகக் கூட்டத்தில் பங்கேற்க வந்த போது, இந்த அதிர்ச்சித் தகவல் கிட்டியது. தியாகராயர் நகர் கூட்டம் உடனடியாக முடிக்கப் பட்டது. கழகத் தோழர்கள் ராயப்பேட்டை விரைந்தனர். பத்ரியின் உடல், பிரேத பரிசோதனைக் காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டது. மருத்துவமனையில் பெரும் கூட்டம் கூடி விட்டது. அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றனர்.



சம்பவத்தை நேரில் பார்த்த - பத்ரியுடன் சென்ற தோழர் குமரன், ராயப் பேட்டை காவல் நிலையத்தில் புகார் செய்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஆட்சிக் குழு உறுப்பினர் ஆனூர் ஜெகதீசன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர்கள் இளங்கோ, குமரதேவன் மற்றும் கழகத் தோழர்கள் காவல் நிலையம் வந்தனர். காவல்துறை அதிகாரிகளிடம் பேசினர். தோழர் குமரன் காவல்துறையிடம் கொடுத்த புகாரில், பத்ரியை படு கொலை செய்த கும்பலில் வீரா, வேலு, டில்லி, வெங்கட் என்ற நான்கு பேரும் அடையாளம் தெரியாத 6 பேரும் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். சுமார் 6 மாத காலத்துக்கு முன்பு, சென்னையில் கழக அலுவலகத்தில் நடந்த மாவட்டக் கமிட்டிக் கூட்டத்துக்கு, ஓராண்டு காலமாக எந்த நிகழ்ச்சிக்கும் வராத பாலகுரு - திடீரென்று வந்து, தான் கொலை வெறியுடன் இருப்பதாகவும், எதுவும் நடக்கலாம் என்றும், தீர்த்துக் கட்டாமல் விடமாட்டேன் என்றும் பேசினார். அப்போது பத்ரி குறுக்கிட்டார். மேலும் பிரச்சினை அதிகமாகி விடுமோ என்று கருதி, தலைவர்கள், கூட்டத்தைக் கலைத்து விட்டு, அனைவரையும் வெளியேறும்படி செய்து விட்டனர். அதனால் பாலகுருவும்,

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

### தோழர் பத்ரி நாராயணனின் படத் திறப்பு நிகழ்ச்சி

தந்தை பெரியார் திராவிடர் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் பத்ரி நாராயணன் படத் திறப்பு நிகழ்ச்சி

16.5.2004 காலை 10 மணியளவில் ராயப்பேட்டை சைவ முத்தையா வீதியில் உள்ள தலைமைக் கழக அலுவலகம் அருகே நடக்கிறது. கழகத் தலைவர்கள், அனைத்துக் கட்சி இயக்கத்தினர் இரங்கல் உரையாற்றுகிறார்கள். அனைவரும் வருக!

**தந்தை பெரியார் திராவிடர் கழகம்**

## ஆரவாரமில்லாத அருந்துணையை இழந்துவிட்டோம்

கழக தோழர்களுக்கு,

வணக்கம். நமது தோழர், கழகத்தின் தலைமை ஆட்சிக் குழு உறுப்பினர் தோழர் செ.பத்ரி நாராயணன் இன்று நம்மிடையே இல்லை. திராவிடர் கழகத்தில் மாவட்ட இணை செயலாளராக, பெரியார் திராவிடர் கழகத்தில் மாவட்ட செயலாளராக, தந்தை பெரியார் திராவிடர் கழகம் தொடங்கியபின் தலைமை ஆட்சிக் குழு உறுப்பினராக பணியாற்றி, பெரியாரியலைப் பரப்ப, குறிப்பாக இராயப்பேட்டையையே கழகக் கோட்டையாக மாற்றிக் காட்டி உழைத்தவர்.

கழகத்தின் தலைமைக் கழக அலுவலக கட்டிடத்திற்கு தனியொருவராகவே இருந்து நிதி திரட்டிக் கொடுத்தது; த.பெ.தி.க. தொடக்க விழா மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியது; இராயப்பேட்டையில் ஆண்டுதோறும் எல்லா அரசியல் கட்சிகளையும் ஒருங்கிணைத்து பொங்கல் விழாவை அப்பகுதியின் பொதுவிழாவாக நடத்தியது; பெரியார் முழக்கம் தொடங்கிய போது தன் பொறுப்பில் ரூ.25,000 திரட்டிக் கொடுத்து ஊக்குவித்தது, இராயப்பேட்டை பகுதியில் சமூக சிந்தனையற்ற, ஏன் - சில வேளையில் சமூக விரோத சிந்தனைகளில் சிக்கிக் கிடந்த இளைஞர்களை தன் அன்பார்ந்த, அறிவார்ந்த, நட்பு முறையான வழிகாட்டுதல்கள் வழியாக இயக்கவாதிகளாக மாற்றியது என அவர் சாதனைகள் ஏராளம். ஆனால் இப்படிப்பட்ட ஆழமான, பக்குவப்பட்ட, முழுமையான ஓர் பெரியாரியல்வாதியான, செயல்வீரரான அவர் செயல்பாடுகள் அடுத்தப் பகுதியினருக்குக்கூட அதிகம் தெரியாத அளவுக்கு விளம்பர வெளிச்சத்தை விரும்பாதவைகளாகவே இருந்தன. அத்தகைய அடக்க உணர்வாளர் அவர். அப்பகுதியில் உள்ள எல்லா அரசியல் கட்சி யினரும் தங்களுக்கிடையில் உள்ள பிரச்சினையைகூட இவர் வழியே பேசி முடிக்கும் அளவுக்கு செல்வாக்கு பெற்றவராக இருந்தாலும், தன் குடும்பத்துக்கென சொந்த வீடோ, சேமிப்போ எதையும் சேர்த்து வைக்காத, ‘ஏமாளி’. தொழில் செய்து ஏதேனும் வருமானம் வந்தாலும் இயக்கப் பணிக்கு அதை செலவழித்து விட்ட ‘ஊதாரி’. தன்னோடு இருந்தவர்களே, தான் ஏற்ற கொள்கை களோடு இருந்தவர்களே தன் உயிருக்கு உலை வைப்பார்கள் என்று சிறிதும் நம்பாத, யார் கூறினாலும் ஏற்காமல் இருந்த ‘ஏமாளி’. அவர் இன்று நம்மிடையே இல்லை. அநியாயமாக நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டார்.

குடும்பத் தலைவர் இல்லாத அவர் குடும்பம், வழிகாட்டி இல்லாத கழகத் தோழர்கள், ஆரவாரமில்லாத அருந்துணையை இழந்துவிட்ட கழகம்; என எல்லோருக்கும் இம்மறைவு இழப்பினை ஏற்படுத்தியுள்ளது.

**இவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் அவர் உயிருக்கு மட்டும் குறிவைக்கப் பட்டதல்ல; அதற்கு மேலும் இதற்கு வேறு பின்னணிகளும், உள் நோக்கமும் உள்ளதாகவே நாம் கருதுகிறோம்.**

எது எப்படியானாலும் குற்றத்துக்குரிய அனைவர் மீதும் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதிலும், அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தருவதிலும் கழகமும், குறிப்பாக கழக வழக்கறிஞர்களும் தொடர்ந்து கண்காணித்து வருவார்கள். அதே சமயம் கழகமும் தன் கொள்கைப் பணிகளைத் தொய்வின்று தொடர்ந்து தளர்ச்சியின்றி எடுத்துச் செல்லும். அதுதான் தோழர் பத்ரி அவர்களின் பணிக்கு நாம் காட்டும் உரிய மரியாதையாகும்.

துரோக நடவடிக்கைகளால் கழகப் பணிகளைக் குலைக்க முடியாது என்பதையும், கழகம் என்றும் பெரியார் அடையாளம் காட்டிய தமிழின எதிரிகளையும் அவர்கள் செயல்பாடுகளையும் தகர்ப்பதிலேயே முனைப்பு காட்டி செயல்படும் என்பதையும் அனைவரும் புலப்படுத்துங்கள்.

நமக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட முடியும்; ஆனால் அவர் குடும்பத்தாருக்கு ஏற்பட்டுள்ள இழப்பு ஈடுகட்ட முடியாதது ஆகும். காலம் தான் அவர்களுக்கு ஆறுதலைக் கொடுக்க முடியும். கழகக் குடும்பத்தின் துயரத்தை நாம் பகிர்ந்துக் கொள்வோம்.

**தோழமையுடன் த.செ. மணி, தலைவர் , த.பெ.தி.க.**

தலையங்கம்

# நீதித் துறையும் – ஜெயலலிதாவும்

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ. மீதும், அவரது கட்சியின் எட்டு பேர் மீதும் ஜெயலலிதா ஆட்சி, பொடா வின் கீழ் வழக்குத் தொடர அடிப்படை முகாந்திரம் எதுவு மில்லை என்று, பொடா மறு ஆய்வுக்குழு அறிவித்திருந்தது; பொடா மறு ஆய்வுக்குழுவுக்கு, இந்த உரிமையை வாஜ்பாய் ஆட்சி சட்டத்திருத்தத்தின் மூலம் வழங்கியுள்ளது. இதற்குப் பிறகும், வழக்கைத் திரும்பப் பெற முடியாது என்றும், மறு ஆய்வுக் குழுவின் முடிவு மாநில அரசைக் கட்டுப்படுத்தாது என்றும் ஜெயலலிதா ஆட்சி கூறியது. வழக்கைத் திரும்பப் பெற மறுத்து வந்த ஜெயலலிதா ஆட்சியை எதிர்த்து வை.கோ. உயர்நீதிமன்றத்தில் வழங்கு தொடர்ந்தார். மறு ஆய்வுக் குழுவின் ஆணையை ரத்து செய்யுமாறு, உயர்நீதி மன்றத்தில், தமிழக அரசு ரிட் மனு தாக்கல் செய்தது. ஆனால் உயர்நீதிமன்றம், இந்த ரிட் மனுவைத் தள்ளுபடி செய்து, மறு ஆய்வுக் குழுவின் முடிவுக்கு தமிழக அரசு கட்டுப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்துவிட்டது. இதே போல் மகாராஷ்டிராவில் வெடிகுண்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த ஒருவர் மீதான வழக்கை திரும்பப் பெற வேண்டும் என்று, மறு ஆய்வுக்குழு கூறியது. அவர் மீது பொடாவின் கீழ், முகாந்திரமின்றி வழக்கு தொடரப்பட் டுள்ளது என்று ஆய்வுக்குழு கூறியது. உடனே மகாராஷ் டிரா அரசு, வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. ஆனால் ஜெயலலிதா ஆட்சி, வழக்கம் போல், தனது பிடிவாதத்தைக் காட்டி வருகிறது.

ஜெயலலிதாவின் – நீதிமன்ற அணுகுமுறைகள் எப்போ தும் தடாலடியாகவே இருந்து வந்திருக்கின்றன. மத்திய சென்னை தொகுதி அ.தி.மு.க. வேட்பாளராக நிறுத்தப்பட் டுள்ள பாலகங்கா என்பவர் மீது, பொதுச்சொத்துக்களை நாசப்படுத்தியதாக 2 கிரிமினல் வழக்குகள் இருக்கின்றன. இவரை வேட்பாளராக அறிவித்த ஜெயலலிதா, அண்மை யில், இந்த கிரிமினல் வழக்குகளைத் திரும்பப் பெற உத்தர விட்டுள்ளார். இதை எதிர்த்து, தேர்தல் ஆணையத்திடம், தி.மு.க. புகார் தந்துள்ளது. பொடா சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்ட பிறகு, மறு ஆய்வுக் குழுவுக்கு, திரும்பப் பெறும் அதிகாரத்தை வழங்குவது, நீதித் துறையில் தலையீடு செய்வதாகும் என்று ஜெயலலிதா கூறுகிறார். காவல்துறை ஒருவர் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்து, அது நீதி மன்ற விசாரணைக்கு வந்த பிறகு, அரசு திரும்பப் பெறுவதும், ஜெயலலிதா வாதப்படி, நீதித்துறையில் தலையிடுவது தானே?

அ.இ.அ.தி.மு.கவைச் சார்ந்த ஆதிராஜாராம் என்பவர் மீது, கிரிமினல் வழக்குகள் விசாரணையில் இருக்கும் போதே, அவரை மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு, விண்ணப்பிக்கச் செய்தார் ஜெயலலிதா. கடும் எதிர்ப்புகள் வந்த பிறகு தான், அவரது விண்ணப்ப மனு திரும்பப் பெறப்பட்டது.

இரண்டாண்டுகளுக்கு மேல் கிரிமினல் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்று மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் தெளிவாகக் கூறுகிறது. அதைப் பற்றிக் கவலைப்படாமல் ஜெயலலிதா வேட்பு மனு தாக்கல் செய்தார். விதிப்படி, மனுக்கள் நிராகரிக்கப்பட்டவுடன், தன்னை வேண்டு மென்றே தடுத்து விட்டார்கள் என்று பிரச்சாரம் செய்தார். தேர்தலில் தனது கட்சி வெற்றி பெற்றவுடன், தேர்தலிலே போட்டியிடும் உரிமை மறுக்கப்பட்ட அவர், சட்டமன்றக் கட்சித் தலைவராகி, முதல்வராகவும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். சட்ட விரோதமாக, அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்த ஆளுநர் பாத்திமா பீவி, அதனால் பதவி இழக்க நேர்ந்தது.

எதிர்க்கட்சியினரை ஒடுக்குவதற்கு சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதற்கும், அதே நேரத்தில், தனக்கு சாதகமாக சட்டத்தை முறைகேடாக வளைப்பதற்கும் எந்தத் தயக்கமும் காட்டாத முதல்வராகவே ஜெயலலிதா செயல்படுகிறார். இதற்காக – நீதிமன்றங்களால், கடும் கண்டனத்துக்கு உள்ளானாலும், அதைப் பற்றி எல்லாம் அவர் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. பொடா சட்டமே ஒரு கொடுங்கோன்மை சட்டம். முறைகேடாகப் பயன்படுத்தும் வாய்ப்புகளை தாராளமாக வழங்கும் சட்டம். அந்த சட்டத்தையே முறைகேடாகப் பயன்படுத்தும் வல்லமை பெற்றவராகத் திகழும் தமிழக முதல்வர், வீண் பிடிவாதங்களுக்காக, மக்கள் வரிப்பணத்தை, வல்லடி வம்புகளுக்காக விரயமாக்கிக் கொண்டு வருவது வன்மை யான கண்டனத்துக்கு உரியது. ஒரு ஜனநாயக அமைப்புக் குள், முழுமையான 'சர்வாதிகாரத்தை' அரங்கேற்றிக் கொண்டிருக்கும், இந்த ஆதிக்க வெறிப்போக்குக்கு மக்கள், சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும்!

# 'சோனியா அன்னியர்' வாதம் – மக்கள் மன்றத்தில் எடுபடவில்லை

**ஆங்கில நாளேடு கட்டுரை**

இத்தாலியில் பிறந்த சோனியா - இந்தியாவிற்கு பிரதமர் ஆகலாமா என்று, பா.ஜ.க.வும், ஜெயலலிதா வும் முன் வைக்கும் வாதம், மக்கள் மன்றத்தில் எடுபட வில்லை என்று 'இந்து' பத்திரிகை கட்டுரை வெளியிட் டுள்ளது.

'இந்து' பத்திரிகையில் (ஏப்.30) நீனா வியாஸ் என்ற அதன் செய்தியாளர், சிறப்புக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டுள்ள தாவது:

முதல் கட்ட வாக்குப் பதிவுக்கு இரு நாட்களுக்கு முன் வாஜ்பாய் ஏப்.24ம் தேதி, 'சோனியா ஒரு அன்னியர்' என்பது, மிக முக்கியப் பிரச்சினை என்றார். யு.என்.அய். செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில், பா.ஜ.க.வும், அதன் கூட்டணி கட்சிகளும், இந்தப் பிரச்சினையை எழுப்புவது நியாயம் தான் என்றார். வெளிநாட்டில் பிறந்தவர்கள், இந்தியாவில் உயர் பதவி வகிப்பதைத் தடை செய்து சட்டம் கொண்டு வரப் போவதாகவும், தேசிய ஜனநாயக முன்னணி கூறியது. அதாவது சோனியா வெற்றி பெற்று விட்டால், அவரது நாடாளுமன்ற உறுப் பினர் பதவியையும் செல்லாமல் ஆக்கி விடுவோம் என்று கூறினார்கள். வாஜ் பாய், வெங்கய்யா நாயுடு, மோடி, ஜெயலலிதா ஆகி யோர், தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில், இப்பிரச் சினையைத் தொடர்ந்து எழுப்பினர். சோனியாவின் மகள் பிரியங்கா, மகன் ராகுல் ஆகியோரும் பதவிக்கு வர முடியாது என்றும்,பெற்றோர்கள் நூறு சதவீத இந்தியர்களாக இருக்க வேண்டும் என்றும் பா.ஜ.க. பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜன் பேசினார். ஆனால் இந்த வாதம் மக்களிடம் எடுபடவில்லை.

உ.பி.யில் சோனியாவின் படத்தோடு, அவரது கருத்துகள் சுவரொட்டிகளாக ஒட்டப்பட்டன. "இந்திய சம்பிரதாயத்தில் நான் எதை மீறியிருக்கிறேன் ? ஒரு மருமகளாக, ஒருமனைவியாக, ஒரு விதவையாக, ஏன், ஒரு காங்கிரஸ் ஊழியராக வாழ்வதில் - எந்த மரபை நான் மீறி இருக்கிறேன் ? இந்திய மரியாதை மரபுகளை நான் புறக்கணித்தேனா ?" என்று சோனியா கூறும் சுவரொட்டிகள், உ.பி. முழுதும் ஒட்டப்பட்டுள்ளன. சோனியா காந்தியின் பல்வேறு தோற்றங்களைக் கொண்ட புகைப்படங்களுடன் ஒட்டப்பட்டுள்ள இந்த சுவரொட்டிகள் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன.

பா.ஜ.க.வினர் - இது பற்றி ஒரு குறும் படத்தைத் தயாரித்து, ஒளிபரப்பி வருகின்றனர். 'நாம் அன்னி யரை எதிர்த்துக் கடுமையாகப் போராடி சுதந்திரம் பெற்றது - ஒரு அன்னியரை அதிகாரத்தில் அமர்த்து வதற்காகவா, என்ற கேள்வியோடு தயாரிக்கப் பட்டுள்ள அப்படத்தில் ஜாலியன்வாலாபாக்கில் நடந்த படுகொலைகள் காட்டப்பட்டுள்ளன. சோனியாவை, ஜெனரல் டயருடன் ஒப்பிட்டு, அந்தப் படம் தயாரிக்கப் பட்டுள்ளது. இவ்வளவுக்கும் பிறகு, வாக்கெடுப்பு முடிந்த பிறகு நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் - இந்த அன்னியர் பிரச்னைக்கு மக்கள் முக்கியத்துவம் தரவில்லை என்றே தெரியவந்துள்ளது. மக்கள், அடிப்படை பிரச்சினைகளை முன் வைத்தே வாக்கு களை அளித்துள்ளனர். வெளிநாட்டில் பிறந்தவர்கள் - அமெரிக்காவில் தேர்தலில் போட்டியிட முடியாது என்று பா.ஜ.க.வினர் அமெரிக்க சட்டத்தை சுட்டிக் காட்டுகின்றனர். இப்படி அமெரிக்கச் சட்டத்தை முன் மாதிரியாக ஏற்றுக் கொண்டால், வாஜ்பாயே, தேர்தலில் போட்டியிட முடியாது. அமெரிக்க சட்டப்படி, மூன்றாவது முறையாக ஒருவர் அதிபர் பதவிக்கு போட்டியிடக் கூடாது. இதை பா.ஜ.க. ஏற்குமா ?" என்று கேட்கிறார். முன்னாள் நிதியமைச்சர் மன்மோகன் சிங். இந்தப் பிரச்சினையைப் புறக் கணிக்கும் ஒரு இளம் பெண் தொழிலதிபர் கூறுகிறார்: "எங்கள் பகுதியில் ஒவ்வொரு வீட்டிலும், வெளிநாட்டுக்கு வேலைக்குப் போய், அங்கேயே குடியுரிமை பெற்றவர்கள் இருக்கிறார்கள்; பலர் அமெரிக்கா வில் குடி உரிமை பெற தீவிரமாக முயன்று கொண்டிருக்கிறார்கள். எனவே அன்னியர் பிரச்சினை எங்களுக்கு உடன்பாடானது அல்ல" என்கிறார் அவர்.

"ஒரு பெண்ணுக்கு எப்போதுமே சொந்தமான சாதி கிடையாது. அப்பாவின் சாதியைத்தான் பெண் ஏற்க வேண்டியிருக்கிறது. திருமணமான பிறகு, கணவனின் சாதியை ஏற்க வேண்டியிருக்கிறது. எனவே திருமணத்திற்குப் பிறகு ஒரு பெண்ணுக்கு அன்னியர் என்ற பிரச்சினைக்கே இடமில்லை" என்கிறார் அமேதி மாவட்டத்தைச் சார்ந்த ஒரு பெண்.

"மருமகளாக வருகிறவர்கள் வீட்டுக்குள்ளே இருந்துதான் வரவேண்டும். வெளியிலிருந்து வரவே கூடாது என்று, புதிய சம்பிரதாயத்தை பா.ஜ.க. உருவாக்க நினைக்கிறது. இதை எப்படி ஏற்க முடியும் ?" என்று கேட்கிறார் உ.பியைச் சார்ந்த உமேஷ் மிஸ்ரா. 1990 -ல் தேர்தல் சீர்திருத்தம் பற்றி நியமிக்கப்பட்ட கோஸ்வாமி கமிட்டி, வெளிநாட்டில் பிறந்தவர்கள், இந்தியாவில் பிரதமராக வரக் கூடாது என்று சட்டத் திருத்தம் செய்ய பரிந்துரைத்தது. அந்தக் கமிட்டியில் உறுப்பினராக இருந்தவர் அத்வானி. கடந்த 15 ஆண்டுகளாக, இந்தத் திருத்தங்களுக்காக எந்த முயற்சியும் எடுக்காத அத்வானி, சோனியாவை எதிர்ப்பதற்காக, இப்போது அன்னியர் வாதத்தை முன் வைக்கிறார்" - என்று 'இந்து' ஏட்டின் கட்டுரை கூறுகிறது. ✻

# வெளிநாட்டில் பதவி வகித்த 'இந்தியர்கள்'

அன்னிய நாட்டில் பிறந்த ஒருவர் "பாரத" நாட்டின் பிரதமர் ஆகலாமா? இது ஜெயலலிதா தினமும் எழுப்பும் கேள்வி. வாஜ்பாய், அத்வானி தொடங்கி ராமகோபாலன் வரை காவிக்கும்பல் நாடு முழுவதும் அன்றாடம் எழுப்பி வரும் கேள்விகள்.

இதற்கு நேர் எதிராக ஒரு கேள்வி எழுகிறது. இந்திய நாட்டில் பிறந்த ஒருவர் வேறு ஒரு நாட்டின் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ ஆகலாமா ? இத்தகைய ஒரு கேள்வியை நாம் எழுப்பலாம். அதற்கு ஜெயலலிதாவும் மற்றவர்களும் கூடாது கூடாது என்று தானே பதில் சொல்ல வேண்டும் - சொல்வார்களா ?

- ❖ டிரினிடாட் நாட்டின் ஜனாதிபதி பாசு தேவ் பான்டே ஒரு இந்தியர்.
- ❖ மொரீஷியஸ் நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் போன்ற பதவிகளை சிவசாகர் ராம் கூலம், அனிருத்த ஜகன்னாத் போன்ற இந்தியர்கள் அலங்கரித் துள்ளனர்.
- ❖ பிரிட்டிஷ் கயானாவில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளை வகித்த ஒரு இந்தியர் மறைந்த செட்டி ஜகன்.
- ❖ ஜமைக்கா நாட்டின் துணை ஜனாதிபதி பதவி வகித்தவர் டேனிசன் புத்து என்ற இந்தியர்.
- ❖ பிஜி நாட்டின் பிரதமராக சில காலம் செயல்பட்டவர் மகேந்திர சவுத்ரி. ஜனநாயக முறையில் தேர்ந் தெடுக்கப்பட்ட இவரின் அரசை கவிழ்த்து பிஜியில் நடைபெற்ற கலகத்தைக் கண்டித்து அறிக்கை வெளியிட்ட அரசுகளில் வாஜ்பாய் அரசும் ஒன்று.
- ❖ அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில கவர்னர் பதவிக்கு பாபி ஜின்டால் என்ற இந்தியர் போட்டி யிட்டார். வேறு ஒரு நாட்டில் பிறந்த அர்னால்டு ஸ்வர்ஸ் நிகர் என்பவர் கலிபோர்னியா மாநில கவர்னராக வெற்றி பெற்றார்.

இந்தியாவில் பிறந்த ஒருவர் அல்லது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் வேறு ஒரு நாட்டின் உயர் பதவியை வகிக்கலாம் என்றால் இந்தியர் ஒருவரை மணந்து அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இந்தியக் குடிமகளாக அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் ஐந்தாண்டு காலம் எதிக்கட்சித் தலைவராக இருந்த ஒருவர் இந்திய பிரதமர் ஆகக் கூடாதா ? என்ற கேள்விக்கு காவிக்கும்பலும், ஜெயலலிதாவும் பதில் சொல்வதில்லை.

அத்வானி கராச்சியில் பிறந்தவர் தானே என்று கூறியதற்கு பதிலளித்த அத்வானி எங்களைப் போன்றவர்களை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் இந்தியர்களாக அங்கீகரித்துள்ளது என்று கூறி யுள்ளார். அதே அரசியல் அமைப்புச் சட்டம் தான் சோனியா காந்தியையும் இந்தியராக அங்கீகரித் துள்ளது என்பதை அத்வானி மறந்துவிட்டார். ஜெய லலிதா முன்பு வருணித்த செலக்டிவ் அம்னீசியாவில் இதுவும் சேருமோ ? ~ நன்றி: 'தீக்கதிர்'

# 'ஜெ' ஆட்சியில் நடந்த வீண் விரயம் பாரீர்!

## ஆடிட்டர் அறிக்கை தரும் தகவல்கள்

அரசுக்கு நிதி நெருக்கடி என்று காரணம்கூறி, மக்கள் நலத்திட்டங்களை ஜெயலலிதா முடக்கினார்; அரசு ஊழியர் சலுகைகள் பறிக்கப்பட்டன; ரேஷன் அரிசி விலை உயர்த்தப்பட்டது; மக்கள் நலப் பணியாளர்கள்; சாலைப் பணியாளர்களை ரத்து செய்தார் - 25,000 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்; பேருந்துக் கட்டணத்தை உயர்த்தினார்; இலவச மின்சாரத் திட்டத்தை நீக்கினார்; இதே ஜெயலலிதா ஆட்சி, அரசுப் பணத்தை எப்படி எல்லாம் வீண் விரயம் செய்தது என்பதை - தமிழக அரசின் 2001 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு கணக்குகளைத் தணிக்கை செய்த அதிகாரிகளின் தணிக்கை அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. அதைப் பாருங்கள் !

❖ சென்னை - மாமல்லபுரம் சாலை, மர்மலாங் பாலம் - இரும்புலியூர் சாலை போன்ற சில சாலைகள் தேவையின்றி அகலப்படுத்தப்பட்டதால், பொதுப் பணித் துறையில் 17.46 கோடி ரூபாய் வீண் செலவு செய்யப்பட்டுள்ளது.

❖ தூர்வாரும் பணிகளுக்கு துறையின் இயந்திரங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற அரசு ஆணையைப் புறக்கணித்து, ஒப்பந்தக்காரர்கள் மூலம் செய்ததால், பொதுப் பணித் துறையில் அரசுக்கு 1.51 கோடி ரூபாய் கையில் இருந்து வெளியேறியது.

❖ சென்னை நகரில் கேபிள் தொலைக் காட்சி இணைப்புகளின் எண்ணிக் கையை, சென்னை மாநகராட்சி கண்டறியாததால், ரூ.51.84 கோடி அளவிற்கு கேளிக்கை வரி வசூலிக்க முடிய வில்லை.

❖ போக்குவரத்துத் துறையில், பேருந்துகளுக் குத் தேவைப்படும் டயர் ரப்பர் பொருட்களை, சந்தை விலைக்குக் கூடுதலாகக் கொடுத்து வாங்கியதில் 89 இலட்ச ரூபாய் அளவிற்கு நட்டமேற்பட்டுள்ளது.

❖ ஊரகச் சாலைகள் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ள போதிலும் அதைப் பயன்படுத்தாமல், வெளிச் சந்தையில் சுமார் 133 கோடி ரூபாய் பெற்று, அதற்குத் தேவையில்லாமல் 14.37 கோடி ரூபாய் வட்டிகட்டப்பட்டுள்ளது.

❖ பொதுப் பணித்துறை, ஒப்பந்தப் புள்ளிகள் எதுவும் கோராமலேயே, வெளிச் சந்தையில் 34,179 டன் சிமெண்ட் வாங்கியதில் மட்டும் 1.26 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

❖ ஏற்கனவே முடிவடைந்துவிட்ட, ஆனால் தகுதியில்லாத பணிகளுக்காகப் பொதுப் பணித்துறை முன்னதாகவே வட்டிக்குக் கடன் வாங்கி, ரூ.5.36 கோடி ரூபாய் அளவிற்கு தவிர்த்திருக்கக் கூடிய செலவைச் செய்தது.

❖ சென்னை - சூளைமேட்டில் கூவம் நதியின் குறுக்கே மேம் பாலம் கட்டுவதிலும்; சைதாப் பேட்டை யில் சுரங்கப் பாலம் அமைப்பதிலும்; மகாகவி பாரதியார் நகர், நடுவங்கரை ஆகிய இடங்களில் பாலங்கள் அமைத்ததிலும் தேவையின்றிக் கூடுதலாக 1.64 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது.

❖ வேளாண்மைத் துறையில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அரசு நிதி 1.12 கோடி ரூபாய் மூன்று வருடங்களாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதால், ரூ.51.74 இலட்சம் வட்டி வீணாகக் கொடுக்கப் பட்டது.

பத்திரப் பதிவின் மூலம் கடந்த ஆண்டு தமிழக அரசுக்கு வந்திருக்க வேண்டிய வருமானம் 1,700 கோடி ரூபாய்; ஆனால், அந்த வருமானமோ 1200 கோடி ரூபாய் தான். மீதமுள்ள 500 கோடி ரூபாயைப் பல்வேறு மோசடிகளின் மூலம் அதிகார வர்க்கமும், பணக்காரக் கும்பலும் பங்கு போட்டுக் கொண்டுள்ளன. ஜெயாவின் ஆன்மீகக் குரு காஞ்சிமடச் சங்கராச்சாரி, பத்திரத் துறைக்குப் போட்ட நாமம் 9 இலட்ச ரூபாய் என்று கூறப்படுகிறது.

ஜெயாவின் தலைமையில் தமிழக கஜானாவை மொட்டையடித்து வரும் கும்பல், கஜானா காலியானதற்குப் பொது மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும், மானியங்களும்தான் காரணம் என வீண் பழி சுமத்துகிறது. இது நியாயம் தானா? ❋

# யாருக்கு உங்கள் ஓட்டு?

## அஇஅதிமுக - பா.ஜ.க. - கூட்டணிக்கா?

## நில்லுங்கள் - யோசியுங்கள் - ஓட்டுப் போடுங்கள்!

**இடித்தார்கள்:** பாபர் மசூதியை - பா.ஜ.க.; கண்ணகி சிலையை - அஇஅதிமுக; சீரணி அரங்கத்தை - அஇஅதிமுக; மாதா கோவில்களை - பாஜக; குஜராத் ராஜஸ்தானில்; ராணி மேரிக் கல்லூரி தப்பியது; கோட்டூர்புரம் கட்டிடங்கள் இடிபடும் நிலை.

**அடித்தார்கள்:** சேஷனை - அஇஅதிமுக; ப.சிரம்பரத்தை - அஇஅதிமுக; வக்கீல் விசயனை - அஇஅதிமுக; கி.வீரமணியை - அஇஅதிமுக (மம்சாபுரம் - 1980); பண்ருட்டி ராமச்சந்திரனை - சட்டமன்றத்தில்; மணி சங்கர அய்யரை இன்னும் பலர் - பழைய செய்தித்தாளகளைப் பாருங்கள்.

**கெடுத்தார்கள்:** படிப்பாளி இளைஞர்களை சாராயம் விற்கச் சொல்லி.

**கொன்றார்கள்:** 2000 முஸ்லீம்களை - குஜராத்தில் - பா.ஜ.க.; பம்பாய்-கோவை- நாடு முழுதும் ஆயிரக்கணக்கான முஸ்லீம்களை - பா.ஜ.க. மசூ இடிப்பிற்குப் பின்.; மூழ்கடித்து மகாமகக் குளத்தில் 20க்கும் மேலானவர்களை 1992-ல்; லக்னோ சேலை விநியோகத்தில் - 25 பேரை - பாஜக (ஏப்ரல் 2004).

**எரித்தார்கள்:** பாதர் ஸ்டெயின்ஸை - மகன்களுடன் - பாஜக; மூன்று வேளாண் - கல்லூரி மாணவிகளை - அஇஅதிமுக; மண்டல் கமிஷன் கலவரத்தில் - பல அப்பாவி மாணவர்களை - பாஜகவினர்.

**கதி கலங்கச் செய்தார்கள்:** 40 கோடி இந்தியர்களை - தற்குறிகளாய் வைத்து - பாஜக.; 40 கோடி இந்தியர்களை வறுமை கோட்டுக்கு கீழே தள்ளி - பா.ஜ.க.; 2 கோடி காவிரிக்கரை விவசாயி / தொழிலாளிகளை பட்டினி போட்டு - அஇஅதிமுக; 1-கோடி நெவாளர்களை பரிதவிக்கவிட்டு - அஇஅதிமுக; 2 லட்சம் அரசு ஊழியர்களை டிஸ்மிஸ் பண்ணி அஇஅதிமுக.

**இருந்ததை பறித்தார்கள்:** தனியார் பள்ளி மாணவர் பஸ் பாஸ் - அஇஅதிமுக; அரசு ஊழியர்களுக்கு போனஸ் - அஇஅதிமுக; ராமாமிர்தத்தம்மையார் ஏழையர் திருமணநிதி உதவி; ரேஷன் பொருள் விநியோகத்தை - இலவச மின்சாரத்தை, உழவர் சந்தைகளை.

**பொய் சொல்லுகிறார்கள்:** 69 சதவீத இடஒதுக்கீட என்று; இருப்பது 50 சதவீதம் தான். நிதி நெருக்கடி என்று - ஊர்தோறும் ஆடம்பர அடிக்கல் நாட்டு விழா.

**சிறையில் தள்ளினார்கள் - நியாயமின்றி:** வைகோவை - 590 நாள்; பழநெடுமாறனை - 570 நாள்; சுபவீ, பரந்தாமன், சாகுல் அமீது, பாவாணன், கோபால் இன்னும் க. நெடுஞ்செழியன் - கர்நாடகா சிறையில்; அறிஞர் குணா - கர்நாடகா சிறையில் எண்ணிலா இன்னும் பலர்.

**பொய் வழக்கு போட்டார்கள்:** இளங்கோவன், கலைஞர், மீது. வைகோ, நெடுமாறன், நல்லக்கண்ணு, வரதராசன் - எஸ்மா - டெஸ்மா இன்னும் பல வழக்குகள் ஸ்டாலின், பொன்முடி, மாறன், வெற்றிகொண்டான், செரினா மீது இன்னும் பலர்.

**பத்திரிகைகளை ஒடுக்கினார்கள்:** இந்து, முரசொலி, தினகரன், நக்கீரன், துக்ளக் - சிறுபத்திரிகை யாதும் ஊரே உட்பட.

**மோசடி செய்தார்கள்:** தமிழக பார்ப்பன ஆட்சியை - ஆன்மீகம் புரட்சி என்று. கலைஞர் ஒழித்த அரசு ஊழியர் ரகசிய குறிப்பு - மீண்டும் வந்தது அரசு ஊழியர் நியமனம் நிறுத்தம். ஆரம்ப பள்ளிகள்மூடல்.

**பிராணிகளும் தப்பவில்லை:** அங்குசக்குத்தியதில் ரத்தம் சிந்தி முதுமலைக்கு யானைகள் வந்தன. நள்ளிரவில் சிறை பிடிக்கப்பட்டு பசுமாடுகள் ஏலம் போயின.

**தற்கொலை/பட்டினிச் சாவு:** அரசு ஊழியர்கள் தற்கொலை; விவசாயிகள் தற்கொலை; நெசவாளர்கள் பட்டினிச் சாவு.

**நீங்களும் :** யோசியுங்கள், நியாயத்தின் பக்கம் நில்லுங்கள்.

– சங்கமித்ரா, பெரியார் தமிழ்ப் பேரவை (26.4.04)

# லக்னோ 'இலவச சேலை' பா.ஜ.க.வினரின் அத்துமீறல்கள்

வாஜ்பாய் போட்டியிடும் லக்னோ தொகுதியில் இலவச வேட்டி சேலை பெறுவதற்கு வந்த கூட்ட நெரிசலில் 25 பேர் மரணமடைந்தது தொடர்பாக மேலும் செய்திகள் வந்துள்ளன. பா.ஜ.க. மகளிர் அணியினர், ஏழை மக்களிடம் ரூ.20 கட்டணம் வாங்கி டோக்கன் விற்றதைக் கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். விழா நடத்திய வாஜ்பாயின் அதிகாரபூர்வ பிரதிநிதியான லால்ஜிதாண்டன் மீது வழக்கு பதிவாகியுள்ளது. இப்போது மேலும் சில தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த இலவச சேலை வழங்கும் விழாவுக்கு அழைப்பு விடுத்து, பா.ஜ.க. தலைவர்கள், லக்னோ நாளேடுகளில், விளம்பரம் செய் திருந்தனர். எனவே இது பா.ஜ.க. நிகழ்ச்சி அல்ல என்று, பா.ஜ.க.வினர் கூறியது பொய் என்பது உறுதியாகிவிட்டது. பொதுவாக அரசியல் கட்சிகளுக்கு கூட்டம் சேர்க் கும் வேலையை பிரபல காண்ட்ராக்டர்களே செய்வார்கள். லக்னோவில் - மக்களைத் திரட்டும் வேலையை பிரிஜேந்திரா முராரி யாதவ் என்ற காண்ட்ராக்டர் ஏற்றுக் கொண்டிருந்தார். இவர் மீது கொலை, கொலை முயற்சி, கொள்ளை, ஆயுதம் வைத்திருத்தல் உட்பட 13 கிரிமினல் வழக்குகள் உள்ளன. 1992-ல் தேசப் பாது காப்பு சட்டத்திலும், 1996-ல் குண்டர்கள் சட்டத்திலும் கைது செய்யப்பட்டார். இவருக்கு உதவியாக இருக்கும் இவரது சகோதரர் யோகேந்திர யாதவ் மீது 22 கிரிமினல் வழக்குகள் விசாரணையில் உள்ளன. பா.ஜ.க. தலைவர்களுடன் இவர்கள் நெருக்கமாகி விட்டதால், 1996-க்குப் பிறகு, இவர்கள் மீது எந்த நட வடிக்கையும் இல்லை.

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

# பத்ரியின் பகுத்தறிவுப் பணி

முடிவெய்திய தோழர் பத்ரிக்கு வயது 37. 1985 ஆம் ஆண்டு முதல் திராவிடர் கழகத்திலும், பிறகு 1996-ல் பெரியார் திராவிடர் கழகம் துவங்கியது முதல், கழகத்திலும் முழு நேரமாகப் பணியாற்றி வந்தார். பல நூறு இராயப்பேட்டை பகுதி இளைஞர்களை நல்வழிப்படுத்தி, பெரியார் இயக்கத்தின் பக்கம் திருப்பி, இராயப்பேட்டையைக் கழகக் கோட்டையாக்கியவர் பத்ரி. வன்முறை சக்திகளின் நடவடிக்கைகளை தனது கனிவான அணுகுமுறைகளால், தடுத்து நிறுத்தியவர். ஏராளமான சாதி மறுப்புத் திருமணங்களை நடத்தி வைத்தவர். தி.மு.க. - அ.தி.மு.க. - பா.ம.க. - காங்கிரஸ் என்று அனைத்துக் கட்சித் தமிழர்களையும் தமிழின உணர்வில் நட்பாக்கி, உறவுப் பாலமாக செயல்பட்டவர். இராயப்பேட்டையில் குடும்பப் பிரச்சினைகளிலிருந்து மக்கள் பிரச்சினை வரை தலையிட்டு, சுமுகமாகத் தீர்த்து வைத்தவர். பெரியாரியலை ஏற்றுக்கொண்டு அப்பழுக்கற்ற நேர்மையான பொது வாழ்க்கையை நடத்தியவர். அவரது துணைவியார் சுதா, யாழினி என்ற 6 வயது மகளும் மஜீத் என்ற ஒன்றரை வயது மகனும் இருக்கிறார்கள். 1958ம் ஆண்டு பெரியார் நடத்திய சாதி ஒழிப்புப் போராட்டத்தில் சிறுவனாகப் பங்கேற்று, 6 மாதம் சிறைத் தண்டனை பெற்று, விடுதலையானவுடன், நோய்வாய்ப்பட்டு இறந்தவன் மாவீரன் மஜீத். அந்த நினைவாக அந்த இசுலாமிய இளைஞன் பெயரை தனது மகனுக்குச் சூட்டியிருந்தார் பத்ரி.

(1 பக்கத் தொடர்ச்சி)

இதற்கு உடந்தையாக இருப்பார் என்று எண்ணுகிறேன்'' என்றும் புகார் மனுவில் அவர் கூறியுள்ளார்.

மே 1-ம் தேதி, பகல் 11 மணியளவில் பிரேத பரிசோதனைக்குப் பின், மருத்துவமனையிலிருந்து தோழர் பத்ரியின் உடல் ராயப்பேட்டைக்குக் கொண்டு வரப்பட்டது. தோழர் பத்ரியின் வீட்டுக்கு அருகே உள்ள தலைமைக் கழக வாயிலில், உடல் பார்வைக்காக வைக்கப் பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள், சாரை சாரையாக, ஆண்களும், பெண்களுமாய் வந்து, மறைந்த கொள்கை வீரன் பத்ரிக்கு, தங்கள் இறுதி மரியாதையை செலுத்தினர். அழுகுரலும், கதறல்களு மாகவே இருந்தன. பலர் மயக்கமுற்று வீழ்ந்தனர். திருப்பூர், வேலூர், மேட்டூர், புதுவை பகுதிகளிலிருந்தும் கழகத் தோழர்கள் விரைந்து வந்தனர்.

மாலை 4 மணியளவில், இறுதி ஊர்வலம் புறப்படுவதற்கு முன், இரங்கல் கூட்டம் நடைபெற்றது. பகுதி திமுக பொறுப்பாளர்களும், தோழர் பத்ரியின் உற்ற நண்பர்களுமான வேலாயுதம், மணிவண்ணன், துரை, அ.தி.மு.க. பொறுப்பாளர் உமாபதி, மக்கள் உரிமைக் கூட்டமைப்பைச் சார்ந்த கி.த. பச்சையப்பன், தென்னரசு, கழக ஆட்சிக்குழு உறுப்பினர் கோவை ஆறுச்சாமி, களப்பணி ஒருங்கிணைப்பாளர் திருப்பூர் அங்ககுமார், புதுவை கழகத் தலைவர் லோகு அய்யப்பன், சாதிக் பாட்சா (த.மு.மு.க.), சேலம் மாவட்டக் கழக அமைப்பாளர் முல்லைவேந்தன், வேலூர் மாவட்டக் கழகத் தலைவர் திலீபன், மதுரை தமிழ்ப்பித்தன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், ஆட்சிக் குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் துரைசாமி, ஆனூர் ஜெகதீசன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் இரங்கல் உரையாற்றினர். மாலை 5 மணியளவில் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. லாயிட்ஸ் சாலை நடேசன் சாலை, ராதாகிருஷ்ணன் சாலை வழியாக, மயிலாப்பூர் இடுகாட்டை நோக்கி, பெரியாரியலுக்காக வாழ்ந்த மக்கள் தொண்டன், பத்ரியின் சடலம் சென்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இறுதி ஊர்வலத்தில் வந்தனர். 'மிகப் பெரிய தலைவருக்குக்கூட இவ்வளவு பெரிய கூட்டம் கூடியதில்லை' என்று, பொது மக்கள் வியந்து கூறினர். பத்ரி மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும், பாசத்தையும் இது வெளிப்படுத்துவதாக இருந்தது. "வீரவணக்கம், வீரவணக்கம்; பெரியார் தொண்டன் பத்ரிக்கு வீர வணக்கம்; விழ விழ எழுவோம்; வீறு கொண்டெழுவோம்'' என்ற முழக்கங்களோடு இறுதி ஊர்வலம் சென்றது. 6 மணியளவில், எந்தப் பயனையும் எதிர்பார்க்காமல், பெரியாரியரைப் பரப்புவதற்காக தனது வாழ்வை அர்ப்பணித்த, அந்த கொள்கை வீரரின் சடலம், பல்லாயிரம் மக்களின் கண்ணீர் கதறல்களுக்கிடையே மண்ணில் புதைக்கப்பட்டது. பத்ரி மறைந்தார்; பத்ரி என்றும் இயக்க வரலாற்றில் வாழ்வார். ●

# அயோத்தியில் 'கரசேவை' - அன்னியனுக்கு 'கரன்சி சேவை'

பொதுத் துறை நிறுவனங்கள் வேகம் வேகமாக தனியார் கட்டுப்பாட்டுக்குள் போவதால் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைத்து வந்த வேலை வாய்ப்புகள் பறி போய் விடுகின்றன. அதே நேரத்தில் பார்ப்பன அதிகார வர்க்கத்தின் ஆதரவு இருந்தால் தான் இந்தத் தனியார் நிறுவனங்கள் செயல்பட முடியும். அமைச்சர்களும், அமைச்சக உயரதிகாரிகளும் பார்ப்பனர்களாகவே இருக்கின்றனர். இவர்களின் தயவு தனியார் நிறுவனங்களுக்குக் கட்டாயமாகிவிடுகிறது. எனவே தனியார் நிறுனங்களில், பார்ப்பனர்களே வேலைகளில் அமர்த்தப்படுகிறார்கள். பார்ப்பன-பனியா பன்னாட்டு நிறுவனங்களின் கூட்டணி, 'அரே ராம்' பஜனை பாடிக் கொண்டு கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுகளை சம்பளமாக வாங்கிக் கொண்டிருக்கிறது. 1996லிருந்து 1998 மார்ச் 31 வரை இரண்டு ஆண்டுகளில் தனியார் துறைகளில் 87.48 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு தரப்பட்டதாக மய்ய அரசின் பொருளாதார மதிப்பீட்டுக் கொள்கை அறிக்கை கூறுகிறது. 2001 மார்ச் 31 வரை 86.52 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது. இதில் எந்த இடஒதுக்கீடும் கிடையாது. எல்லா வேலைகளும் 'அவாளுக்கே' சமர்ப்பணமாகி விட்டபோது, "தேசம் பேஷா பளிச்சிடுகிறது பாருங்கோ'' என்று 'இவாள்' ஏன் பேச மாட்டாள் ?

● மத்திய அரசே நடத்திய நிதி முதலீட்டு நிறுவனம் யு.டி.அய். இது அரசு நிறுவனமாக இருப்பதால், பணம் பத்திரமாக, உரிய பங்கு லாபத்துடன் கிடைக்கும் என்று நம்பி, மத்திய தர வர்க்கத்தைச் சார்ந்த அரசு ஊழியர்கள் உட்பட ஏராளமானோர் தங்கள் சேமிப்புகளை இதில் பங்குகளை வாங்கி முதலீடு செய்திருந்தனர். நம்பிய மக்களை நட்டாற்றில் விட்டது 'ராம பக்தர்கள்' ஆட்சி ! யு.டி.அய்.யில் முதலீடு செய்த பணத்தை, பா.ஜ.க. தலைவர்களுக்கு நெருக்கமான, நலிந்து போன நிறுவனத்தில், முதலீடு செய்தது, 'இந்துத்துவ' ஆட்சி. எதிர்பார்த்தது போலவே முதலீடு செய்யப்பட்ட நிறு வனங்கள் திவாலாயின; பணமும் 'அம்போ'. இதில் அதிசயம் என்னவென்றால் - யு.டி.அய். மூழ்கப் போகிறது என்பது ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு முன்கூட்டியே தெரிந்து, அது புத்திசாலித்தனமாக முன் கூட்டியே, தனது முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டது தான், முதலீடு செய்த, சிறிய முதலீட்டாளர்களுக்கு நன்றாகக் குழைத்துப் பட்டை நாமம். இப்படி அரசு நிறுவனத்தை நம்பியவர்களையே 'திவால்' ஆக்கியது 'அவாள்' கூட்டம் !

● 1983 ஆம் ஆண்டு - மொரிஷியஸ் நாட்டுக்கும், இந்தியாவுக்கும் இடையே ஒரு உடன்பாடு கையெழுத்தானது. இதற்குப் பெயர் 'இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு உடன்பாடு'. இதன்படி - மொரிஷியசில் பதிவு செய்து கொண்டு வர்த்தகம் நடத்தும் நிறுவனங்களுக்கு, இந்தியாவில் வரி போட முடியாது. இந்த வாய்ப்பை முறைகேடாகப் பயன்படுத்திக் கொண்டு, பல வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்கள், மொரிஷியசில் பதிவு செய்து கொண்டு, இந்தியாவில் பங்கு சந்தையில் பெருமளவில் முதலீடு செய்து, கொள்ளை லாபம் ஈட்டி வந்தன. இந்தியாவுக்கு வரி செலுத்துவதில்லை. இந்த முறைகேட்டைக் கண்டுபிடித்த மும்பை வருமான வரித்துறை அதிகாரி ஒருவர், மார்ச் 2000 ஆண்டில் டெல்லி உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். உடனே பன்னாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் நிதித்துறை அமைச்சர் யஷ்வந்த் சின்காவை சந்தித்தனர். சந்தித்த அடுத்த நாளே (13 மார்ச் 2000), இவர்களுக்கு வரி விலக்குத் தர வேண்டும் என்று, நிதி அமைச்சர் வருமான வரித்துறைக்கு சுற்றறிக்கை அனுப்பினார். இப்படி மின்னல் வேகத்தில் எல்லாமுமே நடந்து முடிந்தன. பல ஆயிரம் கோடி வரி ஏய்ப்பை அதிகாரிகள் வழக்குத் தொடர்ந்து கைப்பற்ற முயற்சித்த பிறகும், நிதியமைச்சர் தள்ளுபடி செய்தது ஏன் தெரியுமா ? இப்படி மொரிஷியசில் பதிவு செய்து கொண்டு, இந்தியாவில் முதலீடு செய்து கொள்ளை அடித்த 'இந்தியா பன்ட்' என்ற மிகப் பெரும் நிறுவனத்துக்கு, நிர்வாக அதிகாரியாக இருந்தவர், நிதி அமைச்சரின் மருமகளான புனிதா சின்ஹா. இதற்கு முந்தைய ஆண்டில் இந்த நிறுவனம் ஈட்டிய லாபம் 5.3 மில்லியன் டாலர் என்றால், பார்த்துக் கொள்ளுங்கள் !

● நிதி அமைச்சரின் இந்த முறைகேடான சலுகையை எதிர்த்து, டெல்லி உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு ஒன்று தொடரப் பட்டது. பல ஆயிரம் கோடி ரூபாய் பணத்தை ஏமாற்றியவர்களுக்கு அரசே துணை போவதை அறிந்து அதிர்ச்சி அடைந்த டெல்லி உயர்நீதிமன்றம், நிதி அமைச்சரின் சலுகை ஆணையை ரத்து செய்து உத்தரவிட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை அமுலுக்கு வந்த பிறகு, அரசு எடுத்து வரும் எந்த நடவடிக்கைகளிலும் தலையிடாமல் ஒதுங்கி இருந்த நீதிமன்றம், முதன்முறையாகத் தலையிட்டது இந்த பிரச்சினையில் தான். எனவே இந்தத் தீர்ப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. 'அன்னியர்கள்' கொள்ளையடிக்க அரசு கஜானாவைத் திறந்து விட்டது யார் ? அயோத்தியில் 'கரசேவை'; அயல் நாட்டானுக்கு 'கரன்சி சேவை'யா ?

● பன்னாட்டு நிறுவனங்கள் - இப்படி நாட்டைச் சுரண்டுவதற்கு, பல்லாயிரக்கணக்கான கோடிகளை கொட்டி அழும் இந்த 'மனுதர்ம'க் கூட்டம், சொந்த நாட்டு மக்களின் கல்விக்கு நிதி ஒதுக்க மறுக்கிறது. மத்திய அரசின் கல்விக் கொள்கையை வகுப்பவர்கள் கல்வியாளர்கள் அல்ல. முகேஷ் அத்வானி, குமார மங்கலம் பிர்லா என்ற இரண்டு பெரு முதலாளிகள். அவர்களிடம் தான், பா.ஜ.க. ஆட்சி இந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறது. அவர்கள் அரசுக்கு தந்துள்ள பரிந்துரையின் அடிப்படையில் தான் அரசின் கல்விக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. "கல்விக்கான செலவு முழுவதையும், மாணவர்களிடமிருந்தே பெற வேண்டும். கல்விக்கு அரசு செலவிடக் கூடாது. உயர்கல்வியை உடனடியாக தனியார் மயமாக்க வேண்டும்''. இதுதான் இன்று அரசு நடைமுறைப்படுத்தும் உயர்க் கல்விக்கான கொள்கை. ஆரம்பக் கல்வியின் கதை என்ன ? 'ஒளிரும் இந்தியாவில்' 6 கோடி சிறுவர் சிறுமியர், பள்ளிக் கூடத்தின் வாயிலையே மிதிக்கவில்லை. ●

(3 பக்கத் தொடர்ச்சி)

இறந்து போனவர்களின் சடலங்களும் காயம்பட்டோரும் மருத்துவமனைக்குக் கொண்டு போகப்பட்டவுடன் பா.ஜ.கவினர் மருத்துவமனைகளில் குவிந்துவிட்டனர். தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளோ, அரசியல் கட்சிகளோ, பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களோ, சந்திக்கவிடாமல் தடுத்து விட்டனர். உண்மைகளை வெளியிட்டால் நடப்பதே வேறு என்று, காயமடைந்தவர்களை மிரட்டுகிறார்கள். லக்னோவில், அகில இந்திய பெண்கள் சம்பேளனத்தைச் சார்ந்த பெண்களுடன், மதுகார்க் என்ற பெண்கள் சங்கத் தலைவர் சென்றபோது, நூறுக்கும் மேற்பட்ட பா.ஜ.க.வினர், சூழ்ந்துகொண்டு, மருத்துவ மனைக்குள் நுழைய விடாமல் தடுத்து விட்டனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு வருத்தம் தெரிவிக்கவோ, ஆறுதல் கூற வோகூட, பா.ஜ.க.வினர் அனுமதிக்கவில்லை. இந்த அடாவடியைக் கண்டித்து, ஏப்.13-ம் தேதி லக்னோவில், சட்டசபைக் கட்டிடம் முன், அகில இந்திய பெண்கள் சம்மேளனத்தினர் பிருந்தா காரத் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு முன் - பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்றனர். பாணி கவோர் எனும் கிராமத்தைச் சார்ந்த அவாத்ராணி, சாந்தா தேவி என்ற இரண்டு பெண்கள் நெரிசலில் சிக்கி இறந்துவிட்டனர். அவாத்ராணியின் கணவர் சேய்ராம் கூறுகையில், கருணா மிஸ்ரா என்ற பா.ஜ.க. தலைவர் தான் தனது மனைவியைக் கட்டாயப்படுத்தி அழைத்துப் போனார் என்றார். கலாவதி என்ற பெண் கூறுகையில், நாய்க்கு ரொட்டியை வீசுவது போல், சேலைகளைத் தூக்கி வீசினர் என்றார். நான்கு நாட்களுக்கு முன், இந்தக் கிராமத்தில் கூட்டம் ஒன்றை நடத்தி, நிகழ்ச்சிக்கு வந்தால் ரேஷன் கார்டு, பணம் இவற்றோடு, இலவச சேலையும் கிடைக்கும் என்றும், வராவிட்டால் நிறைய பொருள்களை இழந்துவிடுவீர்கள் என்றும் பா.ஜ.க.வினர் கூறி இருக்கிறார்கள். ✻

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 6th May 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மே 13, 2004 | புரட்சி 3 | முழக்கம் 18 | விலை : ரூ.2.50

# ஆந்திராவில் தெலுங்குதேசம் தோல்வி ஏன்!



ஆந்திராவில் சந்திரபாபுவின் தெலுங்கு தேசம் - பா.ஜ.க. கூட்டணி, மாநில சட்டசபை தேர்தலில் படுதோல்வியை சந்தித்துள்ளது. 294 சட்டமன்ற தொகுதி களில் காங்கிரஸ் மற்றும் தனி மாநிலம் கோரும் தெலுங் கானா ராஷ்டிர சமிதி (டி.ஆர்.எஸ்.), கம்யூனிஸ்ட் கட்சிகளின் அணி 226 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளது. தெலுங்கு தேசம் கட்சிக்கு 47 இடங்களும், பா.ஜ.கவுக்கு 2 இடங்களும் மட்டுமே கிடைத்துள்ளன. டாக்டர் ராஜசேகர் (ரெட்டி) மாநில முதல்வராக தேர்வு செய்யப்படுவார் என்று தகவல்கள் கூறுகின்றன. சந்திரபாபு நாயுடு கடும் தோல்வியை சந்தித்ததற்குக் காரணம் என்ன?

உலக வங்கியின் திட்டங்களை - அதன் கட்டளைகளை ஏற்று செயல்படுத்துவதில் முன்னணியில் நின்றார் சந்திரபாபு. இதனால், சர்வதேச நிதி நிறுவனங்களின் பாராட்டுகளைப் பெற்று பன்னாட்டு நிறுவனங்களின் நண்பர் ஆனார். உயர் தொழில் நுட்பம் - தகவல் தொடர்பு கணினி மயமாக்கம் என்று, மூழ்கிக் கிடந்த சந்திர பாபு, கிராம மக்களின் பிரச்சினைகளைப் புறக்கணித்தார். நகர்ப்புறச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு, அதில் சொகுசுகார்கள் ஏராளமாக ஓடினாலும், கிராமங்களில் பசியும், பட்டினியும் நீடித்தது. விவசாயம் பாதித்தது; சுமார் 200 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். சந்திரபாபுவின் பொருளாதார சீர்த்திருத்தங்கள், வசதி படைத்தவர்களையே வளர்த்தது. வேலை வாய்ப்பு, கல்வி, பாசனம், மின்சாரம் போன்ற பிரச்சினைகளை சந்திரபாபு ஆட்சி புறக்கணித்தது.

சந்திரபாபுவை எப்போதும் அதிகார வர்க்கங்களும், தொழில் நுட்பவாதிகளுமே சூழ்ந்து நின்றனர். 'இந்து' ஏட்டில் சாய்நாத் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் (மார்ச் 12) இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"மாநிலத்தில் நிலவிய வறட்சியும் பஞ்சமும், மக்களின் கோபக் கனலாகியது. இதனால் கடந்த 20 ஆண்டுகளாக, காங்கிரஸ் காலூன்றவே முடியாமல் இருந்த கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கூட, 21 தொகுதிகளில் 18 தொகுதிகளைக் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. கடந்த ஆண்டு வறட்சியின் கோரப் பிடிகளில் சிக்கிய கிராமங்களில் நூற்றுக் கணக்கான கஞ்சித் தொட்டிகள் திறக்கப்பட்டன. இதில் ஒன்றுக்கு கூட அரசின் ஆதரவு கிடையாது. ஆனால், மாநிலத்தில் பட்டினியே கிடையாது என்று சட்டசபையில் முதல்வர் அறிவித்தார். மக்கள் பிரச்சினைகளை முன்னிறுத்தி 2003-ல் காங்கிரஸ் தலைவர் ஒய்.எஸ். ராஜசேகர் (ரெட்டி) நடத்திய 'பாதயாத்திரை' மக்களின் பேராதரவைப் பெற்றது. தெலுங்கானா ராயலசீமா பகுதிகளிலிருந்து, பஞ்சம் காரணமாக, மக்கள் வெளியேறினர். தேர்தலை இப்போது நடத்தாமல், மேலும் தள்ளி நடத்தியிருந்தால், இதைவிட மோசமான தோல்வியை சந்திரபாபு சந்தித்திருப்பார்" என்று, சாய்நாத் எழுதியுள்ளார்.

சந்திரபாபுவின் தகவல் தொடர்பு கம்ப்யூட்டர் வளர்ச்சித் திட்டங்களால், தங்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை என்றே 81 சதவீத மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதனால் நாட்டுக்கு நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று 5 சதவீதம் பேர் மட்டுமே கூறியுள்ளனர்.

### பார்ப்பனர் ஆதரவு

இந்தத் தேர்தலில் பார்ப்பனரின் ஆதரவு தெலுங்கு தேசம் கூட்டணிக்கே அதிகமாக இருந்ததாக தேர்தல் கணிப்புகளில் தெரிய வந்துள்ளது. 56 சதவீத பார்ப்பனர்கள் தெலுங்கு தேசம் - பா.ஜ.க. கூட்டணியை ஆதரித்துள்ளனர். கம்மா நாயுடு சமூகத்தின் பேராதரவு தெலுங்கு தேசத்துக்கும் (66 சதவீதம்), பிற்படுத்தப்பட்ட கப்பு சமூகத்தின் அதிக ஆதரவு (48) காங்கிரசுக்கும் கிடைத்துள்ளது. மாதிகா, மாலா என்ற தாழ்த்தப்பட்ட சமூகப் பிரிவினரின் 70 சதவீதத்துக்கும் மேலான ஆதரவு - காங்கிரஸ் அணிக்கே கிடைத்துள்ளது. முஸ்லீம்களில் 60 சதவீதம் பேர் காங்கிரஸ் அணியை ஆதரித்துள்ளனர். பழங்குடியினர் இரண்டு அணியினரையும் சம அளவில் ஆதரித்துள்ளனர் என்று, தேர்தல் கணிப்பின் போது எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

உலக மயமாதல் கொள்கையை அமுல்படுத்துவதில் இந்தியாவுக்கே முன்னோடியாக செயல்பட்டவர் சந்திரபாபு; இந்தக் கொள்கை - அடித்தள கிராமப்புற ஏழை மக்களுக்கு எதிரானது என்ற உண்மையை - இந்தத் தேர்தல் முடிவுகள் தெளிவாக உணர்த்தியிருக்கின்றன. ●

## விருது பெறுவதற்காக ராணுவ அதிகாரிகளின் "போலி யுத்தம்"

இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் உள்ள 'சியாச்சின்' - தான் உலகிலேயே மிக உயரமான ராணுவ தளம். இங்கு, பாகிஸ்தான் வீரர்களுடன் யுத்தம் நடத்தியதாக இந்திய ராணுவ அதிகாரிகள் "போலி மோதல்களை" தயார் செய்து, அதை வீடியோ படமாக்கியுள்ளார்கள். அரசின் "வீர விருது"களைப் பெறுவதற்காக இந்த "வீர தீர" மோசடிகளை ராணுவ அதிகாரிகள் அரங்கேற்றியுள்ளனர். சியாச்சின் பிரிகேடி கமாண்டர் எச்.பி.எஸ். பேடி, இந்த போலி யுத்தத்துக்கு, மூளையாக செயல்பட்டவர்கள் உயர் அதிகாரிகள்தான் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார். இத்திட்டத்தை வகுத்து செயல்படுத்தியரே மேஜர் கரீந்தர் சிங் தான் என்று, என்.டி.டி.வி. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியுள்ளார். "உயர் அதிகாரியின் ஒப்புதலோ அல்லது உத்தரவோ இன்றி இது போன்ற செயலில் ஈடுபட முடியாது. என்னைப் போன்ற ராணுவ வீரர்கள் எங்களது மனநிலையை ராணுவ நீதிமன்ற விசாரணையில் ஆதாரத்துடன் தெரிவித்துள்ளோம்" என்றார் அவர். மத்திய பாதுகாப்பு அமைச்சகம், இதுபற்றி உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

நாட்டின் நிதி நிலை அறிக்கையில் பெரும் பகுதி ராணுவத்துக்காகவே ஒதுக்கப்படுகிறது. நாட்டைக் காக்கும் 'தேசபக்தர்'களாக ராணுவத்தினரைப் போற்றிப் புகழ்கிறார்கள்; ஆனால் ராணுவ உயர் அதிகாரிகள் கதையோ, 'போலி யுத்தம்' நடத்துவதாக இருக்கிறது. ●

# பெரியாரியலின் தேவை அதிகரித்துள்ளது

## 'புரட்சிப் பாதை' இதழுக்கு - கழகத் தலைவர் பேட்டி

**"முன் எப்போதையும்விட - பெரியாரியலின் தேவை அதிகரித்துள்ளது. திருத்தல் வாதம் இல்லாத பெரியாரியலை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதிலே நாங்கள் அதிகக் கவனம் செலுத்துகிறோம் என்று, கழகத் தலைவர் 'புரட்சிப் பாதை' ஏட்டுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்."**

திருச்சி கே.சவுந்தரராசன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மாதமிருமுறை வெளிவந்து கொண்டிருக்கும் "புரட்சிப் பாதை" இதழுக்கு, கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, அளித்துள்ள பேட்டியை இங்கு வெளியிடுகிறோம்.

**மதவாத பா.ஜ.க.வை மாறி மாறி தோளில் சுமந்த தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகிய கட்சிகளை இப்போது ஆதரிக்கிறீர்களே?**

பா.ஜ.க., அ.தி.மு.க. அணிக்கு எதிரணியாக இருக்கிறது என்கிற அடிப்படையில் தான் ஆதரிக்கிறோம்.

ஆனால், இங்கே தமிழ்நாட்டில் காலடியே வைக்க முடியாமல் இருந்த பா.ஜ.க.வுக்கு கதவைத் திறந்து வைத்தது அ.தி.மு.க. தான். அந்தக் கட்சியிடம் எங்களுக்கு அதிக எதிர்பார்ப்பு இல்லை. ஆனால், தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. போன்ற கொள்கைப் புரிதல் உள்ள தொண்டர்களைக் கொண்ட கட்சிகளிடம் அதிகமாக எதிர்பார்த்தோம். ஆனால், இவர்கள் அரசியலில் நிலைக்க வேண்டும் என்பதற்காக கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிடுவது சங்கடமாகவும் நெருடலாகவும் இருக்கிறது. குறிப்பாக, குஜராத் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்காதது, வரலாற்றில் திரிபுகள் செய்து பாடங்களையே மாற்றி எழுதிய பின்னாலும் எதிர்ப்புக் காட்டாமல் இருந்தது, வேலைத் திட்டத்தில் இல்லாத ராமர் கோயில் பிரச்சினையில், இராமர் கோயில் கட்டுகிற அமைப்பிடம் நிலத்தை ஒப்படைக்க வேண்டும் என்று மனு போட்ட போது கூட எதிர்ப்பு தெரிவிக்காமல் இருந்தது, பொடாவை ஆதரித்தது போன்ற ஏராளமான சங்கடங்களெல்லாம் நடந்ததுண்டு.

என்றாலும், இப்போது அவாகள் பொடாவை எதிர்த்து, வலுவான இயக்கமாக வளர்த்த பின்னர்தான் பொடாவைப் பற்றிய மறு சிந்தனை அரசுக்கு வந்தது. இப்போது அந்த பா.ஜ.க.வை சரியாகப் புரிந்து கொண்டு, அவர்களிடமிருந்து விலகி எதிரணியில் நிற்பதால்தான் இந்தக் கூட்டணியை ஆதரிக்கிறோம்.

**தி.மு.க. கூட்டணியை ஆதரிக்கிறீர்கள். பிரச்சாரப் பயணம் மேற்கொள்வீர்களா?**

நாங்கள் பிரச்சாரப் பயணம் மேற்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், இந்தப் பிரச்சாரப் பயணம் தேர்தலுக்கு என்றில்லாமல், தேர்தல் வருவதற்கு ஓராண்டுக்கு முன்னதாகவே 'வீழ்த்துவோம் வருணாசிரமத்தை' என்ற பெயரால் நாங்கள் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறோம். அப்போது பி.ஜே.பி.யும், அ.தி.மு.க.வும் எதிரெதிர் அணியில் இருந்தும்கூட ஒரே கொள்கையைக் கொண்டிருப்பவர்கள் என்பதாலே அவர்களையும், அவர்களுக்கு வழிகாட்டிகளாக தன்னைத் தானே நியமித்துக் கொண்ட - பார்ப்பனப் பத்திரிகைகள் தூக்கி நிறுத்துகிற, காஞ்சிமட சங்கராச்சாரி - இந்த மூவரையும் விமர்சித்து தெருமுனைக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டங்கள் வழியாக பிரச்சாரங்கள் செய்து வந்தோம். அதன் தொடர்ச்சியாகத்தான் இந்தத் தேர்தல் களத்தையும் நாங்கள் பார்க்கிறோம். 'இந்துத்துவ - பார்ப்பன எதிர்ப்புக் கூட்டங்கள்' என்ற பெயரில் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தி பா.ஜ.க. - அ.தி.மு.க. அணிக்கு வாக்களிக்கக் கூடாது என்றும், அதற்கு மாற்றாக இருக்கிற வலுவான அணியான தி.மு.க. தலைமையிலான அணியை ஆதரிக்க வேண்டுமென்றும் பிரச்சாரம் செய்துகொண்டுதான் இருக்கிறோம்.

பிரச்சாரம் செய்வது மட்டுமல்லாமல், வாஜ்பாய் கூட்டணிக்கு ஏன் வாக்களிக்கக் கூடாது என்பதை விளக்கி, 'தமிழர்களே

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

தலையங்கம்

# காணாமல் போன வாக்காளர்கள்!

தேர்தலில் - இறந்து போனவர்கள் "உயிர் பெற்று" வந்து வாக்களித்த கதைகளைத் தான் இதுவரை கேள்விப்பட்டு வந்தோம். இப்போது நடந்து முடிந்துள்ள வாக்குப் பதிவில், உயிரோடு வாழும் பல லட்சம் வாக்காளர்கள் "காணாமல்" போய்விட்டார்கள். இதுவரை தொடர்ந்து வாக்களித்தவர்களின் பெயர்கள் எல்லாம் பட்டியலில் காணப்படவில்லை. குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் - வாக்களிக்காமல் இருந்து விடாதீர்கள், என்று நாட்டு மக்களுக்கு அறிவுறுத்துகிறார்; அவரது சகோதரர் பெயரே வாக்காளர் பட்டியலில் காணாமல் போய்விட்டது. கலாம் டெல்லியில் வாக்களித்ததால், அவரது பெயர் பட்டியலில் நீக்கப்படாமல் இடம் பெற்று விட்டது.

தமிழ்நாட்டில் - பல லட்சம் வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதற்கு யார் காரணம்? தமிழக அரசுக்கும், இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும், இது தேர்தல் ஆணையத்தின் கீழ் வருகிறது என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா கூறுகிறார். தேர்தல் ஆணையத்தின் கீழ், பணியாற்றுகிறவர்கள், தமிழக அரசு அதிகாரிகள் தான். வாக்காளர் சேர்ப்பதில் முறையாக செயல்படவில்லை என்று, ஏற்கனவே இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கையும் எடுத்திருக்கிறது. சென்னை சைதாப்பேட்டையில் நடந்த ஒரு இடைத் தேர்தலின் போது, இதே போல், வாக்காளர் பட்டியலில் ஏராளமான பெயர்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டுவிட்டதாக ஏற்கனவே புகார்கள் வெளி வந்தன. எனவே, தேர்தல் தில்லுமுல்லுகளில் ஏற்கனவே பல நல்ல சான்றிதழ்களைப் பெற்று வைத்திருக்கும், தமிழக அரசின் தலையீடுகள் இதில் இருக்கும் என்று நம்புவதற்கு வலிமையான காரணங்கள் உண்டு. அதே நேரத்தில், தேர்தல் ஆணையமும் தனது பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது. "தகுதி, திறமை" தங்களுக்கு மட்டுமே உண்டு என்று கூறிக் கொள்ளும் பார்ப்பனர்கள் தான் - தேர்தல் ஆணையத்தின் அதிகாரிகள். அதுவும் மூன்று ஆணையர்களும் பார்ப்பனர்கள். அரசியல் கட்சிகளுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் ஆணையம், தனது கடமைகளைச் செய்வதிலும், முறைகேடுகளைக் களைவதிலும், கவனமாக இருந்திருக்க வேண்டும். பெயரை வைத்து முஸ்லீம் சமூகத்தினரை அடையாளம் கண்டு கொள்ளலாம் என்பதால், சென்னை தொகுதிகளில், திட்டமிட்டு முஸ்லீம் வாக்காளர்களின் பெயர்கள் ஏராளமாக நீக்கப்பட்டு விட்டன. குறிப்பாக, அரசு ஊழியர்கள் ஏராளமாக பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது பற்றி முழுமையான விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டியது அவசியம்.

வாக்குரிமை, ஒரு ஜனநாயகத்தில் மக்களின் அடிப்படை உரிமை என்று கூறப்படுகிறது. இந்த உரிமையை ஒருவருக்கு வழங்குவதா வேண்டாமா என்பதை பட்டியல் தயாரிக்கும் சில ஊழியர்களால் முடிவு செய்துவிட முடியும் என்ற வெட்கடோன ஒரு நிர்வாக அமைப்பு இங்கே இருந்து வருகிறது. பட்டியலை சரிபார்க்குமாறு இரண்டு முறை வேண்டுகோள் விடப்பட்ட பிறகும், வாக்காளர்கள், அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளாதது, அவர்கள் தவறு என்று, தேர்தல் ஆணையம் கூறுகிறது. ஆனால், மக்கள் எழுப்பும் ஒரு அடிப்படையான கேள்விக்கு என்ன பதிலை சொல்வார்கள்? வாக்காளர்களுக்கான நிரந்தர அடையாள அட்டை வழங்கிவிட்ட பிறகு, அவர்களின் பெயர், எப்படி காணாமல் போகும்? இதற்கு யார் பொறுப்பு? இது மக்கள் மன்றம் எழுப்பும் கேள்வி.

இந்தியா பெயரளவில் ஒரு ஜனநாயக நாடாக இருந்தாலும் - உண்மையில் 'பார்ப்பன நாயகமாகவே' அது செயல்படுவதால், வாக்குரிமையானாலும், மனித உரிமையானாலும், அவைகள் காலில் மிதிபடும் தூசிக்கு சமமாகவே மதிக்கப்படுகின்றன. மக்களின் வாக்குரிமை பறிப்புகளும், இதையே உறுதிப்படுத்துகின்றன.

## தி.மு.க. எம்.எல்.ஏ. தடைகளையும் தாண்டி

# ஒட்டன்சத்திரத்தில் கழகத்தின் பிரச்சாரம்

பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியை வீழ்த்தி - ஜனநாயக முற்போக்குக் கூட்டணியை ஆதரித்து - தந்தை பெரியார் திராவிடர் கழகம், தனி மேடைகளை அமைத்து நாடு முழுதும் பிரச்சாரம் செய்து வருகிறது. வாஜ்பாய்-ஜெயலலிதா ஆட்சியினுடைய மதவெறிக் கொள்கைகள் - சமூகநீதி எதிர்ப்பு; ஏழை எளிய மக்களுக்கு எதிரான பொருளாதாரக் கொள்கைகளை விளக்கி, ஏராளமான தகவல்களுடன், 35 பக்கங்களைக் கொண்ட தேர்தல் பிரச்சார நூலையும், பல்லாயிரக் கணக்கில் அச்சடித்து, தமிழகம் முழுதும் பரப்பி வருகிறது. தமிழர் சமுதாயக் கண்ணோட்டத்தோடு, கழகம் தனது சொந்த செலவில் நடத்தி வரும் கருத்துச் செறிவு மிக்க பிரச்சார இயக்கத்தை பொதுமக்கள் பெரிதும் வரவேற்கிறார்கள். இந்த நிலையில் - பழனி நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் கார்வேந்தன், தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஒட்டன் சத்திரம் பகுதியில் நடத்தும் பிரச்சாரக் கூட்டத்துக்கு, அனுமதி தரக் கூடாது என்று காவல்துறைக்குக் கடிதம் எழுதியுள்ளார். வேட்பாளர் கார்வேந்தனின் இந்த நடவடிக்கைக்குப் பின்னால் இருந்து செயல்படுபவர் - ஒட்டன்சத்திரம் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் திரு.சக்ரபாணி. ஒட்டன் சத்திரம் பகுதியில் நடக்கும் அனைத்துத் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களும் தனது தலைமையில் தான் நடக்க வேண்டும் என்று இவர் வலியுறுத்தி வருகிறார். வரும் 5-ம் தேதி ஒட்டன் சத்திரத்தில், தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடத்த ஏற்பாடாகி இருந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி அதில் சிறப்புரையாற்றுகிறார். கழகத்தின் கூட்டத்துக்கு, தன்னையே தலைவராகப் போடவேண்டும் என்று சக்ரபாணி வலியுறுத்தினார். பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் கூட்டத்துக்கு, அந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் தானே தலைவராக இருக்க முடியும் என்று தோழர்கள் கூறியதை, சக்ரபாணி ஏற்க மறுத்துவிட்டார்.

"என்னைத் தலைவராக போடாவிட்டால், நீங்கள் கூட்டம் நடத்துவதை அனுமதிக்க முடியாது" என்று கூறிவிட்டார். இவரது தூண்டுதலால், பழனி காங்கிரஸ் வேட்பாளர் கார்வேந்தன் ஒட்டன் சத்திரம் காவல் நிலைய ஆய்வாளருக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், "ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கும், பெரியார் தி.க.வுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எனவே எங்களது பெயரை பெரியார் தி.க. பயன்படுத்தக் கூடாது" என்று கடிதம் எழுதியுள்ளார். இதைச் சுட்டிக்காட்டி, ஒட்டன்சத்திரம் காவல் நிலைய ஆய்வாளர் மாவட்டக் கழகத் தலைவர் தோழர் சத்திவேலுக்குக் கடிதம் எழுதியுள்ளார். அதில் வேட்பாளரின் வேண்டுகோள்படி, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் நோக்கத்தோடு தந்தை பெரியார் தி.க. வேட்பாளரின் பெயரையோ, ஜனநாயக முற்போக்குக் கூட்டணி பெயரையோ பயன்படுத்தக் கூடாது என்று, காவல்துறை ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து தந்தை பெரியார் திராவிடர் கழக தேர்தல் பிரச்சாரக் கூட்டம் என்ற தலைப்பை மாற்றி, தந்தை பெரியார் திராவிடர் கழகப் பிரச்சாரக் கூட்டமாக கழகம் நடத்துகிறது. தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் சக்ரபாணி அடிப்படையில் ஆர்.எஸ்.எஸ். கொள்கையின் தீவிர ஆதரவாளர். 1998-ல் இவர் மாவட்டத் தி.மு.க. விவசாய அணியில் பொறுப்பில் இருந்த போதே, இராம. கோபாலனின் இந்து முன்னணி நடத்திய விநாயகன் ஊர்வலத்துக்கு வரவேற்பு தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் குறித்து தி.மு.க. தலைமை நிலையத்துக்கும், காங்கிரஸ் தலைமையகத்துக்கும், தொலைவரி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும், திட்டமிட்டபடி - கழகத்தின் பிரச்சாரக் கூட்டம் மே 5-ம் தேதி ஒட்டன் சத்திரம் கடைவீதியில் எழுச்சியுடன் நடைபெற்றது; பெரும் திரளாகப் பொது மக்கள் கூடியிருந்தனர்; அ.தி.மு.க. - பா.ஜ.க. அணியை வீழ்த்த வேண்டும் - ஏன் ? என்ற கழகத்தின் பிரச்சார வெளியீட்டு நூல், 300க்கும் மேல் கூட்டத்தில் விற்பனையானது. சுமார் ஒன்றரை மணி நேரம் - கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். "தந்தை பெரியார் தனது தொண்டர்களை மானம் பார்க்காத தொண்டருக்குத் தயாரித்தார். 1957-ல் அரசியல் சட்டத்தை எரித்துத் தோழர்கள் சிறை சென்ற போது, சிறையில் தோழர்கள் கடும் துயரங்களை சந்தித்தனர்; சிறைக்குள்ளே இரண்டு பேர் வீரமரணமடைந்தனர். அப்போது நடந்தது காமராசர் ஆட்சி தான். இவ்வளவுக்குப் பிறகும், பெரியார் ஆணைப்படி, காமராசர் ஆட்சியை ஆதரித்தே, கழகம் தேர்தல் பிரச்சாரம் செய்தது" என்ற வரலாற்று சம்பவத்தை சுட்டிக்காட்டி கழகத் தலைவர் தனது உரையைத் தொடர்ந்தார்.

மாவட்டத் தலைவர் தோழர் சக்திவேல், மேற்குறிப்பிட்ட காவல் துறை கடிதம் பற்றிய விவரங்களை விளக்கிப் பேசினார். தொடர்ந்து பா.ஜ.க. - ஜெயலலிதாவின் பார்ப்பனிய ஆட்சிப் போக்குகளை விரிவாக எடுத்துரைத்து, கழகத் தலைவர் உரையாற்றினார். ●

## போலி மருந்து உலகிலேயே

# இந்தியா முதலிடம்

போலி மருந்துகள் - உலகிலேயே இந்தியாவில்தான் அதிகம் தயாரிக்கப்படுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. 'இந்து' ஏட்டில் டி.பி.துபே எழுதியுள்ள கட்டுரை - வாஜ்பாய் ஆட்சியின் மருந்துக் கொள்கைகள் மோசமான விளைவுகளை உண்டாக்கியிருப்பதை அம்பலப்படுத்தியிருக்கிறது.

துவக்கம் முதலே மருந்துகள் மீது விதிக்கப்பட்டிருந்த விலைக் கட்டுப்பாடுகளை வாஜ்பாய் ஆட்சி தளர்த்தி வந்ததால், விலைகள் கடுமையாக உயர்ந்தன. காசநோய்க்கான மருந்துகள் 47சதவீதம்; வயிற்றுப்போக்குக்கான மருந்துகள் 66 சதவீதம்; கருத்தடை மாத்திரைகள் 63 சதவீதம்; இருமலுக்கான மருந்து 39 சதவீதம்; நோய்கொல்லிக்கான மருந்து 33 சதவீதம்; என்று உயர்ந்துள்ளன. இவை சில உதாரணங்கள் தான். இத்தகைய விலை உயர்ந்த மருந்துகள் பன்னாட்டு நிறுவனங்களால் விற்பனை செய்யப்படுகின்றன. அதே நேரத்தில் நாட்டில் உயிர் காக்கும் மருந்துகளை உற்பத்தி செய்த பொதுத்துறை நிறுவனங்கள் மூடப்பட்டு விட்டன. புற்று நோய்க்கான மருந்தினை - பெண்கள் கருவுறுதலுக்காக விற்பனை செய்யப்படுகிறது. இதை மத்திய அரசே அறிவித்துள்ளது.

மருந்துகளை சோதனை செய்து பார்ப்பதற்கு, இந்திய மக்களையே பன்னாட்டு நிறுவனங்கள் பயன்படுத்தி வருகின்றன. இதற்கு இந்திய மருந்து உற்பத்தி நிறுவனங்களும் உடந்தை. இதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றி, இந்தப் பன்னாட்டு நிறுவனங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை.

மருத்துவக் கட்டுபாடுகளை நீக்கி வரும் வாஜ்பாய் கட்சி கொள்கை காரணமாக, இந்தியாவில் ரூ.4000 கோடிக்கு மேல், போலி மருந்துகள் விற்கப்படுகின்றன. இதை அரசே ஒப்புக் கொண்டுள்ளது. உலக சுகாதார நிறுவனமும், இந்தியாவிடம் இதை சுட்டிக் காட்டிக் கண்டித்துள்ளது. இந்தியாவில் இயற்றப்பட்ட காப்புரிமை சட்டம், மருத்துவத்துறையில் விலைகள் உயராமல், தடுத்து வந்தது. 1970-ல், இந்த சட்டத்தை மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டபோது, அன்றைய ஜனசங்கமாக இருந்த இதே கட்சி எதிர்த்தது. இப்போது அவர்களே சட்டத்தை மாற்றி, சுரண்டலுக்கும் போலி மருந்து தயாரிப்புகளுக்கும் கதவு திறந்து விட்டுவிட்டனர். பன்னாட்டு நிறுவனங்கள் - இந்திய மருந்து சந்தையைக் கைப்பற்றுவதற்கு வசதியாக, வாஜ்பாய் ஆட்சி, காப்புரிமை சட்டத்தை, இரண்டு முறை மாற்றி அமைத்துள்ளது. ●

# 'களத்துமேடு' புதிய இதழ்

"எங்களுக்கும் கொஞ்சம் கொள்கை உண்டு. பார்ப்பான் - பறையன், ஆண் - பெண், ஏழை - பணக்காரன் ஆகிய உயர்வு தாழ்வுகளை சமப்படுத்த வேண்டும் என்பவையே அவை. இவை தொடர்பான கருத்துக்களை, மக்கள் விரும்பும் வடிவில் எங்களால் கொடுக்க இயலாது. எனவே அந்த ஆற்றல் உள்ளவர்களுக்கு ஒரு களத்தை உருவாக்கிக் கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் இந்த இதழைத் துவக்கியுள்ளோம். ஆண்டுக்கு 10 இதழ் அவசியம் வரும். பணம் கிடைக்கும் நாட்களில் வெளிவரும். மாத இதழோ, இருமாத இதழோ அல்ல"

- என்ற அறிவிப்போடு வெளிவந்திருக்கிறது 'களத்துமேடு'. முதல் இதழிலே - நல்ல சிந்தனைகள் விதைக்கப்பட்டுள்ளன. 'புதிய கோடங்கி'யின் புரட்டலுக்கு - களத்துமேடு தந்துள்ள பதிலடியை வேறு இடத்தில் வெளியிட்டுள்ளோம்.

தொடர்புக்கு:
**களத்துமேடு,** மனை எண்.63,
வள்ளல் பாரி நகர்,
அடியனூத்து அஞ்சல்,
திண்டுக்கல்-624 003.

கழகத்தினர், ஆதரவாளர்கள் வாங்கி வளர்க்க வேண்டிய இதழ் 'களத்துமேடு'.

# காரைக்காலில் கழகத்தின் தீவிரப் பிரச்சாரம்

# ரஜினி மிரட்டலுக்கு பதிலடி

புதுவை நாடாளுமன்றத் தொகுதிக் குட்பட்ட காரைக்கால் பகுதியில் - பா.ம.க. வேட்பாளர் பேராசிரியர் ராமதாசை ஆதரித்து, கழக சார்பில் சிறப்பாகப் பிரச்சாரம் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், புதுவை மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பன், புதுவைத் தோழர்கள் வீராசாமி, வீர மோகன், இளங்கோ மற்றும் புதுவை தோழர்கள், காரைக்கால் கழகத் தோழர் தமிழ் மாறன் ஆகியோர் இந்தப் பிரச்சாரப் பயணத்தில் கலந்து கொண்டனர். கழகத் தோழர் பொறியாளர் காரைக்கால் சரவணன், இந்தப் பிரச்சாரப் பயணத் துக்கு மிகச் சிறப்பாக ஏற்பாடுகளை செய்திருந்தார். முதலில் கோட்டுச்சேரியில் 7 மணியளவில் பிரச்சாரக் கூட்டம் நடந்தது. அடுத்தது பெரிய பள்ளிவாசல் அருகிலும், இறுதியாக திருநள்ளாறிலும், பிரச்சாரக் கூட்டம் நடந்தது. கோட்டுச்சேரி சட்டமன்ற திமுக உறுப்பினர் நசிம், கழகத் தலைவரை வரவேற்றார். பெரிய பள்ளி வாசல் அருகே நடந்த கூட்டத்தில் பங்கேற்றார். மாவட்ட பா.ம.க. செயலாளர் நிகழ்ச்சி முழுதும் உடனிருந்து, சிறப்பித்தார். திருநள்ளாறு கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் இளவழகன் பங்கேற்றார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் இருவரும், பா.ஜ.க. - அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் பார்ப்பன - இந்துத்துவா கொள்கைகளை விளக்கி, அந்த அணியை தோற்கடிக்க வேண்டும் என்றும், பா.ம.க. வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி உரையாற்றினர்.

"ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக் காகவும், தமிழர்களின் வாழ்வுரிமைக்காக வும், பாடுபட்டு வரும் கட்சி பாட்டாளி மக்கள் கட்சியாகும். 20-க்கும் மேற்பட்ட தோழர் களை உயிர்ப்பலி தந்து, மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கான இடஒதுக்கீடு உரிமையை பெற்றுத் தந்தவர் டாக்டர் ராமதாஸ். இந்தக் கோரிக்கையை ஏற்று சட்டமாக்கியவர் கலைஞர். தமிழக சட்ட மன்றத்தில் ஈழத் தமிழர்களின் தலைவர் பிரபாகரனை, கைது செய்யக் கோரி, ஜெய லலிதா ஆட்சி தீர்மானம் நிறைவேற்றிய போது, தமிழின உணர்வோடு பொங்கி எழுந்து, கருப்புச் சட்டை அணிந்து சட்ட மன்றம் சென்று, தீர்மானத்தை எதிர்த்து வெளிநடப்புச் செய்து, தமிழர்களின் இனமான உரிமையைப் பதிவு செய்த வரலாற்றுப் பெருமை பா.ம.க.வுக்கு உண்டு. நடிகர் ரஜினிகாந்த் போன்றவர்கள், பா.ம.க.வை மிரட்டிப் பார்க்கிறார்கள். டாக்டர் ராமதாஸ் ரஜினியைப் பற்றிக் கூறியதில் என்ன தவறு இருக்கிறது ? நடிகர்களுக்கு சங்கம் அமைக்கும் சீரழிவுக் கலாச்சாரத்தை எதிர்த்து, டாக்டர் ராமதாஸ் குரல் கொடுத் தார். ரசிகர் மன்றங்களைக் கலைத்துவிட்டு, பெரியார் படிப்பகங்களைத் துவக்கச் சொன்னார். தமிழக இளைஞர் களுக்கு புகை பிடிக்கவும், சேஷ்டைகள் செய்யவும் கற்றுத் தந்ததைத்தவிர, ரஜினி, என்ன செய்து விட்டார் என்று கேட்டார். இதில் என்ன தவறு இருக்கிறது ? பாபா படத்தில் பெரியாரைக் கொச்சைப்படுத்தும் பாடலை பார்ப்பனர் வாலி எழுதியிருந்தார். அதை டாக்டர் ராமதாஸ் எதிர்த்தார். ரஜினி யின் திரைப்படம் தான் நாட்டு மக்களின் தேசப் பிரச்சினையா ? தன்னுடைய படத்தை எதிர்த்தவர்களை, தமிழ்நாட்டு மக்கள், நாடாளுமன்றத்துக்கே அனுப்பக் கூடாது என்று ரஜினி சொல்கிறார். தமிழர்களே, ரஜினியின் இந்த இறுமாப்பை நீங்கள் ஏற்கிறீர்களா ?

டாக்டர் ராமதாஸ் தேர்தல் பிரச்சாரத் துக்கு மதுரைக்கு வரும்போது, ரஜினி ரசிகர்களுக்கு, அவருக்கு மிக அருகே நின்று கருப்புக்கொடி காட்ட காவல்துறை அனுமதித்திருக்கிறது. தேர்தல் பிரச்சாரங் களின் போது, கருப்புக் கொடிகள் காட்ட அனுமதிக்கப்படுவது கிடையாது. மரபுகளை மீறி ரஜினி ரசிகர்களுக்கு எப்படி காவல்துறை அனுமதித்தது ? இப்போது சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கும் ஜெயலலிதாவை எதிர்த்து, நாங்கள் இது போல் கருப்புக்கொடி காட்ட விரும்பினால், காவல்துறை அனுமதிக்குமா ? அதுவும் சுமார் ஓராண்டு காலத்துக்கு முன்பு நடந்த சம்பவத்துக்கு, இப்போது எதற்குப் போராட்டம் ? ரஜினி - பா.ம.க.வை எதிர்த்து ஓட்டளிக்கச்சொன்ன போதுகூட, டாக்டர் ராமதாஸ் என்ன கூறினார் ? அதுபற்றிக் கருத்துக் கூற விரும்பவில்லை என்றுதான் கூறினார். இந்த நிலையில், ரஜினி தனது ரசிகர்களைத் தூண்டிவிட்டு ஆத்திர மூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்ன நியாயம் ?

"என்னுடைய நண்பர்களிடம் டாக்டர் ராமதாஸ் தஞ்சமடைந்து விட்டார். அதனால் தான், தப்பித்துக் கொண்டு விட்டார்" என்று ரஜினி பேசுவது, திமிர் பிடித்த பேச்சு அல்லவா ? தஞ்சம் புகுந்தது யார் ? மராட்டியத்திலிருந்து, தமிழ்நாட்டுக்கு தஞ்சம் புகுந்து, தமிழ்நாட்டு மக்களை சுரண்டி, தமிழக இளைஞர்களை சீரழித்துக் கொண்டிருக்கும் ரஜினி, இப்படி வாய்க் கொழுப்புடன் பேசலாமா ? - என்று கூட்டத்தில் கழகத்தினர் பேசினர். பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியை ஆதரிக்கக் கூடாது - ஏன் ? என்பதை விளக்கி, கழக சார்பில் வெளியிடப்பட்ட பிரச்சார நூல் களை பொதுமக்கள் ஏராளம் வாங்கினர்.●

# ராம பக்தர்களின் "தேசபக்தி"

*இந்தியாவின் தகவல் தொடர்பு முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் மத்திய அரசு நிறுவனம் வி.எஸ்.என்.எஸ். (விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிட்டெட்) இந்தத் துறையின் அமைச்சர் பிரமோத் மகாஜன் என்ற பார்ப்பனர், அரசு நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதற்காகவே வாஜ்பாய் ஆட்சி, தனித்துறையையே உருவாக்கியிருந்தது. அந்தத் துறையின் அமைச்சர் அருண் ஷோரி எனும் பார்ப்பனர்; இரண்டு பார்ப்பனர்களும் சேர்ந்து – வி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் பங்குகளை டாட்டா நிறுவனத்திடம் விற்க முடிவு செய்தனர். டாட்டா நிறுவனம் – 'டாட்டா டெலி சர்வீசஸ்' என்ற பெயரில் ஒரு தகவல் தொடர்பு நிறுவனத்தை அண்மையில் தான் துவக்கியது. இன்னும் முழுமையாகக் கூட வளராத அந்நிறுவனத்துக்கு வி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் 45 சதவீத பங்குகளை வெறும், ரூ.2591 கோடிக்கு இந்தப் பார்ப்பனர்கள் விற்றார்கள்.*

*வி.எஸ்.என். எல். நிறுவனத்துக்கு பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள உடைமை கள் உண்டு. அதோடு இந்நிறுவனத்திடம் கையிருப்பாக இருந்த பணமே ரூ.3000 கோடி. டாட்டா நிறுவனம் என்ன செய்தது? வி.எஸ்.என்.எல் நிறுவனத்துக்கு ரூ.2591 கோடியைக் கொடுத்து, நிர்வாகத்தில் தனது உரிமையை நிலைநாட்டிக் கொண்டது. உள்ளே நுழைந்து விட்ட பிறகு, தனக்குள்ள உரிமையைப் பயன்படுத்தி, வி.எஸ்.என்.எல். நிறுவனத்திடமிருந்து ரூ.3000 கோடி கையிருப்பிலிருந்து ரூ.1200 கோடியை தனக்காக எடுத்துக் கொண்டு, வி.எஸ்.என்.எல். நிறுவனத்துக்கு போட்டியாக தனியே தொலைத் தொடர்புத் துறையை உருவாக்கிக் கொண்டது. இதுதான் 'டாட்டா டெலிகாம்'. தொலை பேசிக்கு மக்கள் செலுத்தும் கட்டணம், இந்தப் பார்ப்பனர்களால் எப்படி எல்லாம் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறது பார்த்தீர்களா?*

*காஞ்சி சங்கராச்சாரி மடத்துக்கு டாடா நிறுவனம் – பணத்தை வாரி இறைக் கிறது. சங்கர மடத்துக்கு பல கோடி ரூபாய் செலவில் புதிய கட்டிடத்தைக் கட்டித் தந்ததே டாட்டா நிறுவனம் தான்! வி.எஸ்.என்.எல். நிறுவனமோ – சங்கராச் சாரியின் குரலை, தொலைபேசியில் கேட்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது. டாட்டா – வி.எஸ்.என்.எல். – அருண்ஷோரி – மகாஜன் அனைவரையுமே இணைக்கும் பூணூல் சங்கிலியாக சங்கராச்சாரி திகழ்கிறார். இந்தியா ஒளிர்கிறது யாருக்காக? 'இவாளுக்காக'த்தான்!*

*அருண்ஷோரி பேரம் பேசி – அமைச்சரவை ஒப்புதலோடு 30க்கும் மேற்பட்ட அரசுத் துறை நிறுவனங்கள் தனியாரிடம் கைமாறிவிட்டன. மும்பையில் மத்திய சுற்றுலாத் துறைக்கு சொந்தமான 'செந்தூர்' என்ற ஓட்டலை, ஆர்.எஸ்.எஸ். வட்டாரத்துக்கு மிக நெருக்கமான ஏ.எல். பாத்ரா என்பவருக்கு ரூ.83 கோடிக்கு அரசு விற்றது. அடுத்த நான்கே மாதங்களில் பாத்ரா, வேறு ஒருவருக்கு ரூ.115 கோடிக்கு அதை விற்றுவிட்டார். இவ்வளவு வேகம் வேகமாக அடி மாட்டு விலைக்கு அரசு நிறுவனங்களை விற்றதற்கான காரணம் என்ன சொல்லப்பட்டது தெரியுமா?*

*2003-04ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், தனியார் மயமாக்கல் மூலம், அரசுக்கு ரூ.13,200 கோடி வருவாய் கிடைக்கும் என்று அறிவித்து விட்டார்கள்! முதல் 6 மாதத்துக்குள் இதில் மிகக் குறைந்த தொகை தான் கிடைத்திருக்கிறது. எனவே, எஞ்சிய தொகையை சரிகட்ட, எதை வேண்டு மானாலும் எந்த விலைக்காவது விற்று விடுவது என்று முடிவெடுத்து விட்டார்கள். 'ராம' பக்தர்களின் சுதேசிப் பற்றைப் பார்த்தீர்களா?*

**~ காரைக்கால் கூட்டங்களில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி**

# 'புதிய கோடங்கி'க்கு 'களத்துமேடு' பதில்

*மார்ச் 2004 'புதிய கோடங்கி' இதழ் கேள்வி-பதில் பகுதியில் பெரியார் பற்றிய இரண்டு கேள்விகளுக்கு 'முனிமா' பதில் அளித்துள்ளார்.*

**கேள்வி 1 :** பெரியார் நாடகம் நடத்து கிறார்கள். நீங்கள் பார்த்தீர்களா ? உங்கள் கருத்தை அறிய ஆவலாக இருக்கிறோம்.

**பதில்:** தமிழகத்தில் பெரியார் நாடகம் தான் நாற்பது ஆண்டுகளாக ஓடிக் கொண்டிருக்கிறது. அம்பலத்தில் ஆடியதை அறையில் அடக்கி வாசிக்கிறார்கள். இதைப் போய் மெனக்கெட்டுப் பார்க்க வேண்டுமா ?

**கேள்வி 2 :** பெரியார் தலித்துகளுக்கு எதுவுமே செய்யவில்லையா ?

**பதில்:** தாழ்த்தப்பட்ட தலித் சமூகத்தில் பல தலைவர்கள் ஈ.வெ.ராவுக்கு முன்பும், பின்பும் தொடர்ந்து போராடியிருக்கிறார்கள். ஆகையால் ஈ.வெ.ராவை தலித்துகள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் தலித்துகளின் பார்ப்பன எதிர்ப்பை தனதாக் கியதோடு மட்டுமல்லாது, பொது எதிரியைக் காட்டி திராவிட அரசியலில் தலித்துகளின் தனி இயக்கங்களைக் கரைத்து தலித்தல்லா தாருக்கு அதிகாரம் தேடித் தந்தவர் ஈ.வெரா. தலித்துகள் தனி இயக்கமாவதன் அவசியம் முப்பதாண்டுகளுக்குப் பிறகே உணரப் பட்டது. இந்தத் தாமதம் தான் ஈ.வெ.ரா. தலித்துகளுக்குச் செய்தது.

"கலகக்காரர் தோழர் பெரியார்" என்ற வரலாற்று நாடகம் தற்போது தமிழகத்தின் பல முக்கிய நகரங்களில் நடந்து வருகிறது. இந்த வரலாற்று நாடகத்தை நடத்துபவர்கள் பெரியார் இயக்கத்தைச் சார்ந்தவர்களோ, பெரியார் தொண்டர்களோ அல்ல.

கடந்த 25 ஆண்டுகளாக 'நிஜ நாடகம்' நடத்திவரும் இடதுசாரி சிந்தனையாளரும், தஞ்சைத்தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் நாடகத்துறைப் பேராசிரியராகவும் இருக்கும் பேராசிரியர் மு. இராமசாமி ஆவார். ஏன் பெரியார் நாடகத்தை நடத்துகிறோம் என்பதை விளக்கும் நாடகத்தின் ஒரு பகுதி இதோ.

"சாதி மதவாத அச்சுறுத்தல் மே லோங்கி இருக்கிற இன்றைய நிலையில் மத அடிப்படை வாதத்திற்கு எதிராகவும், இந்துமத பயங்கரவாதத்திற்கு எதிராக வும் செயல்பட வேண்டிய அவசியத் தேவை இடதுசாரி சிந்தனையாளர் களுக்கு இருக்கிறது. அதற்குப் பெரியார் சிந்தனைகள்தான் உடனடித் தேவையா இருக்கும்னு நெனைக்கிறோம். பெரியாரின் தேவை அவசியங்கிற துனாலதான் இந்த நாடகம்."

**(வல்லினம், பிப்-ஜூலை 03)**

ஒரு காலகட்டத்தில் இடதுசாரி சிந்தனை யாளர்கள் பெரியாரைப் புறக்கணித்தும், பெரியாரியலை விமர்சித்தும் வந்தது மாறி இப்போது அவர்களே பெரியாரைப் புதிய பிரச்சார முறையில் அதாவது கைக்காசைச் செலவழித்து, பொதுக்கூட்டங்கள் போட்டு பெரியாரின் கருத்தை மக்களுக்குச் சொல்லி வந்தோம். ஆனால் நிஜ நாடகக் குழுவினர் பெரியாரின் கருத்தை மக்களே காசு கொடுத்துக் கேட்க வைத்துள்ளனர். காசு கொடுத்து நாடகத்தைப் பார்க்க மக்கள் கூட்டம் கூடுகிறதென்றால் பெரியாரின் தேவை இன்றைய சூழலில் எவ்வளவு அவசியமானது என்பதை 'முனிமா' புரிந்து கொள்ளட்டும்.

பெரியார் தமிழக மக்களின் ஒவ்வொரு அணுவிலும், இரத்தத்திலும் உறைந்திருக் கிறார். பார்ப்பனப் பாசாங்கு வாழ்க்கை வாழ்ந்துவரும் 'முனிமா'வுக்கு வேண்டு மானால் பெரியார் தேவையில்லாமல் இருக்கலாம். ஒடுக்கப்பட்டு, உரிமை மறுக்கப்பட்டு வாழ்ந்து வரும் எத்தனையோ 'முனிமா'க்களுக்கு பெரியார் ஊன்றுகோல் இன்னும் தேவைப்படுகிறது. 'முனிமா'வும் பாசாங்கு வாழ்க்கையை உதறிவிட்டு உண்மையை உணர்ந்து ஒடுக்கப்பட்ட முனி மாக்களுக்கு உழைக்க முன்வர வேண்டும் என்பதே எங்களின் வேண்டுகோள்.

இந்த நாடகத்தை மெனக்கெட்டுப் பார்க்க வேண்டுமா ? என்கிறார் முனிமா.

பார்த்திருந்தால் முனிமாவின் இரண்டா வது பதிலுக்கான பதில் கிடைத்திருக்கும். இந்த நாடகத்தில் தாழ்த்தப்பட்டோருக்காகப் பெரியார் ஆற்றிய தொண்டு பற்றி பெரியார் பேசுவதாக வரும் பகுதி இது:

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# பெரியார் சிந்தனையும் - வாழ்வியல் சிந்தனையும்

## கழகத் தலைவர் பேட்டி தொடர்ச்சி...

எச்சரிக்கை' என்ற பெயரில் ஒரு புத்தகத்தை புதுவை மாநிலக் கழகம் வெளியிட்டிருக்கிறது. அதை மக்களிடம் பரவலாக கொண்டு சேர்க்கும் பணியையும் செய்து வருகிறோம்.

*பெரியார் திராவிடர் கழகத்தின் வளர்ச்சி எப்படி இருக்கிறது?*

ஏராளமான இளைஞர்கள் இயக்கத்துக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். பெரியார் கொள்கையை திருத்தல் வாதம் இல்லாமல், மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதில்தான் நாங்கள் அதிக கவனம் செலுத்துகிறோம். அதற்கு ஒரு தேவை உள்ளது என்பதை உணர்கிறோம்.

பொதுவுடைமை இயக்கத்தில்கூட பெரியாரின் தேவையை உணர்ந்து கொண்டு, மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதில் அவர்களும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு இறுதியில் நடந்த புதுவை மாநில மாநாட்டில் நாங்கள் இரண்டு செயல் திட்டங்களை எடுத்துக் கொண்டோம். 1. தனியார் துறையில் இட ஒதுக்கீடு கோருவது, 2. கோயில் கருவறையில் நிலவும் மொழி இன தீண்டாமைக்கு எதிரான (அதாவது, அனைத்து சாதியினரும் அர்ச்சகராவது) என்ற செயல் திட்டம். இந்த இரண்டையும் நாங்கள் சரியாக செய்து கொண்டிருக்கிறோம்.

தனியார் துறை இடஒதுக்கீடு சம்பந்தமான துண்டறிக்கைகளை மக்களிடம் கொண்டு சென்றோம். அடுத்தது, 'சம்புகன் சமூக நீதிப் பயணம்' என்ற பெயரால் இரண்டு வார காலம் தமிழ்நாடு முழுவதும் அந்தப் பயணத்தை நடத்தி ஏராளமான மக்களை சந்தித்து அதில் எங்கள் செய்திகளையும் துண்டறிக்கைகளையும் கொண்டுபோய் சேர்த்திருக்கிறோம்.

பெரியார் கடைசி போராட்டமாகச் சொன்ன, 'அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் உரிமை' என்ற போராட்டத்தை நோக்கி மாநாடுகள் நடத்தி, மதத் தலைவர்கள், சமயத் தலைவர்களை எல்லாம்கூட அழைத்து, அவர்களின் கருத்துகளைச் சொல்ல வைத்து, மக்களிடம் கொண்டு போய் சேர்த்ததோடு அல்லாமல், காஞ்சி காமாட்சி அம்மன் கோவில் கருவறை நுழைவு போராட்டத்தையும் அறிவித்தோம். அதற்கு அரசு ஏராளமான கெடுபிடிகளை விதித்தது. வெளியூரிலிருந்து வந்த ஆதரவாளர்களின் வாகனங்களெல்லாம் தடுத்து நிறுத்தப்பட்டன. என்றாலும், எங்களது இயக்கத் தோழர்கள் மட்டுமே 860 பேர் கைதானார்கள். இதுவரை பெரியார் இயக்கம் நடத்திய போராட்டங்களில் 860 பேர் கைதானது இதுதான் முதல் முறை என்று எண்ணுகிறோம். எனவே, பெரியார் திராவிடர் கழகம் வளர்ச்சி அடைந்திருப்பதாகவே நினைக்கிறோம்.

பெரியார் மறைந்து 30 ஆண்டுகளுக்குப் பின்னால்கூட அவரது எழுத்துகள், பேச்சுகள், சிந்தனைகள் முழுமையாக இன்னும் தொகுக்கப்படவில்லை. பெரியாரின் எழுத்துகள், பேச்சுகளைக் கொண்ட முதல் தொகுதியான 'குடி அரசு 1925' உட்பட சில புத்தகங்களை ளெியிட் டிருக்கிறோம். இந்தப் புத்தகங்களை மக்கள் வாங்கி ஆதரவு தருகிறார்கள். மக்கள் தந்த நிதியின் மூலம் தான் 'சம்புகன் பயணம்' வெற்றியடைய முடிந்தது. அந்த வகையிலும் எங்கள் இயக்கம் வளர்ச்சியடைந்திருப்பதாகவே நினைக்கிறோம்.

அடுத்து, தனியார் துறை இடஒதுக்கீடுக்காக தமிழ்நாடு முழுவதும் 'ஐசிஐசிஐ' வங்கிகளுக்கு முன்னால் போராட்டங்களை நடத்தியிருக்கிறோம்.

*கி. வீரமணி தலைமையிலான திராவிடர் கழகத்திலுடைய அண்மைக் கால மாற்றங்கள் குறித்து...?*

திராவிடர் கழகத்தில் அண்மைக் காலத்தில் எந்தவித மாற்றமும் நிகழவில்லை என்றே கருதுகிறோம். பி.ஜே.பி.யை கடந்த இரண்டு தேர்தலில் எதிர்த்ததைப் போலவே இப்போதும் எதிர்க்கிறார்கள். அ.தி.மு.க.வை முன்பு போலவே இந்தத் தேர்தலிலும் எதிர்க்காமல் இருக்கிறார்கள்.

அவர்கள் வெளியிட்டுள்ள 'வாக்கு யாருக்கு; மதவெறியர்களுக்கா ? மனித நேயர்களுக்கா' என்ற ஒரு புத்தகத்தில்கூட முற்று முழுதாக பா.ஜ.க.வை மட்டுமே விமர்சனம் செய்திருக்கிறார்களே தவிர, அ.தி.மு.க.வை விமர்சனம் செய்ய வில்லை. சமஸ்கிருதத்தில்தான் குடமுழுக்கு நடத்த வேண்டும் என்று சொல்கிற அளவுக்கு சங்கராச்சாரியாருக்கு ஜெயலலிதா அதிக முக்கியத்துவம் கொடுத்து வைத்திருப்பதையோ, சமூக நீதித் திட்டங்களைப் பறித்ததையோ, அரசு திருமணங்களைக் கூட புரோகிதத் திருமணங்களாக நடத்துவதையோ, கோயில்களில் அன்னதானம் - ஆன்மீகப் பயிற்சி என்று செய்வதையோ, மதமாற்றத் தடைச் சட்டத்தைப் பற்றியோ எந்த விமர்சனமும் அந்தப் புத்தகத்தில் இல்லை. ஆகவே, எப்போதும்போல் பி.ஜே.பி.யை எதிர்க்கிறார்கள். அ.தி.மு.க.வை எதிர்க்காமல் இருக்கிறார்கள். இதில் எந்த மாற்றமும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை.

*இரண்டு திராவிடர் கழகங்களும் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு இருக்கிறதா?*

பண்பு ரீதியாகவே இரு அமைப்புகளுக்கும் பெரும் வேறுபாடு இருக்கிறது. வெகுஜன அரசியல் கட்சிகளுக்கு உள்ள எல்லா நோய்களும் திராவிடர் கழகத்துக்கும் இருக்கிறது. அளவுக்கு மீறி தலைவர்களை புகழ்வது, தலைவர்களை அடைமொழியை சேர்த்துக் கொண்டுதான் பேசுவது போன்ற போக்குகள் அந்த அமைப்பில் இருக்கின்றன. அது, பெரியாரின் சமுதாயக் கருத்துகளைக் கொண்ட ஒரு இயக்கம் என்ற உருவம் சிதைந்து, இப்போது ஏறத்தாழ ஒரு அரசியல் கட்சி என்பதுபோல அது ஆகிவிட்டது.

எடுத்துக்காட்டாக, பெரியாரியலை மக்களிடம் கொண்டுபோய் சேர்க்கும் பணியை பொதுவுடைமை இயக்கக்காரர்கள்கூட செய்து கொண்டிருக்கிறார்கள். பெரியார் இயக்கம் இன்னும் அதிகமாக செய்ய வேண்டும். பெரியார் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதில் முனைப்பு காட்டாமல், கி.வீரமணியின் வாழ்வியல் சிந்தனைகளை கொண்டு போய் சேர்ப்பதில்தான் திராவிடா கழகமும் 'விடுதலை' இதழும் இப்போது தீவிரமாக முனைப்பு காட்டி வருகிறது.

சமுதாயப் புரட்சி இயக்கங்கள் எதுவானாலும், நிலவி வருகிற சமுதாயச் சூழலிலிருந்து ஒரு அடியாவது சமுதாயத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதில்தான் நாம் முனைப்பு காட்ட வேண்டுமே தவிர, இருக்கிற சூழலில் நாம் நம்மை எப்படி பொருத்திக் கொண்டு வாழ்வது என்று விளக்க வேண்டிய அவசியமில்லை.

வாழ்வியல் சிந்தனைகளை எழுதுவதற்கு சுகி.சிவம், மெர்வின் போன்றவர்கள் இருக்கிறார்கள். இப்போது ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் கூட வந்திருக்கிறார்கள். இதற்கு கி.வீரமணி எதற்கு ? பெரியார் களஞ்சியம் ஆறு தொகுதி வந்து நின்றுவிட்டது. அவற்றை வெளியிட்டு மக்களிடம் சேர்க்க பெரிய இயக்கமாக நடத்தியிருப்பார் என்றால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும்.

அங்கே, கி.வீரமணியின் வாழ்வியல் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதற்காகவே தி.க. தொண்டர்களின் முழு நேரத்தையும் முழு சக்தியையும் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

'பெரியார் ஒரு வாழ்க்கை நெறி' என்றொரு புத்தகம் ஒரு கட்டத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதுகூட பெரியார் பார்வையில், வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் விளக்குகிற நூல். அப்படி எழுதப்பட்ட நூல்கூட இல்லை இது. பசி வந்தால் சாப்பிடுங்கள், தாகம் வந்தால் தண்ணீர் குடியுங்கள், தூக்கம் வந்தால் தூங்குங்கள், பதட்டப்படாதீர்கள் என்பதற்கு இவ்வளவு பெரிய நூல்; அதற்கு ஒரு இயக்கம் இவ்வளவு பெரிய முயற்சி எடுக்கத் தேவையில்லை என்றுதான் நாங்கள் கருதுகிறோம்.

நாங்கள் 'குடி அரசு 1925' நூலினை வெளியிட்டு மக்களிடம் கொண்டு போய் சேர்த்துவிட்டோம்.

ஆகவே, இரண்டு திராவிடர் கழகங்களும் ஒரே தலைவரைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தவிர, கொள்கையில் வெவ்வேறு வகையாக, வெவ்வேறு பார்வையோடு மக்களிடம் எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, இரண்டும் இணைவதற்கான வாய்ப்பு அண்மைக் காலத்தில் இருப்பதாகக் கருதவில்லை.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

## தோழர் பத்ரி நாராயணனின் படத் திறப்பு நிகழ்ச்சி



தந்தை பெரியார் திராவிடர் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் பத்ரி நாராயணன் படத் திறப்பு நிகழ்ச்சி 16.5.2004 காலை 10 மணியளவில் ராயப்பேட்டை சைவ முத்தையா வீதியில் உள்ள தலைமைக் கழக அலுவலகம் அருகே நடக்கிறது. கழகத் தலைவர்கள், அனைத்துக் கட்சி இயக்கத்தினர் இரங்கல் உரையாற்றுகிறார்கள்.

படத்தை திறந்து வைப்பவர் **கொளத்தூர் மணி**, கழகத் தலைவர்.

**குடும்பத்தினர் ~ தந்தை பெரியார் திராவிடர் கழகம்**

(3 பக்கத் தொடர்ச்சி)

"1932 செப்டம்பர் 24 ஆம் நாள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு காந்தியால் இழைக்கப்பட்ட பூனா துரோக ஒப்பந்தம் நிறைவேற்றுவதற்கு முன்பாக, காந்தி செத்தாலும் பரவாயில்லை இரட்டை வாக்குரிமையுடன் கூடிய தனி வாக்காளர் தீர்வைக் கைவிட வேண்டாம் என்று அம்பேத்காரைக் கேட்டுக் கொண்டேன். இந்திய அரசியல் சட்டத்தில் சொல்லப் பட்டுள்ள சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற வாசகத்தின் பொருளைத் தங்களுக்குச் சாதகமாகத் திரித்துக் கொண்ட பார்ப்பனர்கள் அரசியல் சட்டத்தின் 16வது பிரிவில் பிற்படுத்தப் பட்ட, பழங்குடியின மக்கள், தாழ்த்தப் பட்டோருக்கு வழங்கப்பட்டிருந்த கல்வியில் இட ஒதுக்கீடு உரிமைக்கு எதிராக நீதி மன்றம் சென்ற போது தமிழ்நாட்டில் நான் தலைமையேற்று நடத்திய கிளர்ச்சியால்தான் 16(4) உட்பிரிவின்படி பிற்படுத்தப்பட்டோர், பழங்குடியின மக்கள், தாழ்த்தப்பட்டோருக்கான கல்வியில் இடஒதுக்கீட்டை உறுதி செய்யும் முதல் சட்டத்திருத்தம் வந்தது."

(இந்திய அரசியல் சட்டத்தில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு கல்வியில் இடஒதுக்கீடு இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் பெற்றுத் தந்தவர் பெரியார். வல்லினம் பக்.67) மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டே பெரியார் செயல்பட்டார். ஆனால் மனித நேயத்திற்கு எதிராய் இருப்பவர்கள் (இன்றுவரை) பார்ப்பனர்கள்தான் என்பதை தன் அனுபவங்கள் மூலமாய் உணர்ந்து அவர்களை எதிர்த்தார். அதனடிப்படையில் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உழைத்தவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை ஆதரித்தும், வரவேற்றும் செயல் பட்டவர் பெரியார். அவ்வகையில் தாழ்த்தப் பட்டோர் தனி இயக்கமாகச் செயல்பட்டதைப் பெரியார் எப்போதும் எதிர்த்ததில்லை. இதைப் பெரியார் தெளிவுபடுத்தும் பகுதி இதோ.

"என்னையோ அல்லது திராவிடர் இயக்கத்தையோ வீணாகக் குறை கூறினாலும், இல்லாவிட்டாலும் ஒன்று கூறுகிறேன். தோழர்களே ! திராவிடர் இயக்கம் தன் கடைசி மூச்சிருக்கும் வரையில் இந்த நாட்டில் பள்ளன் பறையன் என்ற இழி சாதிகளை ஒழித்து அவர்களை முன்னேற்றவே உழைக்கும் என்ற உறுதியை வழங்குகிறேன். தாழ்த்தப்பட்டோர் பெடரேசனில் சேருவதை யான் இன்னும் வேண்டாமென்று கூறவில்லை. அதில் வரும் நன்மைகளையும் நீங்கள் அடையுங்கள். திராவிடர் கழகத்தில் தாழ்த்தப்பட்டோர் சேர்ந்தாலும், சேராவிட்டாலும் அதன் உழைப்பின் பலனை தாழ்த்தப்பட்ட தோழர்களுக்கு அனுபவிக்க உரிமை உண்டு"

(விடுதலை 8.7.1947)

இன்று வரை பெரியார் இயக்கம் இவ்வழியிலேயே பயணத்தைத் தொடர்ந்து வருகிறது. ஆனால் தாழ்த்தப்பட்டோர் பெடரேசன் அரசியல் கட்சியாகி இப்போது எப்படியுள்ளது என்பதையும், பார்ப்பன சங்கராச்சாரி செயேந்திரரின் காலடியில் தாழ்த்தப்பட்டோர் மீட்சிக்காக அருள் பெற்றுக் கொண்டிருக்கும் நிலப்புலிகள் மற்றும் டாக்டர் அம்பேத்கார் மக்கள் சபை முன்னோடிகள் பற்றி முனிமா நடுநிலையுடன் சிந்தித்து முடிவெடுக்கட்டும்.

பார்ப்பனர்களால் இன்று வரை அண்ட முடியாத அக்கினியாய் இருப்பவர் பெரியார். எனவே பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பின் அவசியத்தை உணர்ந்து தலித்துகள் தனி இயக்கமாக இயங்கி (பெரியாரும் இதையே 1930-1933 கால கட்டங்களில் வலியுறுத்தியுள்ளார்) தலித் விடுதலையை வென்றெடுக்கட்டும். அதற்குப் பெரியார் இயக்கங்கள் என்றும் உறுதுணையாய் இருக்கும்.

நன்றி: 'களத்துமேடு' இதழ்

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 14th May 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மே 20, 2004 | புரட்சி 3 | முழக்கம் 19 | விலை : ரூ.2.50

# ஜெயா - பார்ப்பன ஆட்சிக்கு மக்கள் தந்த பதிலடி

**14வது நாடாளுமன்றத்தில் - சோனியா பிரதமர் ஆகிறார்; மதச் சார்பற்ற அணி இடதுசாரிகள் ஆதரவுடன் ஆட்சி அமைக்கிறது.**

அன்னியர் சோனியா பிரதமர் ஆவதா என்ற கேள்வியோடு - மக்களை சந்தித்த மதவெறிக் கூட்டணி வெற்றி பெறவில்லை; இந்தியா ஒளிர்கிறது என்ற பிரச்சாரத்தையும் மக்கள் ஏற்கவில்லை; தமிழகத்தில் - ஜெயலலிதா நடத்திய பார்ப்பன சங்கராச்சாரி ஆட்சி படுதோல்வியை சந்தித்துள்ளது. ஜெயலலிதாவுக்கு ஆலோசனை கூறி வழி நடத்திய பார்ப்பன "அறிவு ஜீவிகளின்" சூழ்ச்சித் திட்டங்களை தமிழக மக்கள் ஒட்டு மொத்தமாக நிராகரித்து விட்டார்கள்.

தமிழ்நாட்டில் பா.ஜ.க. - அ.இ.அ.தி.மு.க. கூட்டணியை உருவாக்குவதில் ஒரு "பார்ப்பனக் குழு" மூளையாக இருந்து செயல்பட்டது. அய்தராபாத்திலிருந்து வெளிவரும் "டெக்கான் கிரானிக்கல்" ஆங்கில நாளேடு - தேர்தல் நாளன்று வெளிவந்த இதழில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தது. "தமிழ்நாட்டில் 'துக்ளக்' பத்திரிகை ஆசிரியர் சோ, ஆர்.எஸ்.எஸ். முக்கியப் பிரமுகரான குருமூர்த்தி - இருவரும் சேர்ந்துதான், தேசிய ஜனநாயக முன்னணியிலிருந்து தி.மு.க.வை வெளியேற்றுவதற்கும், பிறகு பா.ஜ.க.வுடன் - ஜெயலலிதா கட்சியின் கூட்டணியை உருவாக்குவதற்கும் பின்னணியாக இருந்து செயல்பட்டனர்" என்று குறிப்பிட்டுள்ளது.

சோனியா - அன்னியர் என்ற வாதத்தை முன்னிறுத்திப் பிரச்சார இயக்கத்தை நடத்துமாறு 'ஜெ'வுக்கு அறிவுரை கூறியதும் இவர்கள் தான். ஜெயலலிதா டெல்லிப் பயணத்துக்கு ஏற்பாடு செய்து, அத்வானியுடன் சந்திப்புக்கு இவர்கள் ஏற்பாடு செய்ததோடு, டெல்லியிலேயே, ஜெயலலிதா, சோனியாவுக்கு எதிராக பேட்டி அளிக்கவும் ஏற்பாடுகளை செய்தனர். அதே போல் அத்வானியை சந்தித்த ஜெயலலிதா, உடனே டெல்லியில் - "இத்தாலி நாட்டுக்காரர் இந்தியாவின் பிரதமராகக் கூடாது" என்று பேட்டி அளித்தார். உடனே - பார்ப்பன குருமூர்த்தி சோனியாவின் பூர்வீகங்களைப் பற்றி - 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் ஒரு விரிவான கட்டுரையை எழுதினார். அடுத்த நாளே, ஜெயலலிதா தான் நடத்தும் 'நமது எம்.ஜி.ஆர்' பத்திரிகையில், அதை முழுமையாகத் தமிழாக்கம் செய்து வெளியிட்டார். அதற்கு அடுத்த சில நாட்களிலே சென்னையில் தலைமைச் செயலகத்துக்கே செய்தியாளர்களை அழைத்து, நமது எம்.ஜி.ஆர். பத்திரிகையைக் கையில் வைத்துக் கொண்டு அதில் கூறப்பட்டிருந்த சோனியா பற்றிய விவரங்களை எல்லாம் எடுத்துக் கூறினார். அன்று முதல், கடைசிப் பிரச்சாரக் கூட்டம் வரை, சோனியா ஒரு அன்னியர் என்ற கருத்தையே ஒவ்வொரு பிரச்சாரக் கூட்டத்திலும் திரும்பத் திரும்பக் கூறி வந்தார். காஞ்சி சங்கராச்சாரியும், அத்வானியும், இதற்குப் பின்னணியாக இருந்து, செயல்பட்டார்கள். அ.இ.அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி உருவாகி, பா.ஜ.க. வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டவுடன், சங்கராச்சாரி, பா.ஜ.க. அலுவலகத்துக்கு சென்று, வேட்பாளர்களுக்கு ஆசி வழங்கினார்; 'தினமணி' நாளேடு இந்த செய்தியை வெளியிட்டது.

தேசிய ஜனநாயக முன்னணியிலிருந்து ம.தி.மு.க.வைப் பிரிப்பதற்காக வை.கோ.வை 'பொடா'வில் கைது செய்தார். பொடாவின் கீழ், ஒரு நாள் சிறைத் தண்டனை பெற்றாலும், தேர்தலில் போட்டியிடவே முடியாது என்று தேர்தல் சட்டத் திருத்தத்திலே - அத்வானியுடன் ரகசியமாகப் பேசி திருத்தம் கொண்டுவரச்செய்தார் ஜெயலலிதா. பிரதமர் வாஜ்பாயே, இதற்கு வியப்பு தெரிவித்தார். இப்படி ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது தனக்கே தெரியாது என்றார்.

வைகோவை 'பொடா'வில் கைது செய்து -தேசிய ஜனநாயக முன்னணியை உடைக்க 'ஜெ' திட்டமிட்டார். 'பார்ப்பனக் குழு' தந்த ஆலோசனை இது.

ஆனால், துக்ளக் சோ, குருமூர்த்தி, சங்கராச்சாரி, பார்ப்பனக் குழு உருவாக்கிய சதித் திட்டங்கள் - 'அவாளுக்கு' எதிராகவே திரும்பிவிட்டன. தேசிய ஜனநாயக முன்னணியிலிருந்து 'பொடா'வை முன் வைத்துத்தான், தி.மு.க.வும் விலகியது; பிறகு பா.ம.க.வும் விலகியது. ஜெயலலிதாவுக்கு மிகப் பெரும் மக்கள் செல்வாக்கு இருப்பதாக நம்பிக் கொண்டு பார்ப்பனியக்கூட்டணியை உருவாக்கிட முயன்ற பார்ப்பனக் கும்பலின் - சதியை, மக்கள் மன்றம், இப்போது முறியடித்திருக்கிறது.

ஆனாலும், பார்ப்பனர்கள் அடுத்த கட்டத்தை நோக்கி காய் நகர்த்தத் துவங்குவார்கள்; வெற்றி பெற்ற அணி, இவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு. ❍

## 'ஜெ' யைக் காப்பாற்றாத யாகங்கள்

கடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஜெயலலிதா, தனது வெற்றிக்கு மக்கள் தான் காரணம் என்று நம்பவில்லை; தான் நடத்திய யாகமும், சடங்குகளும், பிரார்த்தனைகளும், சோதிடர்கள் கூறிய ஆலோசனைகளுமே காரணம் என்று நம்பினார். தேர்தலில் வெற்றிபெற்றவுடன், மக்களுக்கு நன்றி தெரிவிப்பதைவிட, கோயில் கோயிலாகச் சென்று, காணிக்கை செலுத்துவதற்கே முன்னுரிமை தந்தார். பட்டுப் புடவைகளையும், யானைகளையும் காணிக்கை தந்தார்; பார்ப்பனர்களை அழைத்து யாகங்களை நடத்தினார்; சோதிடர்கள் ஆலோசனைப்படி செயல்பட்டார்.

- எண் கணித ராசியை நம்பி, தனது பெயருக்குப் பின்னால் மற்றொரு 'a'யை கூடுதலாகச் சேர்த்துக்கொண்டார்.
- கண்ணகி சிலை அமைந்திருக்கும் திசை வாஸ்து சாஸ்திரப்படி தனக்கு எதிரானதுஎன்று நம்பி, அந்த சிலையை அகற்றினார்.
- சங்கராச்சாரி - சோதிடர்கள் ஆலோசனை கேட்டு கோயில்களில் 'அன்னதானம்' வழங்க உத்தரவிட் டார்.
- முட்டை அசைவ உணவு என்பதால் - சங்கராச்சாரி ஆலோசனைப்படி சத்துணவிலிருந்து முட்டையை அகற்றினார்.
- பச்சைக் கலர் - ராசியானது என்று நம்பி, பச்சை உடை அணிந்தார்; அரசு விழாக்கள் எல்லாம் பச்சைமயமாயின.
- 'ராகு காலம்' - நல்ல நேரம் பார்த்து அமைச்சரவை பதவி ஏற்றதோடு, "ஆண்டவன்" பெயரில் உறுதிமொழி எடுத்தார்கள். பதவி ஏற்ற அமைச்சர்கள் தங்கள் அலுவலகத்துக்கு வந்து பதவி ஏற்க நல்ல நேரம் பார்த்து வந்தனர்.
- ஜெயலலிதாவின் 'ராசி எண்' அடிப்படையிலேயே அவர் அரசு செலவில் நடத்தி வைத்த திருமணங்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டன; திருமணங்களும் புரோகித திருமணங்களாகவே நடத்தப்பட்டன.
- வேட்பாளர்கள் பட்டியல் - "நல்ல நேரம்" பார்த்தே வெளியிடப்பட்டன.
- சோதிடர்கள் ஆலோசனைப்படி - கோயில் யானைகளுக்கு ஓய்வுகள் தரப்பட்டன.

ஆனால் சோதிடர்களும் - காணிக்கைகளும் - ராசிகளும் - யாகங்களும் - ஜெயலலிதாவைக் காப்பாற்றவில்லை ! இவைகள் அனைத்துமே மூடநம்பிக்கைகள்; மக்கள் சக்தியே மகத்தானது என்பதை, இத்தேர்தல் முடிவுகள் மீண்டும் நிரூபித்துவிட்டன ! ஆக பகுத்தறிவுக் கொள்கையும் - இத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது என்றே சொல்ல வேண்டும். ❍

## தேர்தல் களத்தில் கழகம்

நடந்து முடிந்த தேர்தல் களத்தில் - பா.ஜ.க.-அ.தி.மு.க. பார்ப்பனியக் கூட்டணிக்கு எதிரான பிரச்சாரக் களத்தில் - தந்தை பெரியார் திராவிடர் கழகம் தனது ஆக்கப்பூர்வ பங்கை வழங்கியது. மயிலாடு துறை, கோவை, தர்மபுரி, பெரம்பலூர் புதுவை, பொள்ளாச்சி, திண்டுக்கல், கடலூர், தென்சென்னை, வட சென்னை, மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதிகளில் தி.மு.க. அணி வேட்பாளர்களை ஆதரித்து, கழகம் பல்வேறு பொதுக் கூட்டங்களையும், தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்களையும் நடத்தியது. கழகத் தலைவர், கழகப் பொதுச்செயலாளர்கள், திருச்சி செல்வேந்திரன் (தி.மு.க.), மயிலாடு துறை அழகிரி (ம.தி.மு.க), கழகப் பிரச்சாரகர் வேலுசாமி மற்றும் கழகப் பொறுப்பாளர்கள், இந்தச் கூட்டங்களில் பங்கேற்று, ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவு திரட்டினர்.

மயிலாடுதுறை பொதுக் கூட்டத்தில் - விடுதலை இராசேந்திரன் பேசியதை, பொள்ளாச்சி கழகத் தோழர்கள், யார் அன்னியர் ? யார் இவர்கள் என்ற தலைப்பில் சிறு நூலாக வெளியிட்டு பரப்பினர். 'ஜூனியர் விகடன்' வார ஏடும், இதைப் பதிவு செய்தது. புதுவை தந்தை பெரியார் திராவிடர் கழகச் சார்பில், பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணியை தோற்கடிக்க வேண்டும் ஏன் ? என்ற-ஏராளமான ஆதாரங்களைக் கொண்ட பிரச்சார நூலை பல்லாயிரக்கணக்கில் அச்சிட்டு பரப்பினர். தமிழகம் முழுதும், கழகத் தோழர்கள், இந்த நுலை வாங்கி, பரப்பினர். கழகத்தின் மேடைகளில் தனி நபர் வசவுகளைத் தவிர்த்து, ஏராளமான ஆதாரங்கள் செய்திகளோடு கழகத்தினர் பேசியது, பொதுமக்களின் வரவேற்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. ❍

## 'சோதிடப்புலி' சுருண்டது

பல்கலைக் கழகத்தில் வேத சோதிடத்தையும் - புரோகிதத்தையும் பாடமாக்கியவரும் வரலாறுகளைத் திருத்தி, எழுதி, ஆரியர்களே பூர்வீகக் குடிகள் என்று நிலைநாட்டத் துடித்தவருமான முரளி மனோகர் ஜோஷி - உ.பி. மாநிலம் அலகாபாத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். அவர் நம்பிய 'சோதிடம்' அவரையே கைவிட்டு விட்டது; ஆனால் வேத சோதிடக் கல்வியை எதிர்த்த கம்யூனிஸ்டுகள் 62 இடங்களில் வெற்றிவாகை சூடியுள்ளனர். ❍

## பொய்த்தது வேத சோதிடம்

வேத சோதிடர்கள் அனைவருமே ஒருமித்த குரலில் வாஜ்பாய்தான், அடுத்த ஆட்சியை அமைப்பார் என்று சோதிடம் கணித்தார்கள். சோனியா காந்தி பிரதமராகும் வாய்ப்பே, அவரது சோதிடத்தில் இல்லை என்றார்கள். வேதனை என்னவென்றால், "வேத சோதிடத் துறை"க்கான அமைச்சர் முரளி மனோகர் ஜோஷியே, அலகாபாத்தில் தோற்றுப் போய்விட்டார்.

– 'இந்து' நாளேட்டில் (மே 15) அவதார் கிருஷ்ணன் கவுல், புதுடில்லி எழுதியுள்ள ஆசிரியருக்குக் கடிதம்.

தலையங்கம்

# மக்களின் தீர்ப்பு!

இந்தியாவின் 14 வது நாடாளுமன்றம் – மதவெறிக்கு எதிரான மதச்சார்பின்மை அணியின் தலைமையில் அமைவதற்கு, வாக்காளர்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள். மக்கள் பிரச்சினைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆட்சியமைப்பையும், அரசு நிறுவனங்களையும் காவிமயமாக்கிட துடித்த, பார்ப்பன மதவெறி சக்திகளை, மக்கள் ஏற்கவில்லை.

விவசாயிகளையும், ஏழை மக்களையும், கைவினைத் தொழிலாளர்களையும், கல்வி, சுகாதாரம், பொது விநியோகம் போன்ற சேவைத் துறைகளையும் புறக் கணித்து, பன்னாட்டு நிறுவனங்களையும், பார்ப்பன, பனியா கும்பலையும் கொழுக்க வைத்த, வாஜ்பாய் அரசின் பொருளாதாரக் கொள்கைகள் மீது, மக்கள் கொண்டிருந்த சீற்றத்தைத் தேர்தல் முடிவுகளில் பார்க்க முடிகிறது. சொந்த நாட்டு மக்களை அன்னியர்களாக்கி, ஒதுக்கி வைத்துவிட்டு, சோனியாவை அன்னியர் என்று பிரச்சாரம் செய்த ஆரியப் பார்ப்பனியத்தின் வாதங்கள் எடுபடவில்லை.

இழுபறி குழப்பங்களுக்கு இடமில்லாமல், இடதுசாரி களின் ஆதரவோடு சோனியா தலைமையில், ஒரு கூட்டணி ஆட்சி அமையும் தெளிவான நிலை வந்திருக்கிறது. மதச்சார்பின்மைக்கும், மக்கள் பிரச்சினைகளுக்கும் ஆதரவான மக்கள் தீர்ப்பை, மதித்து செயல்படவேண்டிய கடமை ஆட்சியாளர்களுக்கு இருக்கிறது.

தொலைக்காட்சிகளும், தேசிய பத்திரிகைகளும் அடுத்த ஆட்சி அமைக்கப் போவது வாஜ்பாய் தான் என்று கருத்துத் திணிப்புகளை உருவாக்கின. எந்த ஒரு ஊடகமும் – காங்கிரஸ் ஆட்சியை அமைக்கும் என்று கூறவே இல்லை. முலாயம் சிங்கின் சமாஜ்வாதி கட்சியின் ஆதரவையும் சேர்த்து – இப்போது காங்கிரஸ் அணிக்கு ஆதரவாக 310 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இதே எண்ணிக்கைதான் வாஜ்பாய்க்கு கிடைக்கப் போகிறது என்று முதல் சுற்றுக் கணிப்பில் ஊடகங்கள் கூறின. அப்படியே தலைகீழாக மாறிவிட்டது. இடதுசாரிகள் 62 பேர் – இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பது வரவேற்கப் பட வேண்டிய நல்ல செய்தியாகும். மத்தியில் ஆட்சியை வழி நடத்துவதில், இவர்களின் பங்கு முக்கியமானதாக அமையும்.

தமிழ்நாட்டில் – 'வர்ணாஸ்ரமக் கூட்டணி' 40 தொகுதி களிலும் கடும் தோல்வியைத் தழுவி நிற்கிறது. தமிழ்நாட்டில் – சங்கராச்சாரிகளின் வழிகாட்டுதலோடு நடந்த ஜெயலலிதாவின் பார்ப்பன ஆட்சிக்கு எதிராக – மக்கள் தங்கள் சீற்றத்தைப் பதிவு செய்துள்ளனர். அதனால் தான் வாக்குகள் வித்தியாசங்களே லட்சக்கணக்கில் இருக்கின்றன. மூன்றாண்டு கால ஜெயலலிதாவின் ஆட்சி, "சமூகநீதிகாத்த வீராங்கனை"யின் ஆட்சியாக இல்லை என்பதை, இந்தத் தீர்ப்புக்குப் பிறகாவது, அவருக்குப் பாராட்டுப் பத்திரம் படித்துக் கொண்டிருந்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ராஜகோபாலாச்சாரிக்குப் பிறகு – இப்படி ஒரு "துணிவான" முதல்வர் தமிழ்நாட்டுக்குக் கிடைத்ததில்லை என்றும், இந்தியாவுக்கே வழிகாட்டும் ஆற்றல், இவருக்கு மட்டுமே இருக்கிறது என்றும், "அக்கிரகாரங்கள்" அம்மையாருக்கு புகழ் மாலை சூட்டின; அதற்கு தமிழர்களில் சிலரும் – 'அரசு ஊழியர்களை அடக்கிய வீர'த்தைப் பாராட்டிக் கடிதங்களை எழுதினர். அதிகாரத்தை முறைகேடாகப்பயன்படுத்துவதில் காட்டும் வீரம், உண்மையான வீரமாக இருக்க முடியாது. ரேஷனைப் பறி கொடுத்த ஏழைகள், கல்வியைப் பறி கொடுத்த ஒடுக்கப்பட்ட மக்கள், திருமணக்கடன், ஓய்வூதியம் போன்ற நலத் திட்டங்களைப் பறிகொடுத்த வறிய மக்கள், சிறைக் கூடங்களில் அடைக்கப்பட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் – காவல் துறையால் தாக்கப்பட்ட மாணவ மாணவியர்கள் – அனைவரும் ஒன்று சேர்ந்து அம்மையாரின் "வீரதீர பராக்கிரமத்துக்கு" தங்களின் அடக்கமான பதிலை வாக்குப் பெட்டிகளில் தந்துவிட்டார்கள்.

ஆட்சிக்கு வந்த மதச்சார்பின்மை அணியை வாழ்த்து கிறோம்; 'பொடா' சட்டத்தை திரும்பப் பெறுதல்; கல்வியில் நுழைக்கப்பட்ட வரலாற்று மோசடிகளை அகற்றுதல்; தேர்தல் அறிக்கைகளில் கூறப்பட்ட தனியார் துறை இடஒதுக்கீடு; சிறுபான்மையினருக்கான ஒதுக்கீடுகளை அமுல்படுத்துதல்; சமூகநீதித் திட்டங்களை அமுல்படுத்துதல்; அடித்தள மக்களுக்கு எதிரான கண்மூடித்தனமான முதலீட்டு விற்பனைக் கொள்கைகளை மாற்றிஅமைத்தல் தமிழுக்கு செவ்விய மொழி அங்கீகாரம் அளித்தல் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு முன்னுரிமை தந்து இந்த ஆட்சி தனது பயணத்தைத் துவக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

# தொலைக்காட்சி தேர்தல் விவாதங்களிலிருந்து....

தேர்தல் முடிவுகள் வெளியான மே 13-ம் தேதியன்று – தனியார் தொலைக்காட்சிகள் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பின. அதில் நடந்த சில விவாதங்கள் – நிகழ்வுகள் பற்றிய ஒரு தொகுப்பு:

## சங்கராச்சாரி

● 'விஜய்' தொலைக்காட்சியின் 'மக்கள் யார் பக்கம்' நிகழ்ச்சியில் நடந்த விவாதத்தில், ஜெக வீரபாண்டியன், நடிகர் எஸ்.வி.சேகர், பத்திரிகையாளர் ஞாநி, முன்னாள் காங்கிரஸ் எம்.பி. கவுரிசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். ஜெகவீரபாண்டியன், இத் தேர்தலில், அ.இ. அ.தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்தவர். பா.ஜ.க.வை மட்டும் எதிர்த்தார். இத் தேர்தலில் பா.ஜ.க. – அ.இ.அ.தி.மு.க.வுக்கு மட்டு மல்லாமல், காஞ்சி சங்கராச்சாரியையும் மக்கள் புறக் கணித்திருக்கிறார்கள். இந்தத் தேர்தல் அவருக்கும் ஒரு பாடம் என்று, ஒரு 'வெடிகுண்டை' வீசினார் ஜெக வீரபாண்டியன். பார்ப்பன நடிகர் எஸ்.வி.சேகர், "அவர் மதத் தலைவர்; மக்களுக்கு ஆசி வழங்கு கிறவர்; அவருக் கும் அரசியலுக்கும் தொடர்பில்லை" என்று சமாளித்தார். 'அவர் ஆசி வழங்கவில்லை; அரசியலில் பரிந்துரைகள், சிபாரிசுகள் வழங்கிக் கொண்டிருக்கிறார்' என்று, ஜெகவீரபாண்டியன் பதிலடி தர, "உங்களுக்கு அவரைப் பற்றி என்ன தெரியும்? முதலில் நீங்கள் அவரை சந்தித்திருக் கிறீர்களா?" என்று, எஸ்.வி. சேகர் கோபத்துடன் கேட்டார். "நான் எதற்காக அவரைப் போய் சந்திக்க வேண்டும்?" என்று ஜெகவீரபாண்டியன் பதிலடி தர, அருகில் இருந்த ஞாநி, "நான் அவரைச் சந்தித்தவன். எனவே அவரைப் பற்றி என்னால் கூற முடியும்" என்று கூற, எஸ்.வி. சேகர், ஞாநியைப் பேசவிடவில்லை. "நீங்கள் சந்தித்து, அவரைப் பற்றித் தவறான கருத்தை எழுதியவர் என்பது எனக்குத் தெரியும்" என்று, எஸ்.வி.சேகர் கூற, தேர்தல் முடிவுகள் வரத் துவங்கியதும், விவாதம் அதோடு முடிவடைந் தது.

## ராமன்

● இரவு எட்டுமணியளவில் – 'சன்' தொலைக் காட்சியில் நடந்த ஒரு விவாதத்தில் – பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினரான பார்ப்பனர் ராஜாவுக்கும் – துரைமுருகனுக்கும் சூடான விவாதம் நடந்தது. "தி.மு.க. இந்துக்களின் விரோதி; இந்து என்றால் திருடன் என்று கூறினார் கருணாநிதி" என்று ராஜா கூற – "ஏற்கனவே பல நூல்களில் எழுதப்பட்டிருந்த தைத் தான் கலைஞர் கூறினார்" என்று துரைமுருகன் பதிலடி தந்தார். "எந்த இந்துக்களையும் கோயிலுக்குப் போவதை நாங்கள் தடுத்தோமா?" என்று துரை முருகன் கேட்க, "பெரியார் ராமனை செருப்பாலடித்த போது, அவரை ஏன் கைது செய்யவில்லை?" என்று தனது உள்ளத்தில் புதைந்து கிடந்த ஆத்திரத்தைக் கொட்டினார் ராஜா! தேர்தல் தோல்வி, பார்ப்பனர் களை மிகவும் ஆத்திரப்படுத்தியிருப்பதை, ராஜாவின் பேச்சிலிருந்து, பார்வையாளர்கள் உணர முடிந்தது.

## ஜெயா

● 'ஜெயா' தொலைக்காட்சி, காலை 8 மணிக்கு உற்சாகத்துடன் தனது தேர்தல் ஒளிபரப்பைத் துவக்கியது. 8.30 மணிக்கு முன்னணி நிலவரங்கள் வரத் துவங்கியவுடன், 3 தொகுதிகளில் அ.இ. அ.தி.மு.க. முன்னணியில் இருப்பதாக ரவி பெர்னான்ட் கூறினார். "திருச்செந்தூரில் அ.இ.அ.தி.மு.க. முன்னணி வகிக்கிறது. இதைப் பார்க்கும் போது, கடந்த சட்டமன்றத் தேர்தல் நிலவரம் திரும்புவது போல் தெரிகிறது; கடந்த முறையும், முதலில் திருச்செந்தூர் தொகுதியில் தான் அ.இ.அ.தி.மு.க. முன்னணியில் இருந்தது" என்றார். அடுத்த சில நிமிடங்களிலே நிலைமை வேகமாக மாறத் தொடங்கியது. பின்னர் தமிழ்நாட்டை விட்டு விட்டு, கருநாடகத்தில் பா.ஜ.க. முந்துகிறது என்ற விவாதங்கள் விரிவாக நடந்து கொண் டிருந்தன. கீழே எழுத்து வடிவில் அகில இந்திய அளவில் பா.ஜ.க. முன்னணியில் நிற்கும் இடங்களின் எண்ணிக்கை – நூறையும் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது. அதில், அ.இ.அ.தி.மு.கவையும் இணைத்துக் கொண்டு – அ.இ.அ.தி.மு.க. – பா.ஜ.க. முன்னணி இடங்கள் என்று போடத் துவங்கினார்கள். அதையும் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்க முடியாமல், தேர்தல் ஒளி பரப்பை மூட்டைக் கட்டிக் கொண்டு திரைப்படத்தை ஒளி பரப்பத் துவங்கிவிட்டார்கள். அ.இ.அ.தி.மு.க.வுக்கு, அண்மைக் காலமாக "சித்தாந்தங்களை" வழங்கி வந்த பார்ப்பனர் சுதாங்கன், கடையைக் கட்டிக் கொண்டு இடத்தைக் காலி செய்தார்.

## திருநாவுக்கரசர்

● தேர்தல் ஒளிபரப்பில் – அனைத்துத் தொலைக் காட்சிகளிலும் தோன்றி, 'ஜெ'வைக் கடுமையாக விளாசித்தள்ளி விட்டார், பா.ஜ.க.வைச் சார்ந்த திருநாவுக்கரசர். தி.மு.க. கூட்டணி பலத்தால் மட்டுமல்லாது, ஜெயலலிதாவின் சர்வாதிகார அணுகு முறையும், இத் தோல்விக்குக் காரணம் என்றார் அவர். தனக்கு புதுக்கோட்டையில் வாய்ப்பளிக்கக் கூடாது என்று கூறிய ஜெயலலிதா, பா.ஜ.க. வேட்பாளர் களுக்கேகூட, தன்னைப் பிரச்சாரம் செய்யவிடாமல், வெங்கய்யா (நாயுடு) மூலம் தடுத்தவிட்டதாக, அவர் குற்றம் சாட்டினார். அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டணி இல்லாமல் இருந்தால் இரண்டு தொகுதிகளிலாவது பா.ஜ.க. வெற்றி பெற்றிருக்கும் என்றும் அவர் கூறினார்.

## ரஜினி

● நடிகர் ரஜினிகாந்த் செல்வாக்கு பற்றி – 'விஜய்' தொலைக்காட்சிகளில் விவாதங்கள் நடந்தன. ரஜினிக்கு – சினிமா செல்வாக்கு உண்டே தவிர, அவருக்கு எப்போதுமே அரசியல் செல்வாக்கு இருந்தது இல்லை என்று பத்திரிகையாளர் ஞாநி கூறினார். "பா.ம.க.வை ரஜினி எதிர்த்தது – அரசியல் பிரச்சினைகளுக் காக அல்ல; அவரது சொந்தப் பிரச் சினைகளுக்காகவே எதிர்த்தார். சொந்தப் பிரச்சினையை முன்னிறுத்தி, அரசியல் முடிவு எடுப்பதை, ஏற்றுக் கொள்ள முடியாது; அவரது கருத்துக்கு மக்களிடம் செல்வாக்கு இல்லை என்பதும் இப்போது தெரிந்துவிட்டது" என்று, இதே தொலைக் காட்சியில் நடந்த ஒரு விவாதத்தில் தோழர் மகேந்திரன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) கூறினார். ❍

# 'அன்னியர்' வாதத்தின் பின்னணி...



'இந்தியா' ஒரு நாடு என்ற கோட்பாட்டை – சங்பரிவார் ஏற்பது இல்லை. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், இலங்கை, பர்மா, சீனாவை உள்ளடக்கிய அகண்ட பாரதம் முழுவதும் இந்துக்களின் தேசம் என்பதே சங்பரிவாரின் கொள்கை. 'இந்தியா' என்பதைக்கூட சங்பரிவார் ஏற்பது இல்லை; காரணம் – இந்தியன் என்ற சொல், முஸ்லீம், கிறிஸ்தவர், பார்சி போன்ற அனைவரையுமே குறிக்கிறது என்பதால், அதை ஏற்க முடியாது என்கிறார் கோல்வாக்கர். 'பாரதியா' என்பதே நமது நாட்டுக்குப் பொருத்தமான பெயர் என்றும், வேதத்தில் கூட இப்பெயர் இடம் பெற்றுள்ளது என்றும் கோல்வாக்கர் கூறுகிறார்.

அகன்ற இந்துஸ்தானத்தின் பூர்வீகக் குடிகள் ஆரியர்கள் என்பதும் சங்பரிவார் – பார்ப்பனரின் கொள்கைகள் ஆகும். ஆரியர்கள் துவக்கமே இல்லாத 'அனாதி'கள் என்றும்; அவர்கள் கடவுளின் குழந்தைகள் என்றும் இதை அறுதியிட்டுக் கூற எந்த வரலாற்று ஆசிரியர்களாலும் முடியாது என்றும் கோல்வாக்கர் கூறுகிறார்.

ஆரியர்களுக்கு உரிமைஉடைய இந்துஸ்தானத்தில் – ஆரியர்கள் அல்லாத அனைவரும் மிலேச்சர்கள் (இழிவானவர்கள்) என்றும் கோல்வாக்கர் கூறுகிறார். எனவே "ஆரியர்களின் பாரதியக் கலாச்சாரத்தைக் கொண்ட இந்துஸ்தானில்" கிறிஸ்தவ மதக் குடும்பத்தில் – இத்தாலி நாட்டில் பிறந்துவிட்ட ஒரு பெண், பிரதமர் பதவியில் அமர்வது, தங்களது – ஆரிய – பாரதிய – இந்துஸ்தானுக்கு வைக்கப்பட்ட வெடிகுண்டு என்று, பார்ப்பனர்கள் பதறுகிறார்கள். அதற்காகவே வாஜ்பாய் முதல் ஜெயலலிதா – சங்கராச்சாரி வரை மூச்சுத் திணற, அன்னியர் நாடாளுவதா என்று முழங்கிப் பார்த்தார்கள். மக்கள் தீர்ப்போ, வேறு விதமாகிவிட்டது – சோனியா, நாட்டு மக்களின் பேராதரவோடு, பிரதமர் பதவியில் அமர்ந்திருப்பது – ஆரிய அகங்காரத்துக்கும், அதன் ஆதிக்கப் பண்பாட்டுத் திமிருக்கும் கிடைத்த மரண அடி என்றே கூற வேண்டும். ❍

## கழகத் தலைவர் ‘புரட்சிப் பாதை’ ஏட்டுக்கு பேட்டி

# குழந்தைகளுக்கும் சந்திரிகா பெயரை சூட்டும் ‘ஜெ’யின் ராஜாஜி ஆட்சி

**‘புரட்சிப் பாதை’ இதழுக்கு - கழகத்தலைவர் கொளத்தூர் மணி அளித்த பேட்டியின் முதற் பகுதி கடந்த இதழில் வெளிவந்தது. அதன் தொடர்ச்சி:**

**12 ஆண்டுகளுக்குப் பிறகு கலைஞரை வீரமணி சந்தித்திருக்கிறாரே...?**

ஒரே ஒரு மாற்றம் தெரிகிறது. ஜெயலலிதாவை சந்திக்கிறபோது தனியாக போய் சந்திக்கிறவர், கலைஞரை சந்திக்கும் போது, இரண்டு கட்சிக்காரர்களை அழைத்துக் கொண்டு போயிருக்கிறார். வேறெதுவும் சிறப்பாகத் தெரியவில்லை.

**சோனியா காந்தியின் மீது அந்நியர் என்ற முழக்கத்தை பா.ஜ.க. வைத்துள்ளதே?**

பெரியார் காலத்தில்கூட அந்நியர் பற்றிய கேள்வி எழுப்பப்பட்டதுண்டு. ‘ஆங்கிலேயன் காலை நக்கிக் கொண்டிருக்கிறார்’ என்று சொன்னபோதுகூட, ‘அவன் காலாவது சாக்ஸ் போட்டு சுத்தமாக இருக்கிறது. ஆனால், பார்ப்பான் கால் கண்டதை மிதித்துக் கொண்டிருக்கிறது. பார்ப்பான் காலை நக்குவதைவிட இது ஒன்றும் பரவாயில்லை’ என்று வேடிக்கையாக சொன்னார்.

‘ஆங்கிலேயன் என்னைக் கட்டித் தழுவுகிறான், கை குலுக்குகிறான், நான்சமைத்த உணவை உண்ணுகிறான். என்னை ‘ஹலோ பிரதர்’ என்கிறான். அவன் எனக்கு அந்நியனா ? என்னைத் தொடாதே, கிட்டே வராதே, நீ பார்த்தாலே என் உணவு கெட்டுப் போயிடும் என்று சொல்லும் இவன் எனக்கு அந்நியனா ?’ என்றெல்லாம்கூட பெரியார் கேட்டிருக்கிறார்.

அப்படியிருக்கும்போது, ஒடுக்கப்பட்ட மக்களை, உழைக்கும் மக்களை அந்நியப்படுத்தி வைத்திருக்கிற அந்நியராக சோனியா காந்தி இப்போது தெரியவில்லை. பிறப்பால் அந்நியர் என்று சொல்கிறார்கள். 25 ஆண்டுகளுக்கு முன்னால் இங்கு வந்து குடியுரிமைப் பெற்று, ஒரு நாடாளுமன்ற வேட்பாளராக நின்று, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறார். ஒரு பாரம்பரிய மிக்க அரசியல் கட்சியின் அகில இந்திய தலைவராகவும் இருந்து வருகிறார்.

பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போய்தான் எல்லா செயல்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். இயற்றுகிற சட்டம், நடத்துகிற அரசு எல்லாம்கூட அந்நியப்பட்டுதான் இருக்கின்றன.

ஒருவேளை சோனியாவும் ஆட்சிக்கு வந்து, உழைக்கும் மக்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் அந்நியப்பட்டு நிற்பாரேயானால், அப்போது வேண்டுமானால், அந்நியர் என்று சொல்வோமே தவிர, இப்போது அந்தக் குற்றச்சாட்டை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

**ஜெயலலிதா தலைமையிலான தமிழ்நாடு அரசின் செயல்பாடுகள் பற்றி...?**

இன்னொரு ராஜாஜியின் ஆட்சியாகத் தான் இதைப் பார்க்கிறோம். அவராவது தயங்கித் தயங்கி, பயந்து பயந்து சட்டங்களைக் கொண்டுவந்தார். இவரோ சங்கராச்சாரியாரை அறநிலையத் துறையின் அறிவிக்கப்படாத அமைச்சராகவும் - இருக்கிற அமைச்சர்களில் மேலானவராகவும் வைத்துக்கொண்டு மதமாற்றத் தடைச் சட்டம் போன்ற முக்கியமான சட்டங்களை கொண்டு வந்திருக்கிறார்.

அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் கொண்டுவந்த முதல் சட்டங்களில் ஒன்று சுயமரியாதைத் திருமணம் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஆனால், அரசு சார்பாக நடத்துகிற திருமணங்களைக்கூட புரோகித திருமணமாக நடத்துகிறார்.

பெயர் சூட்டுவதுகூட ஜெய-சந்திரிகா என தமிழின எதிரிகளின் பெயர்களைச் சூட்டுகிறார். ‘ஜெயேந்திரா’ என சங்கராச்சாரியின் பெயரைச் சூட்டுகிறார்.

நிதித்துறை செயலாளர், சுகாதாரத் துறை செயலாளர், காவல்துறை இயக்குநர், உளவுத்துறை இயக்குநர் அனைவருமே பார்ப்பனர்கள். தலைமைச் செயலாளர்கள் நான்கு பேர் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாருமே பார்ப்பனர்கள் தான்.

கரூரிலே குடமுழுக்கு தமிழிலே செய்யக் கூடாது என்கிறார் சங்கராச்சாரி. ஆளுநர் உரைகூட தமிழில் படிக்க இவர் தடையாக இருந்தார்.

ஈழத் தமிழர் அமைதியாக வாழ வேண்டும், அங்கே அமைதி காண வேண்டும் என்று எல்லா தமிழர்களும் விரும்புகிறார்கள். அதற்கு இணங்க நார்வே முன்னெடுத்து அமைதி பேச்சு வார்த்தையைத் தொடங்கியது. அது நடந்து கொண்டிருக்கும்போதே பிரபாகரனை கைது செய்து, இங்கே கொண்டுவர வேண்டுமென்று சட்டமன்றத்திலே தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்.

‘பொடா’ என்ற மோசமான சட்டத்தை நடைமுறைப்படுத்தப்பட்டபோதுகூட - பெயரளவுக்காவது குஜராத்தில் - பொய்யான வழக்காக இருந்தாலும்கூட வன்முறை தொடர்பான வழக்கில் பதிவு செய்தனர். ஆனால், தமிழ்நாட்டில்தான் கூட்டத்தில் பேசினார்கள் என்பதற்காக வழக்குப் போட்டு ஒன்றரை ஆண்டுகாலம் தமிழ்நாட்டின் முன்னணி தலைவர்களையும் முக்கிய தலைவர்களையும் சிறையில் வைத்திருந்தார். ஒரே ஒரு பத்திரிகையாளரை சிறையில் வைக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முழுவதும் கலவரப் பகுதி என அறிவித்தார்.

ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் கல்லூரியில் சேர்வதற்கு, வேலை வாய்ப்புக்கு இருந்த வயது வரம்பு சலுகைகளை எல்லாம் ரத்து செய்துவிட்டார். கல்விக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. தேர்வு கட்டணம் உயர்த்தப்பட்டது. பேருந்து பயண சலுகைகள் ரத்து செய்யப்பட்டன.

கிராமப்புற மாணவர்களுக்கு 15 விழுக்காடு இடஒதுக்கீடு என்று இருந்ததை இவர் 25 விழுக்காடு என்று ஆக்கினார். நீதிமன்றத்துக்குப் போய் அது ஒட்டு மொத்தமாக ரத்து செய்ய காரணமாக இருந்தார்.

வை.கோ., நெடுமாறன், நக்கீரன் கோபால் ஆகியோருக்கு பிணை வழங்கப்பட்ட போது, அடுத்த நாள் காலையிலேயே உச்ச நீதிமன்றம் போய், அதற்கு எதிராக மனு தாக்கல் செய்யும் அளவுக்கு முனைப்பாக இருந்தவர்கள், கிராமப்புற மாணவர்களுக்கு இருந்த 15 விழுக்காடு இடஒதுக்கீடு பறி போய்விட்ட நிலையில், அதற்கு எந்த தொடர் நடவடிக்கையும் எடுத்ததாக எனக்குத் தெரியவில்லை.

69 விழுக்காடு இடஒதுக்கீடு என்பதற்கு எதிராக உச்சநீதிமன்றம் அளித்த இடைக்காலத் தடை பல ஆண்டுகளாக நீட்டித்துக் கொண்டே இருக்கிறது. அதற்கு எந்த முயற்சியும் எடுத்த பாடில்லை. இப்படி பல குற்றச்சாட்டுகளைச் சொல்ல முடியும்.

ஜெயலலிதா சென்றமுறை தன்னுடைய தேர்தல் அறிக்கையில் முஸ்லிம்களுக்கு தனி இடஒதுக்கீடு என்பது பற்றியும், 69 விழுக்காடு சமூக நீதிக்கான சட்டத்தை இயற்றுவது என்பதைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். தேசிய ஜனநாயக முன்னணி அணி அறிக்கையிலும் இது இடம் பெற்றது. ஆனால், இந்த முறை ஜெயலலிதாவும் இதைப் பற்றி குறிப்பிடவில்லை. பி.ஜே.பி.யும் குறிப்பிடவில்லை. இதன் மூலம் இடஒதுக்கீட்டிற்கும், சமூகநீதிக்கும் ஜெயலலிதாவும் பா.ஜ.க.வும் எதிரானவர்கள் என்பது தெளிவாகிறது.

இவ்வாறு ராஜாஜியைவிட மோசமான ஆட்சியாக ஜெயலலிதாவின் ஆட்சி இருக்கிறது.

**தி.மு.க. கூட்டணியை திராவிடர் கட்சிகளும், தமிழ்த் தேசிய இயக்கங்களும் ஆதரிக்கின்றன. தமிழின நலம் கருதி, நீங்கள் ஏன் கூட்டமைப்பாக செயல்படக்கூடாது?**

பொதுவாக, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பெரியாரியக்கம், அம்பேத்காரியக்கம், தமிழ்த் தேசிய இயக்கங்கள், பொதுவுடைமை இயக்கங்கள், தனித் தமிழ் இயக்கங்கள், பெண்ணுரிமை இயக்கங்கள், சுற்றுச்சூழல் இயக்கங்கள் ஆகியவை சமூகத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு தங்கள் தளங்களில் நின்று பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் அவரவர் வளர்ச்சிக்குட்பட்ட சூழல், சார்ந்திருக்கிற சமுதாய சூழல், சந்திக்கிற அனுபவம் இவற்றை வைத்து எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமோ அதற்கு முன்னுரிமை கொடுத்திருக்கலாம். அதனாலே அவர்கள் மற்ற கொள்கைகளுக்கு எதிரானவர்கள் என்று பொருளல்ல. இந்த முற்போக்குச் சிந்தனைகள் அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டதுதான் பெரியார் இயக்கங்கள். அந்த அடிப்படையில் தேவைகள் ஏற்படும் போது கூட்டமைப்பாக செயல்பட அணியமாகத் தான் இருக்கிறோம்.

**அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதை வலியுறுத்தி கருவறை நுழைவுப் போராட்டத்தை அண்மையில் நடத்தினீர்கள். அதன் தொடர் நடவடிக்கை என்ன?**

அனைத்து சாதியினரும் அர்ச்சகராக பரிந்துரைத்து, தமிழ்நாட்டுக்கு நீதிபதி மகராசன் குழு கொடுத்த பரிந்துரைகளில் - அவர் பக்தர் என்ற நிலையில் நின்று சாஸ்திர சம்பிரதாயங்களை எல்லாம் மத நூல்களை எல்லாம் ஆய்ந்து அறிக்கை கொடுத்திருக்கிறார். அதை புத்தகமாகக் கொண்டு வந்து மக்களிடம் பரவலாக கொண்டு போய் சேர்க்கக் கருதிக் கொண்டிருக்கிறோம். சமயத் தலைவர்களை அழைத்து, முன்பு நடத்திய கருத்தரங்குகளைப் போல, தொடர்ந்து பெருநகரங்களில் கருத்தரங்கம் நடத்த இருக்கிறோம்.

தமிழ்நாட்டில் பரவலாக பல கோயில்களில் கருவறை நுழைவு போராட்டத்தை ஒரே நேரத்தில் நடத்த திட்டமிட்டுள்ளோம். பொதுமக்களையும் ஒத்த கருத்துள்ளவர்களையும் நீங்கள் கருவறைக்குள் சென்று நீங்களே நேராக பூவையும் நீரையும் போட்டு நம்பிக்கையோடு வழிபடுங்கள் என வேண்டுகோள் விடுக்க இருக்கிறோம்.

முன்பே சொன்னது போல, நாங்கள் இரண்டு வேலைத் திட்டங்களை முக்கியமாக வைத்திருக்கிறோம். 1) கோயில் கருவறை நுழைகிற போராட்டம். அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்குவது. 2) தனியார் துறையில் இடஒதுக்கீடு. இவற்றை வலியுறுத்தி பிரச்சாரம் செய்து, அரசுக்கு நெருக்கடி கொடுத்து இப்போராட்டத்தை வெற்றி பெறச் செய்வோம்.

- இவ்வாறு கழகத் தலைவர் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். ❍

## கிராமப் பள்ளிகளுக்கு மூடு விழா!

ஆரம்பக் கல்வியில் ஜெயலலிதா ஆட்சி மேற்கொண்ட துரோகக் கொள்கைகள் இத் தேர்தல் முடிவுகளில் எதிரொலித்துள்ளன என்று தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச்செயலாளர் எஸ்.அப்துல் மஜீத் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

2002-2003ம் ஆண்டில் மட்டும், கிராமங்களில் இருந்த 5000 ஆரம்பப் பள்ளிகளை ‘ஜெ’ ஆட்சி இழுத்து மூடியது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தனியார் உயர்நிலைப் பள்ளி நிர்வாகங்கள் கிராமங்களில், ஆரம்பப்பள்ளிகளைத் துவக்கி, வியாபாரமாக்கிவிட்டன. அதிகமாகக் கல்விக் கட்டணங்கள் வாங்கப்பட்டதால், ஏழை கிராம மக்கள் கல்வி உரிமை பறிபோனது. பிளஸ் டூ தேர்வில் இதுவரை மிக அதிக அளவில் மாணவர்கள் தேர்ச்சி பெற்றதற்குக் காரணமே, அரசு பின்பற்றிய இலவசக் கல்வித் திட்டம் தான். 5 ஆசிரியர்கள் இருந்த பள்ளிகளில் - 2 ஆசிரியர்களே போதும் என்ற முடிவை இந்த அரசு எடுத்ததால், 18,000 கிராமங்களில் வாழும் மாணவர்களின் ஆரம்பக் கல்வி தடைபடுத்தப்பட்டது. 5-ம் வகுப்பு வரை இருந்த 1000 பள்ளிகளை எட்டாம் வகுப்பு வரை உள்ள இடைநிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசு உத்தரவிட்டது. ஆனால், அதற்கேற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கையை உயர்த்தவில்லை. இதனால் ஆசிரியர் - மாணவர் சதவீதம் மாறியது. முதலில் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை மாறி, 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை வந்தது. இப்போது 99 மாணவர்களுக்கு 2 ஆசிரியர்கள்தான் என்ற நிலை வந்து விட்டது. செகண்டரி பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கையை, 1,93,000-த்திலிருந்து 83,000 ஆக அரசு குறைந்ததால், ஆசிரியர்களின் வேலைச் சுமை அதிகரித்தது. 14,000 ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாக இருப்பதாக அரசு கூறி, அவர்களை இடமாற்றங்கள் மூலம் பந்தாடியது. கல்விக்குச் செலவிடப்படும் தொகையை மனித வளத்துக்கான முதலீடாகக் கருதாமல், அதைச் செலவாகக் கருதுகிறது இந்த ஆட்சி; என்று அப்துல் மஜீத் கூறியுள்ளார்.

# 14வது நாடாளுமன்றம்; கட்சிகள் நிலவரம்

**காங்கிரஸ் கூட்டணி**

| | |
|---|---|
| காங்கிரஸ் | 145 |
| ராஷ்டிரிய ஜனதாதளம் | 20 |
| திமுக | 16 |
| தேசிய காங்கிரஸ் | 9 |
| பா.ம.க. | 6 |
| தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி | 5 |
| ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா | 5 |
| ம.தி.மு.க. | 4 |
| லோக் ஜன சக்தி | 3 |
| ஜம்மு காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சி | 1 |
| இந்திய குடியரசுக் கட்சி (A) | 1 |
| முஸ்லீம் லீக் | 1 |

**பா.ஜ.க. கூட்டணி**

| | |
|---|---|
| பா.ஜ.க. | 138 |
| சிவசேனா | 12 |
| பிஜு ஜனதா தளம் | 11 |
| சிரோமணி அகாலிதளம் | 8 |
| ஜனதா தளம் (U) | 8 |
| தெலுங்கு தேசம் | 5 |
| தேசிய திரினாமூல் காங்கிரஸ் | 2 |
| நாகலாந்து மக்கள் முன்னணி | 1 |
| மிஜோ தேசிய முன்னணி | 1 |
| இந்திய குடியரசுக் கட்சி | 1 |

**இடதுசாரி**

| | |
|---|---|
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | 43 |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | 10 |
| இந்திய பார்வர்டு பிளாக் | 3 |
| சமூக புரட்சி கட்சி | 3 |
| கேரளா காங்கிரஸ் (ஜோசப்) | 1 |
| சுயேட்சை | 1 |

**மற்றவை**

| | |
|---|---|
| சமாஜ்வாடி கட்சி | 36 |
| பகுஜன் சமாஜ்வாடி கட்சி | 19 |
| ஜனதா தளம் (S) | 4 |
| தேசிய காங்கிரஸ் ராஷ்டிரிய லோக் தளம் | 3 |
| அசோம் கானா பரிஷத் | 2 |
| பாரதிய நவசக்தி கட்சி | 1 |
| லோகதன்ரிக் ஜான் சமாதா கட்சி | 1 |
| மஜ்லிஸ்-இ-இத்தாதுல் முஸ்லீம் | 1 |
| தேசிய லோக்தன்ரிக் கட்சி | 1 |
| சிக்கிம் குடியரசு முன்னணி | 1 |
| சமாஜ்வாடி ஜனதா கட்சி (R) | 1 |
| சுயேட்சை | 3 |

## பார்ப்பன ஏடுகளின் கருத்துக் கணிப்பு நாடகங்கள்

கருத்துக் கணிப்புகளை வெளியிட்டு வந்த பத்திரிகைகள் அனைத்துமே வாஜ்பாய் தலைமையிலான ஆட்சி தான் உறுதியாக அமையும் என்று கூறிவந்தன. 'இந்தியன் எக்ஸ்பிரசும்', 'என்.டி.'டி.வியும் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பு பா.ஜ.க. அணிக்கு 265 இடங்கள் கிடைக்கும் என்றது. 'இந்தியா டுடே' மற்றும் 'ஆஜ் தக்' இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பில், பா.ஜ.க. அணிக்கு 268 இடங்கள் வரை கிடைக்கும் என்றார்கள். 'ஸ்டார் டி.வி.' - 282 இடங்களையும், 'ஜீ' டி.வி. 267இடங்களையும், சகாரா டி.வி. 263 இடங்களையும், பா.ஜ,.கவுக்கு தந்தன. காங்கிரஸ் அணி அதிக எண்ணிக்கையைப் பெறும் என்று எந்த ஒரு நிறுவனமும் தனது கணிப்பில் கூறவில்லை. பாரதிய ஜனதாவுக்கு ஆதரவாகத் திட்டமிட்டு, இந்த நிறுவனங்கள் கருத்துகளை உருவாக்க முயலுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அது இப்போது உண்மையாகிவிட்டது. இப்போது காங்கிரஸ் கூட்டணிக்கு 217 இடங்கள் கிடைத்துள்ளன. காங்கிரஸ் கூட்டணியை ஆதரிக்கும் இடதுசாரிக் கட்சிகள் 62 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன. இந்தத் தேர்தலில் மக்கள் தோல்வி அடையச் செய்திருப்பது, மதவாதக் கூட்டணியை மட்டுமல்ல; பத்திரிகைகள் உருவாக்கிய பொய்த் தோற்றத்தையும் தோல்வி அடையச் செய்துள்ளனர். ❍

## மக்களைப் புறக்கணிக்கும் ஊடகங்கள்

"பத்திரிகைகள் - தொலைக்காட்சிகள், தங்கள் போக்குகளை மறுபரிசீலனை செய்து கொள்ள வேண்டிய அவசியமும், அவசரமும் வந்திருக்கிறது. தேர்தல் முடிவுகளைப் பற்றிய கணிப்புகளைவிட, பத்திரிகைத் துறை தோல்வி அடைந்து விட்டது என்ற கணிப்பு மிகவும் முக்கியமானதாகும். கடந்த பல ஆண்டுகளாகவே- பத்திரிகைகளும், தொலைக் காட்சிகளும் மக்கள் பிரச்சினைகளைப் பேசுவதை நிறுத்திவிட்டன. லேக் மீ நிறுவனம் நடத்தும் அலங்கார அணி வகுப்புகளைப் படம் பிடித்துக் காட்டுவதற்கு, 400க்கும் மேற்பட்ட தொலைக்காட்சிகள் இருக்கின்றன. ஆனால் விவசாயத்துக்கு நேர்ந்துள்ள நெருக்கடியைப் படம் பிடித்துக் காட்ட, மக்களுக்கு அறிவுறுத்த ஒரு தொலைக்காட்சியும் இல்லை. விவசாயிகளும், தொழிலாளர்களும் சந்திக்கும் அவலங்களுக்கு பத்திரிகைகளில் இடமே கிடையாது. மக்கள் தொகையில் 70 சதவீதம் பேர், செய்திகளுக்கு உரியவர்கள் அல்ல என்று பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் முடிவு செய்திருந்தன. ஆனால் இப்போது வாக்காளர்கள் - இதற்கு நேர்மாறாக முடிவு செய்துவிட்டனர்."

– 'இந்து' ஏட்டில் சாய்நாத் எழுதிய கட்டுரை (மே 14)

## 'ஜெ'வுக்கு ஒரு கேள்வி

தமிழக மக்கள் அளித்த தீர்ப்பு, மாநில அரசுக்கு எதிரானது அல்ல; மத்திய அரசுக்கு எதிரானது என்கிறார் ஜெயலலிதா. சரி; அப்படியானால், இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்ட அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர்களை மக்கள் ஏன் தோற்கடித்தார்கள் ? ஜெயலலிதா பதில் சொல்வாரா ?

அ.இ.அ.தி.மு.க. பதவிக்கு வந்த பிறகு, தமிழ்நாட்டில் நடந்த 5 சட்டமன்றத்துக்கான இடைத் தேர்தல்களிலும் அ.இ.அ.தி.மு.க. தான் வெற்றி பெற்றது என்கிறார் ஜெயலலிதா. அ.இ.அ.தி.மு.க. ஆட்சியை தமிழக மக்கள் எதிர்க்கவில்லை என்பதற்கு இதுதான் அளவுகோல் என்றால், இப்போது நடந்துள்ள மங்களூர் சட்டசபை இடைத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. வேட்பாளரை, 13,000 ஓட்டு வித்தியாசத்தில் மக்கள் தோற்கடித்திருக்கிறார்களே; இதற்கு என்ன சமாதானத்தைக் கூறப் போகிறார் ? ❍



கழக ஆட்சிக் குழு உறுப்பினர் - செயல் வீரர் பத்ரி படத்திறப்பு நிகழ்ச்சி - தோழர்களின் கண்ணீர் அஞ்சலி.

~ அடுத்த இதழில்


**கழகத்தின் புதிய வெளியீடு**

**சங் பரிவாரின் சதி வரலாறு**

பக்கம் : 230 விலை ரூ.60/-

ஏராளமான தகவல்களைக் கொண்ட சங்பரிவாரங்களின் முத்திரையைக் கிழிக்கும் நூல்.

கிடைக்குமிடம்: பெரியார் படிப்பகம், கோவை, மேட்டூர்.



**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

**சந்தாதாரர் ஆகி விட்டீர்களா?**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
எண்.29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை - 600 041.
தொலைபேசி:
2451 2857, 2847 4830


## விழுப்புரம் மாவட்ட கிராமங்களில் கழகத்தின் தேர்தல் பிரச்சாரம்

விழுப்புரம் மாவட்டம் தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பாக 24.4.04 சனிக்கிழமை அன்று "யார் அன்னியர்" மற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க.வை தோற்கடிக்க வேண்டும். ஏன் ? என்ற விளக்க தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது.

காலை 9 மணியளவில் நெடுமானூரில் துவங்கி, பொன்குன்றம், சங்கராபுரம், கொளத்தூர், பாண்டலம், கடுவனூர் ஆகிய ஊர்களில் பிரச்சாரத்தை மேற்கொண்டு தொழுவந்தாங்கலில் முடிவடைந்தது.

சி.சாமிதுரை தலைமை தாங்கினார். ச. வெங்கடேசன், மா. தலித் குமார், மு.ராசா முன்னிலை வகித்தனர். ந. அய்யனார், க.கோவிந்தன், மு.வ. நடராசன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

சங்கராபுரம் பாண்டலம், கடுவனூர் போன்ற ஊர்களில் மக்களிடையே பெரும் வரவேற்பு இருந்தது. ரவிவர்மா ஒலி, ஒளி அமைத்து பிரச்சார வாகனமும் அமைத்து தந்தார்.

## புரசையில் கழகத்தின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம்

மத்திய சென்னையில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து, 29.4.2004 அன்று மாலை சென்னை புரசை தாணா தெருவில் கழகக் கூட்டம் எழுச்சியுடன் நடந்தது. கேசவன் தலைமையில் சேத்துப்பட்டு இராசேந்திரன், சி.மணி வண்ணன், ந.பாஸ்கர் முன்னிலையில், கருங்குழி கண்ணன் வரவேற்புரையோடு கூட்டம் துவங்கியது. எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம்வழுதி, செந்தாமரை (பா.ம.க.), ப.ந. பாண்டியன் (திமுக), கோ. மணி (திமுக), அன்சாரி (த.மு.மு.க.), இராம. சிவசங்கர் (மதிமுக), அன்பு, எழும்பூர் கோபி, விடுதலை இராசேந்திரன், ஆனூர் ஜெகதீசன் ஆகியோர் உரையாற்றினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். 'தமிழர்களே எச்சரிக்கை' என்ற கழகத்தின் தேர்தல் பிரச்சார வெளியீட்டை பொதுமக்கள் ஏராளம் வாங்கினர். தோழர் தியாகராசன் நன்றி கூற, 10 மணியளவில் கூட்டம் முடிவடைந்தது. இறுதி வரை பொதுமக்கள் கருத்துக்களைக் கேட்டனர்.


Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 20th May 2004


பெறுநர்


OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மே 27, 2004 | புரட்சி 3 | முழக்கம் 20 | விலை : ரூ.2.50

### ஆர்ப்பாட்டம் தடை:

**கோவை இராமகிருட்டிணன் தலைமையில் தோழர்கள் கைது**

**கோவை காளப்பட்டியில் நடந்த தாழ்த்தப்பட்டோர் மீதான தாக்கு தலில் படுகாயம் அடைந்து மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்ட வர்களை 17.5.04 அன்று கழகப் பொதுச்செயலாளர் கு.இராம கிருட்டிணன் தோழர்களுடன் மருத்துவமனை சென்று பார்த்தார். தாக்குதலுக்கு உள்ளானவர்களில் கழகத் தோழரும் ஒருவர்.**

**இச்சம்பவத்தையொட்டி கோரிக்கைகளை வலியுறுத்தி 26.5.04 புதன்கிழமை மாலை 4 மணிக்கு, கோவை செஞ்சிலுவை சங்க அலுவலகம் முன்பு கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தச் சென்ற தோழர்கள் 50 பேர் கைது செய்யப் பட்டனர்.**

## தலித் மக்கள் மீது - சாதி வெறியர் தாக்குதல்

# காளப்பட்டியில் நடந்தது என்ன?

## உரிய நிவாரணம் கோரி - கழகம் ஆர்ப்பாட்டம்

கோவை மாவட்டம் காளப்பட்டி கிராமத்தில் அருந்ததி சமூகத்தினர் மீது - ஆதிக்கசாதிகள் நடத்திய வன்முறை சாதி வெறியாட்டத்தை தந்தை பெரியார் திராவிடர் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. கோவை மாவட்டத்தில் இவ்வளவு மோசமான சாதி வெறித் தாக்குதல் இதுவரை நடந்ததுஇல்லை என்று கூறப்படுகிறது.

சம்பவம் நடந்தவுடன், கழகப் பொதுச்செயலாளர் இராமகிருட்டினன் மற்றும் பல்வேறு முற்போக்கு இயக்கங்களைச் சார்ந்தோர், நேரில் செல்ல முயன்றபோது, காவல்துறை அனுமதி மறுத்துவிட்டது. ஆதிக்க சாதியினர் கட்சி வேறுபாடு இல்லாமல், ஒன்று சேர்ந்து, இந்தத் திட்டமிட்டத் தாக்குதலை அருந்ததியினர் மீது நடத்தியிருக்கிறார்கள் என்பது மிகவும் கண்டனத்துக்குரியதாகும். கட்சித் தலைவர்கள், இதில் தலையிட்டு, சாதி வெறியோடு செயல்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

இயக்கங்களின் பொறுப்பாளர்கள் அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து, வழக்கறிஞர்கள் குழு கடந்த 20ம் தேதி பாதிக்கப்பட்ட கிராமத் துக்குச் சென்று, நேரில் விசாரணை நடத்தியது. வழக்கறிஞர் பவானி மோகன், வழக்கறிஞர் இரத்தினம் மற்றும் கழகத்தைச் சார்ந்த மூவர், இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். பின்னர் குழுவினரும், கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிண னும், நடந்த சம்பவங்களையும், நிலை மைகளையும் செய்தியாளர்களிடம் விளக்கி பேட்டி அளித்தனர். மாவட்ட ஆட்சியாளருக்கு கோரிக்கை மனுவும் அனுப்பப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

காளப்பட்டி கலவரம் ஏற்படுவதற்கு ஏற்கனவே பல சம்பவங்கள் காரணமாக இருந்துள்ளன. குறிப்பாக ஏற்கனவே தீண்டாமை கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளது. வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் பல வழக்குகள் போடப் பட்டு அவ்வழக்குகளின் மீது நட வடிக்கை எடுக்கப்படாமல் இருந் துள்ளது.

சம்பவங்களை நேரில் பார்த்தவர் களிடம் விசாரித்தபோது, 200க்கும் மேற்பட்ட ஆதிக்க சாதியினர் ஒன்று சேர்ந்து பையா கவுண்டர் தலைமையில் தலித் மக்கள் குடியிருப்பில் (புதுக் காலனி, சாஸ்திரி வீதி) நுழைந்து பெட்ரோல் கேன்களுடனும், தீப்பந்தம் மற்றும் வெட்டரிவாள், கம்பு, கத்தி, தடிகளுடன் தலித் மக்களை தாக்கியும், வீடுகளை எரித்தும்சுமார் 48 வீடு களுக்கு தீ வைத்துள்ளனர். 75க்கும் மேற்பட்ட வீடுகளில் புகுந்து வீட்டு உபயோகப் பொருட்கள் (டிவி, கட்டில், பாத்திரங்கள், துணி) உடைக்கப்பட்டும், எரிக்கப்பட்டும் உள்ளன. நகை, பணம் ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டு ஆடு, மாடுகள் வெட்டப்பட்டு, தீ வைக்கப்பட்டுள்ளன. பெண்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு மான பங்கம் செய்யப்பட்டுள்ளனர். இன்னும் தலித் மக்கள் அச்ச நிலையிலேயே இருந்து கொண்டுள்ளனர். 20க்கும் மேற்பட்ட வர்களுக்கு அரிவாள் வெட்டு, தடியின் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர்கள் கோவை அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சரிவர சிகிச்சை செய்யப் படாமலேயே வெளியனுப்பப்பட்டும், சிலரை திருப்பி அனுப்பவும் முயற்சி நடந்துள்ளது. டி.வி.எஸ். 50 மோட்டார் வாகனம் 10க்கும் மேற்பட்ட மிதி வண்டிகள், இரண்டு கடைகள் உட்பட முழுமையாக சேதப்படுத்தப்பட் டுள்ளது. இதற்கு நிவாரணத் தொகை யாக 2.4 லட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. வரவேற்கத்தக்கதே. எனினும் இத் தொகை மிகவும் சொற்பமானதே. இதை பல மடங்கு அதிகரிக்க வேண்டும் என இக்குழு கோருகிறது.

தலித் மக்களுக்கு மேலும் பாதிப்பு வராமல் காவல்துறை பாதுகாத்துள்ளது.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

# புதிய ஆட்சியின் முன் உள்ள அவசரக் கடமைகள்

பொடா சட்டத்தை நீக்க முன் வந்துள்ளது போல் - புதிய ஆட்சி மக்களுக்கு தந்த உறுதி மொழிகளை நிறைவேற்ற முன் வரவேண்டும் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார். அறிக்கை விவரம்:

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் பார்ப்பன மேலாதிக்கத்தை நிலை நிறுத்தவும், இராமராஜ்யத்தை அதாவது வேதகால ‘பிராமண சூத்திர’ இந்துராஜ்யத்தை மீண்டும் கொண்டுவரவும் துடித்த மதவெறி பாரதிய ஜனதாகட்சியும், பார்ப்பன தலைமையில் சூத்திர அடிமை களைக் கொண்டதும் - தமிழ் மண்ணின் உளவியலுக்கு எதிராக சமஸ்கிருத பார்ப்பன பண்பாட்டை நிலைநாட்ட முயன்றதுமான ஜெயலலிதா கட்சியும் வீழ்ந்தன. அவற்றைத் தேர்தல் களத்தில் வீழ்த்திய காங்கிரஸ் கூட்டணிக்கும், தமிழ்நாட்டில் ஓரிடம் கூட இல்லாமல் முற்றாக விரட்டி யடித்த தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினருக்கும் நமது பாராட்டையும், வாக்காளர் களுக்கு நன்றியையும் கூறி மகிழ்கிறோம்.

அதே வேளை, தேர்தல் களத்தில் தோற்றுப் போனதாலேயே மதவெறி சக்திகள் இம்மண்ணை விட்டே ஒழிந்து விட்டது என்று பெருமூச்சு விட்டு ஓய்ந்திருக்கா மல், இனிமேல்தான் மதவெறி சக்திகள் முன்னிலும் அதிகமாக மதக் கலவரங்களைத் திட்டமிட்டு உருவாக்கி கலங்கிய குட்டையில் மீன் பிடிக்கும் தந்திரத்தைக் கையாளுவார்கள் என்பதை எதிர்பார்த்து, அவர்களது வஞ்சக வலையில் வீழா திருக்குமாறு மக்களுக்கு அறிவூட்டுவதும், மாநில, மைய அரசுகளை வற்புறுத்தி, அவர்கள் மீது உரிய நடவடிக்கை களை எடுக்க வைக்க வேண்டியதுமான கடமையும் பொறுப்பும் நம்மைப் போன்றோருக்கு உள்ளது என்பதை யும் நினைவூட்டுகிறோம். புதிய அரசு ‘பொடா’ சட்டத்தை நீக்கப் போவதாக முதல் அறிவிப்பை வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது; வரவேற்கத்தக்கது. இதே போன்று -

- பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பதை நிறுத்தவும், வாய்ப்பிருந்தால் விற்ற நிறுவனங்களை மீண்டும் அரசே கையகப்படுத்தவும்,
- இட ஒதுக்கீடு பற்றி முடிவு செய்ய அந்தந்த மாநிலங்களுக்கே உரிமை வழங்கும் சட்டத்திருத்தம் கொண்டு வரவும்,
- தேர்தல் அறிக்கைகளில் தந்த உறுதிப்படி தனியார் துறையில் இட ஒதுக்கீடு; சிறு பான்மையினருக்கான இடஒதுக்கீடுகளுக் கான சட்டங்கள் கொண்டு வரவும்,
- வரலாற்றுக்குழுவிலும், கல்விக் குழுவிலும் (NCHR NCERT) உள்ள மதவெறியர்களை அகற்றி விட்டு, உண்மையான வரலாற்றறிஞர் களையும், கல்வியாளர்களையும் நியமிக்கவும்,
- பாடத் திட்டத்தில் வஞ்சகமாய் செய்யப்பட்டுள்ள திரிபுகளையும், பொய்களையும் அறிவியல் மனப் பான்மை என்ற அரசியல் சட்ட நெறிகளுக்கு மாறாக பல்கலைக் கழகங்களில் வைக்கப்பட்டுள்ள வேத சோதிடம், வேத கணிதம் போன்ற அறிவியலுக்கு எதிரான பாடத் திட்டங்களை நீக்கவும், -
- அரசியலும், அரசு நிகழ்ச்சிகளிலும் எந்த மதமும் யாதொரு மதத் தலைவர்களும் பங்கேற்க அனுமதிக் காமல் உண்மையான மதச்சார்பின்மையை கடை பிடிக்கவும்,
- தகுதியெல்லாம் பெற்றுள்ள தமிழை செம்மொழியாக அறிவிக்கவும்
- பெண்களுக்கான இடஒதுக்கீட்டு முன் வரைவை உடனே நிறைவேற்றவும்,
- மரண தண்டனையை சட்டத்திலிருந்து முழுக்க நீக்கவும்,

தேவையான நடவடிக்கைகளையும், முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறோம்.



25.5.2004
சென்னை.

தலைவர்
தந்தை பெரியார் திராவிடர் கழகம்

தலையங்கம்

## புதிய அமைச்சரவை!

அரசியல் சட்டரீதியாகவும், மக்கள் தீர்ப்பின்படியும் பிரதமராக வர இருந்த திருமதி சோனியாவை பதவி ஏற்காமல் மிரட்டி தடுப்பதில் பார்ப்பன மதவெறி சக்திகள் வெற்றி பெற்றுள்ளன. சோனியா பிரதமராகியிருந்தால், இந்தியாவில் முதன்முதலாக, சாதியற்ற, சாதி அடையாள மில்லாத ஒருபெண் முதல்வராகியிருப்பார். சோனியா பிரதமராகிவிட்டால், நாடாளுமன்றம் தீட்டுப்பட்டதாகி விடுவது போல் - வெள்ளைப் புடவை கட்டி, மொட்டை அடித்துக்கொள்ளப் போவதாக சுஷ்மா சுவராஜ்கள் அறிவித்ததும், பதவி ஏற்பு விழாவை எதிர்த்துப் போராட்டம் நடத்தப் போவதாக கோவிந்தாச்சாரிகள் மிரட்டியதும், பதவி ஏற்பு நிகழ்ச்சியைப் புறக்கணிக்கப் போவதாக பா.ஜ.க. அறிவித்ததும், பார்ப்பனர்களின் கோரமுகத்தை அம்பலப் படுத்தக் கூடிய - வெட்ககரமான, செயல்பாடுகள்! ஆனாலும் - சோனியா பிரதமராவதைவிட, மதச்சார்பற்ற ஆட்சியின் பயணம் தடைபட்டு விடக் கூடாது என்பது முக்கியம் என்ற உயர்ந்த நோக்கில், பிரதமர் பதவியை ஏற்க மறுத்து, சோனியா, மக்களின் உள்ளத்தில் மிக உயர்ந்த இடத்தைப் பிடித்து விட்டார். பதவி மோக அரசியல் உலகில் விதிவிலக்காகத் திகழும் வி.பி.சிங் போன்ற அபூர்வ அரசியல் தலைவர்கள் வரிசையில் சோனியாவும் இடம்பிடித்து விட்டார்.

இந்தியாவின் பிரதமராக - சிறுபான்மை சீக்கிய சமூகத்தைச் சார்ந்த திரு. மன்மோகன் சிங்கை சோனியா தேர்வு செய்துள்ளது, நல்ல முடிவாகும். இந்திராவை - ஒரு சீக்கியர் சுட்டார் என்பதற்காக 3000 அப்பாவி சீக்கியர்கள், டெல்லியில் படுகொலை செய்யப்பட்டதும், அதை அன்று சில காங்கிரஸ் தலைவர்களே முன்னின்று நடத்தியதும், சோகமான வரலாறு. அந்தப் படுகொலைகளுக்கு, சீக்கியர் சமூகத்திடம் பொது மன்னிப்புக் கோரிவிட்டுத்தான், சோனியா, அரசியலுக்கே வந்தார். அந்த சீக்கிய சமூகத்தைச் சார்ந்தவர் இப்போது பிரதமராகியிருப்பது, மிகப் பெரும் சிறப்பு. ஆனாலும் மன்மோகன் சிங் அவர்களின் பொருளாதாரக் கொள்கைகள் மீதான சந்தேகங்கள் பலரையும் போல நமக்கும் உண்டு. அவர் மேற்கொள்ள இருக்கும் கொள்கை முடிவுகளைக் கொண்டுதான் நாம் இதற்கு விடை சொல்ல முடியும்.

மத்தியில் 68 பேர் கொண்ட அமைச்சரவை பதவி ஏற்றுள்ளது. காங்கிரஸ் தலைமையிலான முதல் கூட்டணி அமைச்சரவை இது. இந்த அமைச்சரவையில் தலித் மற்றும் முஸ்லீம்கள் நல்ல அளவில் இடம் பெற்றிருப்பது குறிப் பிடத்தக்க தனிச் சிறப்பாகும். தலித் சமூகத்தினருக்கு மூன்று காபினட் அமைச்சர் பதவிகளும், 7 முஸ்லீம் சமூகத்தினருக்கு காபினட் மற்றும் துணை அமைச்சர் பதவிகளும் வழங்கப்பட் டுள்ளன. இரயில்வே அமைச்சராக பொறுப்பேற்றுள்ள லல்லுபிரசாத் சாமான்ய மக்களின் பிரதிநிதியாகவே அத்துறையை நிர்வகித்துக் காட்டுவார் என்று உறுதியாக நம்புகிறோம். 91வது அரசியல் சட்டத் திருத்தத்தின்படி மொத்த உறுப்பினர்களில் அமைச்சர்களின் எண்ணிக்கை 15 சதவீதத்துக்கு மேல் போக முடியாது. அதன்படி இன்னும் 12 பேரை அமைச்சரவையில் சேர்க்கலாம் என்றாலும், எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முயன்றிருக்கிறார்கள்.

கூட்டணி அமைச்சரவையின் வெற்றி என்பது கூட்டுச் செயல்பாடுகளில் தங்கியுள்ளது. இதற்கு ஒத்த கொள்கை யும், விட்டுக் கொடுக்கும் மனப்போக்கும் அவசியம். அப்போது தான் நம்பிக்கை உருவாகும். ஆனாலும், நம்பிக்கையைக் குலைப்பது போல், தி.மு.க.வுக்கு உறுதி தரப்பட்ட இலாகாக்கள் மாற்றப்பட்டு- தி.மு.க. எதிர்ப்புக்குப் பிறகு மீண்டும் வழங்க முன்வந்துள்ளார்கள். இது விரும்பத்தக்க அணுகுமுறையல்ல. காங்கிரசில் - இத்தகைய 'சதி - குழிபறிப்பு' நபர்கள் கடுமையாக கண்டிக்கப்படா விட்டால், எதிர்காலத்தில் கூட்டணி அமைச்சரவை நெருக்கடிக்குள்ளாகி விடக்கூடும். மதச்சார்பற்ற ஆட்சி தொடர வேண்டும் என்று விரும்புகிறவர்களின் கவலையிது. திருமதி சோனியா இதைச் சரி செய்வார் என்று நம்புகிறோம்.

## மறக்க முடியவில்லையே!

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளால் அதிர்ச்சி அடைந்த தமிழ்நாட்டு முதலமைச்சர் பல அதிரடியான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அறிவிக்கப்பட்டுள்ள எதுவும் புதிய சலுகை இல்லை. பறிக்கப்பட் டவைகள், திருப்பியளிக்கப்பட்டுள்ள; சீர் குலைவு செயல்கள் சீர் செய்யப்பட்டுள்ளன.

ஆனாலும் சீர் செய்யவே முடியாதவை ஏராளம்.

- எரிக்கப்பட்ட தருமபுரி மாணவிகள்
- தற்கொலை செய்து கொண்ட அரசு ஊழியர்கள்
- ஆணவப் போக்கால் நெடுமாறன், வை.கோ போன்றோர் சிறையில் ஒன்றரை ஆண்டு காலம் அனுபவித்த உடல், உள்ள பாதிப்புகள்,
- முன்னாள் முதல்வர் கலைஞரை - வயதையும் பொருட்படுத்தாது நள்ளிரவில் தரதரவென இழுத்துச் சென்றமை... போன்ற ஏராளமான வைகள்;

இவை மாண்புமிகு முதல்வர் 'அம்மா'வே விரும்பினாலும் சீர் செய்ய முடியாத சீரழிவுகள். அவற்றை விடுவோம்...

ஆனால் மாண்புமிகு முதல்வர் கவனத்துக்கு வராமலோ, மாற்ற விரும்பாமலோ உள்ள சிலவற்றை எங்களால் மறக்க முடியவில்லை என்பதால் பட்டியல் இடுகிறோம்... முதல்வரின் கவனத்துக்கும், பரிகாரத்துக்கும்...

- உயர்த்தப்பட்ட கல்லூரி விண்ணப்பக் கட்டணம், கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம்.
- தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோ ருக்கு வேலை வாய்ப்புக்கு வழங்கப்பட் டிருந்து, ரத்து செய்யப்பட்டுள்ள வயது வரம்பு சலுகை.
- மூட நம்பிக்கையால் அகற்றப்பட்ட கண்ணகி சிலை.
- அரசியல் காழ்ப்புணர்ச்சியால் மூடப்பட்ட உழவர் சந்தைகள்
- நிதி நெருக்கடியென நிறுத்தப்பட்ட ஏழை மக்கள் திருமண உதவித் திட்டம்
- இலவச வேட்டி சேலை திட்டம்
- பிரபாகரனைக் கைது செய்ய வேண்டுமென நிறைவேற்றப்பட்ட அரசியல் தெளிவற்ற, மனிதாபிமானமற்ற, தேவையற்ற சட்டப் பேரவை தீர்மானம்.
- நக்கீரன் கோபாலைக் கைது செய்வதற்காகவே தமிழ்நாடு முழுவதுமே பிரகடனப்படுத்தப் பட்ட கலவரப்பகுதி அறிவிப்பு;
- கல்லூரி அனுமதியில் கிராமப்புற மாணவர் களுக்கு கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட் டிருந்த, உயர்நீதிமன்றத்தால் ரத்து செய்யப் பட்டு மேல் முறையீடு செய்யாமல் கிடப்பில் உள்ள 15 சதவீத ஒதுக்கீடு.
- 1971 கலைஞர் ஆட்சி முதல் வழங்கப்பட்டு வந்து, இப்போது கைவிடப்பட்ட, தாழ்த்தப் பட்ட பழங்குடி மக்களுக்கு பட்டப் படிப்புக்கு வழங்கப்பட்டிருந்த வட்டியில்லா கடன் வசதி.
- பணி நீக்கம் செய்யப்பட்ட சுமார் 10000 சாலை பணியாளர்கள், 14000 மக்கள் நலப்பணி யாளர்கள்
- திருச்சியில் திரிசூலம் வழங்கி இஸ்லாமியர், கிறித்துவர், மதச்சார்பின்மை பேசுவோருக்கு எதிராக என்று பேசிய தொகாடியாவை ஏதும் செய்யாமல், அடுத்த வாரம் அதே திருச்சியில் வெறும் தடிகளுடன் ஊர்வலம் போன தி.க. இளைஞரணித் தோழர் மீது போடப்பட் டுள்ள வழக்கு.
- படிக்க விரும்பும் ஏழை மாணவரை ஈர்க்க காமராசர் அறிவித்த மதிய உணவுத் திட்டத் துக்கு நேர் எதிராக - உழைக்க விரும்பாத சோம்பேறிகளுக்கு அன்னதானம் வழங்கிடும், அறிவியலுக்கு எதிரான ஆன்மீகப் பயிற்சி.
- சித்தர் பீட மரபுக்கும், ஆகமங்களுக்கும் எதிராக இருப்பதாக கூறப்பட்டாலும், காஞ்சி சங்கரனின் விருப்பப்படி பழனியில் வைக்கப் பட்டுள்ள புதிய அய்ம்பொன் முருகன் சிலை.
- தமிழில் வழிபடலாம் என அரசுஆணை இருப்பினும்கூட கரூரில் சமஸ்கிருதத்திலேயே குடமுழக்கு செய்ய வேண்டும் என கூறுமள வுக்கு காஞ்சிசங்கரனுக்கு வழங்கப்பட்டுள்ள வானளாவிய அதிகாரம்.
- மகாமகமானாலும், வேறு நிகழ்ச்சிகள் என்றாலும் காஞ்சி சங்கரனுக்கு அளிக்கப் படும் தேவையற்ற முக்கியத்துவம்
- 1500 ஆண்டுகால வரலாறுடைய மடத் தலைவர்களையும் தமிழர் சமயத் தலைவர் களையும் ஒதுக்கிவிட்டு காஞ்சிசங்கரனுக்கு அளிக்கப்பட்டுள்ள அறநிலையத் துறை ஆலோசகர்பதவி

என ஏராளம் எங்கள் தமிழ் மக்கள் நினைவில் நீங்காமல் இருக்கின்றனவே!

அவற்றையும் மாற்றுவீர்களா? அல்லது நடத்தப்பட்ட அதிரடி அறிவிப்பு நாடகமே உங்கள் அவப்பெயர்களை அகற்றிவிடும் என்று விட்டுவிடுவீர்களா? ❑

## கல்லூரி வளாகத்தில் ஆர்.எஸ்.எஸ். பயிற்சியா?

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக வளாகத்தில் அமைந்துள்ள அழகப்பா மெட்ரிகுலேசன் பள்ளி மைதானத்தில், கடந்த ஒரு வாரகாலமாக ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாம் நடந்து வருகிறது. காரைக்குடி பா.ஜ.க. பார்ப்பன சட்டமன்ற உறுப்பினர் எச். ராஜா இந்த முகாமை முன்னின்று நடத்தி வருகிறார் என்றும், இதில் 400 பேர் பயிற்சி பெறுகிறார்கள் என்றும் தகவல்கள் கிடைத்துள்ளன. இந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியராக இருக்கும் சாமிநாதன், ஒரு பார்ப்பனர். ராஜாவின் தந்தை அழகப்பா கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர்களின் நெருக்கத்தைப் பயன்படுத்தி, கல்வி நிறுவனம் ஒன்றில் நல்லிணக்கத்தைக் குலைக்கும் சங்பரிவார் பயிற்சிக்கு இடமளிக்கப்பட்டுள்ளது பயிற்சி நடக்கும் பகுதியில் உள்ள ஒரு மசூதியில், காலை 5 மணிக்கு தொழுகைக்கு 'பாங்கு' அறிவிக்கப்பட்டபோது, பயிற்சியிலிருந்த 20 ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் மசூதியின் முன் திரண்டு, தொழுகைக்கு அழைப்புவிடுப்பதை நிறுத்துமாறு தகராறு செய்துள்ளார்கள். தங்களிடம் நேரடியாக தகராறு செய்ய வேண்டாம் என்றும், புகார் கூற வேண்டுமானால், காவல் நிலையத்தில் தெரிவியுங்கள் என்றும் மசூதியில் இருந்தவர்கள் அமைதியாகக் கூறி கலவர முயற்சிகளைத் தவிர்த்துள்ளனர். அன்று மாலை மீண்டும் கை ஒலி பெருக்கியைப் பயன்படுத்தி, மசூதிக்கு எதிரே பேசியிருக்கிறார்கள்.

கல்வி வளாகங்களில் வன்முறையைத் தூண்டும் ஆர்.எஸ்.எஸ்.போன்ற அமைப்புகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு கடந்த காலங்களில் தடை விதிக்கப்பட்டிருந்தது; ஜெயலலிதா ஆட்சியில் - 'சங் பரிவாரங்கள்' முழு சுதந்திரத்துடன் செயல்பட்டு வருகின்றன என்பதற்கு இது மற்றொரு உதாரணம்.

## கழகத் தோழர்களுடன் சந்திப்பு - ஓர் வேண்டுகோள்!

தோழமை கொண்ட கழகத் தோழர் களுக்கு,

வணக்கம். 16.5.2004 அன்று மாலை 5 மணியளவில் கழகத்தின் ஆட்சிக் குழு கூட்டம் - சென்னையில் கழகத் தலை வர் தலைமையில் கூடியது. அப்போது கழக அமைப்புகளை மாற்றி அமைக்க வும், 'புரட்சி பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு சந்தாக்கள் சேர்க்கும் இயக்கத்தைத் தீவிரப்படுத்தவும், கழகத் தலைவர், பொதுச்செயலாளர் கள், களப்பணி ஒருங்கிணைப்பாளர் கள், மாவட்டம் முழுதும் சுற்றுப் பயணம் செய்ய முடிவு செய்யப்பட் டுள்ளது. கீழ்க்கண்ட விவரப்படி சுற்றுப் பயணம் திட்டமிடப்பட் டுள்ளது. கழகத் தோழர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறுகேட்டுக் கொள்கிறோம்.

மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள்

| | |
|---|---|
| 17.6.04 | சேலம், நாமக்கல் |
| 18.6.04 | திருப்பூர் |
| 19.6.04 | ஈரோடு |
| 25.6.04 | கோவை |
| 26.6.04 | பொள்ளாச்சி |
| 27.6.04 | மதுரை |
| 28.6.04 | திண்டுக்கல் |
| 2.7.04 | நாகை |
| 3.7.04 | தஞ்சை |
| 4.7.04 | திருச்சி, கரூர் |
| 5.7.04 | பெரம்பலூர் |
| 16.7.04 | தருமபுரி |
| 17.7.04 | வேலூர் |
| 18.7.04 | சென்னை |
| 19.7.04 | புதுவை |
| 24.7.04 | நெல்லை, தூத்துக்குடி |
| 25.7.04 | விருதுநகர் |
| 26.7.04 | இராமேசுவரம் |

- தலைமை நிலையம்

# பத்ரியின் குடும்பம் இனி கழகத்தின் குடும்பம்

(3 பக்கத் தொடர்ச்சி)

போது, பத்ரி என்னுடன் நடத்திய விவாதத்தின் போதுதான், அவர் எவ்வளவு பெரிய படிப்பாளி; எவ்வளவு பெரிய சிந்தனையாளர் என்பதை உணர்ந்தேன். இதே இராயப்பேட்டையில் பத்ரி முன்னின்று நடத்திய தூக்குத் தண்டனை எதிர்ப்பு மாநாட்டையும், அதற்குக் கூடிய மாபெரும் கூட்டத்தையும் மறக்கவே முடியாது. தூக்குத் தண்டனை எதிர்ப்பு இயக்கத்துக்கு பல லட்சம் நிதி திரட்டித் தந்து இன்னல் வந்த காலத்தில் துயர் துடைத்தவர் பத்ரி. தனக்கு என்று எதையும் சேர்த்துக்கொள்ளாமல், சமுதாயத்துக்காகவே உழைத்த, உண்மையான பெரியார் தொண்டன். இப் பகுதியில் முக்கிய வீதிக்கு - பத்ரியின் பெயரை மாநகராட்சி சூட்ட வேண்டும்" என்றார்.

பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் பேசுகையில், "பத்ரி அடக்கமானவர்; தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்ளாதவர்; கொடுத்த பணியைத் திறம்பட செய்து முடிப்பவர். அவரது இறுதி ஊர்வலத்துக்குத் திரண்ட கூட்டமே அவரது பெருமைக்கு அடையாளம். பெரியார் இயக்கத்துக்கு ஒரு சரியான தொண்டர் கிடைப்பது மிகவும் கடினம்; அதுவும் பத்ரியைப் போல் கிடைப்பது இன்னும் கடினம். ஒவ்வொருவரும் வேதனைப்படுகிறோம்; சொல்ல முடியாமல் தவிக்கிறோம்" என்றார்.

கழக ஆட்சிக் குழு உறுப்பினர் ஆனூர் ஜெகதீசன் பேசுகையில், "எனக்கு சிறு வயதுமுதல், உடலில் பல வியாதிகள் உண்டு. இன்று வரை அதை அனுபவித்து வருகிறேன். ஆனால் நான் மகிழ்ச்சியாக வாழ்வதற்குக் காரணம் இந்த இயக்கமும், அதன் கொள்கையும். அதிலும் பத்ரி போன்ற தோழர்களின் தோழமையும் தான். இங்கே தி.மு.க., அ.தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. என்று கட்சி வேறுபாடின்றி எல்லோருமே இங்கே கண்ணீர் விட்டு அழுதார்கள். பத்ரியின் மறைவு எங்கள் இயக்கத்தவர்களைவிட மற்றக் கட்சிக்காரர்களைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. இதுதான் பத்ரியின் சிறப்பு. பத்ரியின் உடல் சுடுகாடு போகும் போது - இறுதி வைர வந்த அந்த மாபெரும் கூட்டத்தைப் பார்த்து நான் நெகிழ்ந்து போனேன். உண்மையிலே இப்படிப்பட்ட ஒரு சாவுதான் எனக்கு வரவேண்டும். எங்களை இறுதி ஊர்வலத்துக்கு அனுப்பி வைக்க வேண்டியவன் அவன்; ஆனால் நாங்கள் அவனுக்கு இரங்கல் கூட்டம் நடத்த வேண்டி வந்து விட்டதே; பத்ரியின் மனைவி ஒரு அப்பாவிப் பெண்; பத்ரியின் இரண்டு சகோதரிகளுக்கும், பத்ரியின் குடும்பத்தைத் தாங்கி வந்த அவரது மாமா கிருஷ்ணமூர்த்திக்கும் யார் ஆறுதல் கூற முடியும்? கொள்கைக்காக - இயக்க நலனுக்காக - பிறர் வழக்குகளை எல்லாம் தன் மீது தூக்கிப் போட்டுக் கொண்டவன் பத்ரி. எந்தப் பகுதியிலும் இது போன்ற கொடுமைகளை அனுமதிக்காதீர்; பத்ரியின் குடும்பம் இனி நமது குடும்பம்" என்றார்.

பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில், "மரண தண்டனையை எதிர்த்து, நடந்த ஊர்வலத்தில் மக்களைத் திரட்டினார் பத்ரி. அந்த ஊர்வலத்தில் பங்கெடுத்து மரணதண்டனையை எதிர்த்து முழக்கமிட்டவர்களே, பத்ரிக்கு மரண தண்டனை தருகிறார்கள் என்றால், இவர்கள் முழக்கமிட்டது; பேசியது எல்லாம் பொய்யா? கபடமா?" இராயப்பேட்டையை கழகக் கோட்டையாக்கி - இளைஞர்களை எல்லாம் நல்வழிப்படுத்தி, கொள்கை வாழ்க்கைக்குக் கொண்டு வந்தார். தவறான பாதையில் சென்றவர்களைக் கண்டிப்புடன் திருத்தினார்; பத்ரியின் அணுகுமுறை அவருக்கு மரியாதையைக் கொண்டு வந்ததை சகிக்க முடியாத ஒரு கூட்டம் சமூக விரோத வன்முறைக் கும்பலை ஊக்குவித்து, அவரது வாழ்க்கையையே முடித்துவிட்டது - என்றார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தனது உரையில் குறிப்பிட்டதாவது: "பெரியார் இயக்கத்தை இப்பகுதியில் மனித நேயத்துடன் முன்னெடுத்துச் செயல்பட்டவர் பத்ரி. மிகச் சிறந்த பெரியாரியல்வாதியான அவர், அனைவரிடமும் நெகிழ்ச்சியுடன் பழகி, இப் பகுதியைக் கழகத்தின் கோட்டையாக்கினார். அவர் செயல் வீரர் மட்டுமல்ல; சிந்தனையாளர். சாதி ஒழிப்புப் போராட்டத்தில் சிறை சென்று விடுதலையானவுடன் மரணமடைந்த வீரச் சிறுவன், மஜீத் பெயரைத் தனது மகனுக்கு சூட்டியிருந்தார். தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமைக்காக பாடுபட்டார். இப் பகுதிகளில் அடிக்கும் சுவரொட்டிகளில் கட்டாயம் டாக்டர் அம்பேத்கர் படம் இடம் பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார். தலித் மக்கள் பகுதிக்கு ஆசி வழங்க சங்கராச்சாரி வருகிறார் என்றவுடன், ஒரே நாளில் அதை எதிர்த்து மக்களைத் திரட்டிப்போராடிய கொள்கை வீரர்" என்று குறிப்பிட்டார்.

கழகத் தோழர்கள் சக்திவேல் (ஒட்டன்சத்திரம்), வேடியப்பன் (அரூர்), உமாபதி (அ.இ.அ.தி.மு.க.), ஆட்டோ ஓட்டுனர் கிருஷ்ணமூர்த்தி, பத்மநாபன் (ம.தி.மு.க.), கழகத் தோழர் குமரன், தென்னரசு (மக்கள் உரிமைக் கூட்டமைப்பு) ஆகியோரும் இரங்கல் உரையாற்றினர்.

ஆட்டோ ஓட்டுனர் கழகத்தின் சார்பில் தோழர் சோமு இரங்கல் கவிதை படித்தார். பத்ரியின் படத்தோடு பகுதி முழுதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. சட்டமன்ற உறுப்பினர் உசேன், தமிழ்த் தேசப் பொதுவுடைமை கட்சி பொதுச்செயலாளர் மணியரசன், மக்கள் உரிமைக் கூட்டமைப்பு அமைப்பாளர் பழ.நெடுமாறன் ஆகியோர் இரங்கல் செய்திகளை அனுப்பியிருந்தனர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கழகத்தினர் கலந்து கொண்டனர். ❑

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊரை விட்டு ஓடிய பலர் பக்கத்து கிராமங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். (செரயாம்பாளையம், விளாங்குறிச்சி, ஆண்டக்காபாளையம், வெள்ளானப்பட்டி) இக்கிராமங்களில் உள்ள உயர் சாதியினரால் தலித் மக்கள் மிரட்டப்பட்டு தஞ்சம் புகுந்தவர்கள் விரட்டப்பட்டுள்ளனர். இக்கலவர நிலை இன்னும் முழுமையாக சீர்படுத்தப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2 நாட்களுக்கு மட்டும் உணவு வழங்கப்பட்டுள்ளது. இப்போது இருக்கும் நிலையில் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்க வேண்டியிருக்கிறது. அரசு கொடுத்துள்ள நிவாரணத் தொகை உணவு தேவைக்கு போதுமானது அல்ல. பொருட்களை அவர்களாகவே வாங்குவதற்கான சூழ்நிலை இல்லை. பேருந்து வசதி தலித் பகுதிக்கு செய்து தர வேண்டும். வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்டும் உள்ளதால் மின்சாரம் தலித் பகுதியில் முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது. உடனடியாக இதை சீர் செய்து தலித் மக்களின் கலவர சூழ்நிலை அச்சத்தைப் போக்க வேண்டும்.

காளப்பட்டிக்கு காவல்நிலையம் கோவில்பாளையத்தில் உள்ளது. இது சுமார் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. அப்பகுதி ஆதிக்க சக்திகள் பகுதியாக இருப்பதால் தலித் மக்கள் சென்று புகார் செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. ஆகையால் காளப்பட்டியில் புறக் காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். மேலும் காவல் நிலையத்தில் உள்ள அதிகாரிகள், காவலர்கள் அனைவரும் ஆதிக்க சாதியினராக இருப்பதால் பெரும்பாலோர் ஆதிக்க சாதியினருக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளார்கள். இதனைப் போக்கி தலித் அதிகாரிகள் சிலரை காவல் நிலையத்தில் நியமித்து இந்நிலையை சமன்படுத்த வேண்டும். மேலும் இரு தரப்பினரையும் வைத்து பஞ்சாயத்து பேசுவதைத் தவிர்க்க வேண்டும். யார் புகார் தருகிறார்களோ, அப்புகாரை உடனடியாக பதிவு செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கவும் இக்குழு வலியுறுத்துகிறது.

கலவரத்தில் ஈடுபட்ட ஆதிக்க சாதியினரில் 13 பேர் மீது மட்டும் வழக்கு போடப்பட்டுள்ளது. ஆனால் சம்பவத்தில் பையா கவுண்டர் மற்றும் அவரது தலைமையில் 200க்கும் மேற்பட்டவர் கலந்துள்ளனர். ஆகவே இதற்கு காரணமாக இருந்த பையா கவுண்டர் மீதும், தாக்குதலில் ஈடுபட்ட ஆதிக்க சாதியினர் மீதும், வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் கைது செய்து கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மனித உரிமைகள் பாதுகாப்பு வழக்கறிஞர் குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது. ❑

# ஒட்டன் சத்திரத்தில் கழகக் கூட்டம்

ஒட்டன் சத்திரத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக கடந்த 5.5.2004-ம் தேதி அன்று காலை சுமார் 7 மணியளவில் 50 கழகத் தோழர்கள் 25 இரு சக்கர வண்டிகளில் கழகத்தின் கொடிகளை கட்டிக் கொண்டு பாராளுமன்ற தேர்தலில் கழகத்தின் நிலைப்பாடு மற்றும் யார் அந்நியர்? என்று அச்சடிக்கப்பட்ட துண்டறிக்கைகளை கிராமங்கள் தோறும் விநியோகித்தனர். அன்று மாலை சுமார் 6 மணியளவில் ஒட்டன்சத்திரம் நகர பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள கழக வழக்கறிஞர்கள் சட்ட அலுவலகத்தில் செய்தியாளர்கள் கழகத் தலைவரை நேர்காணல் கண்டனர். பின்னர் ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையம் முன்பு மாவட்டத் தலைவர் தோழர் கா. சக்திவேல் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் க.சு.ரவணா, பழனி ரஞ்சித் குமார், கழக வழக்கறிஞர் க.செயராசு, எம்.ஏ., பி.எல். ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர். முன்னதாக கழகத் தோழர் பெரியார் நம்பியின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சிநடந்தது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் துரை. சம்பத், பழனி தோழர் குருநாதன் கலந்து கொண்டு உரையாற்றினர். கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி 2 மணி நேரம் எழுச்சியுரை ஆற்றினார். தலைவரின் உரை இயக்கத்தின் வளர்ச்சிக்கு வலு சேர்த்ததோடு மக்கள் விரோத பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணியின் இந்துத்துவா முகத்திரையக் கிழித்தது. கூட்டத்தில் செம்பட்டி, வலையப்பட்டி, சின்னாளப்பட்டி, பழனி, திண்டுக்கல் பகுதியை சேர்ந்த கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் கழக வழக்கறிஞர் தோழர் வெ. பெருமாள், எம்.ஏ., பி.எட்., பி.எல்., அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது. தலைவர் உரையை ஆயிரக்கணக்கான மக்கள் கேட்டு தெளிவு பெற்றனர்.

# பேராசிரியர் பெரியார் தாசன் இல்லத் திருமணம்

பேராசிரியர் பெரியார் தாசன் - திருமதி வசந்தா ஆகியோரது மகன் **வ.சி. வளவன்-மா.து.வாலண்டீனா** (திருவாளர்கள் துரை-மகேசுவரியின் மகள்) ஆகியோரது வாழ்க்கை ஒப்பந்த விழா 16.5.2004 அன்று, ஆரணியில் சிறப்புடன் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மற்றும் ஏராளமான பெரியாரியலாளர்களும், கழகக் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர். மணவிழாவின் முதல் நாள் சுழலும் சொற்போர் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து மே 19 மாலை சென்னை மதுர வாயல் - பாக்கியலட்சுமி திருமண மண்டபத்தில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. வேல் பிரகாசு குழுவினரின் குழல் இசை நிகழ்ச்சி நடந்தது. ஏராளமான நண்பர்கள் வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்திருந்து சிறப்பித்தனர். பெரியார் குடும்பத்து மணமக்களை 'புரட்சி பெரியார் முழக்கம்' வாழ்த்தி மகிழ்கிறது.

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், எண்.29,
பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை - 600 041.
தொலைபேசி: 2451 2857, 2847 4830

Tamil Weekly Registered with the Registrar of Newspapers for India No.TNTAM/2002/7776
Registration No. TN/PMG(CCR)/244/03-05 WPP No.547/03-05
Posted at : Pathrika Channel, Egmore RMS Posted On : 28th May 2004

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.